ஏப்ரல் 2008

# சோதிடகேசரி

மாத இதழ்

விலை: ரூபா 50/-

**ஆச்சரியங்கள் நிறைந்த சீன தேசத்து சோதிடம்!!**

**பத்துப் பொருத்தம் என்றால் என்ன?**



**இலவசம்**



கேட்ட வரம் அருளும் ஸ்ரீகற்பக விநாயகரின் பூஜையறைப் படம்

**ஏழரை சனி நல்லதும் செய்யும்!**

**தமிழகம் மற்றும் கேரள சோதிடர்களின் கட்டுரைகள்**

**இலவசம்**



உலகப் பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மனின் பூஜிக்கப்பட்ட தாழம்பூ குங்குமம்

## தமிழ்ப் புத்தாண்டு ராசி பலன் 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் நினைத்ததை அடைய வேண்டுமா?



- 'அதிர்ஷ்டம்' என்பது வாழ்க்கையில் திடீரென தோன்றும் மின்னல். அது மின்னும் போதே, அதைப் பிடித்து மின்சாரமாக்கிக் கொள்ளாவிட்டால் அடுத்த மின்னல் வரை காத்திருக்க வேண்டியதுதான்.
- எண்களும், எழுத்துக்களும் எப்படி அனைவருக்கும் பொதுவானதோ அதேபோல நியூமராலஜியும், நேமாலஜியும் அனைத்து மதத்தினருக்கும் பொதுவானதேயாகும்.
- ஒரு மனிதனின் வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக இருப்பது அவரது 'பெயரும் கையெழுத்துமே' ஆகும்.
- ஒவ்வொரு எழுத்துக்கும் ஒருவகை சக்தி இருக்கிறது. எழுத்துக்கள் சரியான விகிதத்தில் சேரும்போது அது **அதிர்ஷ்டப்பெயராக** மாறுகிறது.
- அதிஷ்டப்பெயர் என்பது ஏற்கனவே உள்ள பெயரில் அதிர்ஷ்ட எழுத்துக்களை சேர்த்து மிகச்சிறிய திருத்தம் செய்வதே ஆகும். விருப்பம் உள்ளவர்கள் பெயரை முழுமையாக அதிர்ஷ்டப் பெயராக மாற்றிக்கொள்ளலாம்.
- ஒருவரது பெயரில் **"THI, DHI, DI, DEE, DHEE, DRA, DAN, RAN, KAN, GAN, GAM, RAM, KUM, KIL, WAR, LAS, GO, MO, THU, GOMA, THEE, MAD, MED"** போன்ற உச்சரிப்பு உள்ள எழுத்துக்கள் வரும் போது குடும்ப வாழ்வில் பலசிக்கல்களை, குழப்பங்களை, பிரச்சினைகளை உண்டு பண்ணும்.

உதாரணமாக **A.P.RAMAN** இவரின் பெயரெண் 4 ஆகும்

**M. RATHI** இவர்களின் பெயரெண் 8 ஆகும்.

- பெயரெண் **2,4,7,8** வரும் எண்களை கொண்ட பெயர்கள் எல்லாம் துரதிர்ஷ்ட வகையை சார்ந்தது.
- **8,12,13,17,18,22,26,28** ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் நன்கு ஆராய்ந்து பெயரமைக்க வேண்டும். இல்லையேல் பல இன்னல்கள் ஏற்படும்.
- இன்றைக்கு பிரபலமாக உள்ள சினிமா நட்சத்திரங்கள் "ரஜினி, கமல், **விஜயகாந்த்**, விஜய், அஜித், சினேகா, திரிசா, மாதவன், வடிவேலு இன்றைய சிலம்பரசன், தனுஷ்" கூட பெயர் சரியாக அமைந்ததால் பிரபலமானார்கள்.
- ஒருவரின் குடும்பபிரச்சினைகளுக்கு மூலகாரணம் அவரின் திருமண நாளே ஆகும். தேதி எண், கூட்டு எண் **2,4,5,7,8** வரும் நாட்களில் கண்டிப்பாக திருமணம் செய்யக்கூடாது.
- உங்கள் தொழில் ஸ்தாபனத்திற்கு பெயரமைக்கும்போது உங்கள் பிறந்ததேதி, கூட்டு எண், பெயரெண்ணிற்கு ஒத்து வரும் எண்ணில் **"அதிர்ஷ்டப்பெயர்"** சூட்டுங்கள் அமோக வெற்றி பெறுவீர்கள்.
- திருமணத்தடைகள் நீங்க **"அதிர்ஷ்டப்பெயர்"** சூட்டுங்கள்.
- பெயரை நல்ல உயிர் ஆதிக்க எண்ணில் வைத்துக்கொண்டால் நல்ல **"புத்திர பாக்கியம்"** கிட்டும்.
- கணவன் மனைவி இருவருக்கும் **"வசியப்பெயர்கள்"** இருந்தால் குடும்ப வாழ்வு குதூகலத்துடன் இருக்கும்.
- நீங்கள் கட்டிய புதுமனைக்கு **"அதிர்ஷ்டப்பெயர்"** சூட்டுங்கள் குடும்பமே சந்தோஷப்படும்.
- அரசியலில் வெற்றிபெற **"அதிர்ஷ்டப்பெயர்"** சூட்டுங்கள்.
- உங்கள் குழந்தைகளுக்கு **"அதிர்ஷ்டப்பெயர்"** சூட்டுவதால் இளமையிலிருந்தே அனைத்து செல்வங்களையும் அடையச்செய்யும்.
- ஒருவருடைய பெயர் **"கோபுராம்சத்துடன் அதிர்ஷ்டப்பெயராக"** இருந்தால் மட்டுமே அவர் வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றி பெறமுடியும்.
- தொழில் முடக்கம், வியாபாமந்தம், உத்தியோகத்தில் இடையூறு, கணவன் மனைவி ஒற்றுமையில்லாமை, தாம்பத்யக் கோளாறு, மனபயம், திருமணத்தடை, தீராத நோய்கள், குழந்தைபாக்கியம் இல்லாமை, முன்னேற்றத்தடை, கடன் பிரச்சினை, வெளியில் சொல்ல முடியாத பிரச்சினைகள், விரக்தி நிலை, புகழ் இல்லாமை, போட்டி பொறாமை காதலில் வெற்றி கிட்டாமை போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் "அதிர்ஷ்டப்பெயர்" மூலம் மட்டுமே உடனடி தீர்வு காண முடியும்.
- உங்கள் பிரச்சினைகள் நிரந்தரமானதில்லை. உங்களது பிரச்சினைகளுக்கு **24** மணி நேரத்தில் நிரந்தர தீர்வு கண்டு உங்கள் தடைகள் அனைத்தையும் உடைத்தெறியுங்கள்.
- உங்கள் **"பொன்னான நேரத்தை"** இனியும் வீணாக்காதீர்கள்.

**வாழ்க்கையில் வெற்றிபெற சற்றே சிந்தியுங்கள்**

**"பெயரியல் பேரரசன்" A.M.ஜெயபிரபாகரை வந்து சந்தியுங்கள்**



முன்பதிவு செய்துவிட்டு வரவும். ரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

"பெயரியல் பேரரசன்"

**A.M.ஜெயபிரபாகர் M.A.,M.Phil.**

(அதிர்ஷ்ட நியூமராலஜிஸ்ட்)

8-B, வினாயகர் கோவில் தெரு, ராஜ்குமார் ஆஸ்பிட்டல் அருகில், கிருஷ்ணன் கோவில், நாகர்கோவில்-629 001

போன் : +91 - 4652 - 277717

செல் : +91 - 98429 16975 / 99655 16975 / 94437 27717

Email : jayaprabhakar1972@gmail.com

**வெற்றி என்பது முயற்சி செய்பவருக்கு மட்டுமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Publisher : **Express Newspapers (Ceylon) Limited**
185, Grandpass Road, Colombo - 14.
Tel: +94-115-322700 (30 Lines)
Fax: +94-112-439987
website: www.virakesari.lk

Content Providers : **Inter Focus Service (P) Ltd., India**

Editor : K. Chandramohan

Associate editor : S. Saravanan

Feature writer : C. Suganthan

Designing & Layout : J.B. Ramkumar & Team

Astrologers panel : Gayathiri Balasubramanian
S. Krishnan (Kannan Potti)
G. Sundararajan
Yogi Sri Ramanandha Guru
C. Sivaprakasham
M.V. Subburaman

Advertising:

Srilanka : Business Development Manager,
Express Newspapers (Ceylon) Limited,
No. 185, Grandpass Road,
Colombo - 14.
Tel: +94-11-2439985, 2323841
Cell: 777-381802
email: kesari24@virakesari.lk

India : Marketing Manager,
163, Ramasamy Street, III Floor,
Gopalapuram, Chennai - 86.
Tel: +91-44-28111420
Fax: +91-44-28111421
Cell: 94444 50037 (Chennai)
Cell: 94447 86116 (Madurai)
email: jothidakesari@gmail.com

Circulation & Subscription : Circulation Manager,
Express Newspapers (Ceylon) Limited,
No. 185, Grandpass Road,
Colombo - 14. Tel: +94-11-4614371

Copy right reserved : ENCL, Colombo

Printed in Sri Lanka

# சோதிடகேசரி
# JOTHIDA KESARI

*Astrological Magazine - Tamil*

மலர்: 1 இதழ்: 1

## ஆசிரியர் பகுதி...

குகைகளில் குடியிருந்த மனிதன், ஆற்றோரங்களில் வீடு கட்டி, பயிர் செய்து, குடும்பமாக வாழத்தொடங்கினான். பசியாறப்பச்சை உணவுகளும், மாமிசமும் உண்டவன் இன்று அழகிய சமையல் கூடங்களில், அறுசுவை உணவு சமைத்து, அழகழகான பாத்திரங்களில் பரிமாறத் தொடங்கிவிட்டான்.

ஆதியிலே இரும்பிலிருந்து தங்கம் செய்யப்போகிறேன் என்று தனது விஞ்ஞான ஆய்வைத் தொடங்கியவன், இன்று அணுவைப் பிளந்து அதன் சக்தியைப் பயன்படுத்துகிறான்.

பறவையைப் பார்த்து பறக்க ஆசைப்பட்டவன், விமானம் படைத்ததோடு நில்லாமல், வான் எல்லைகளைக் கடந்து, விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கிறான்.

மனிதனின் தேடல் எல்லையில்லாமல் விரிந்து கொண்டே செல்கிறது. ஆனால், எதை எதையோ கண்டுபிடித்தவனுக்கு, நாளை, ஏன் அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியாமல் தவிக்கிறான்.

இயற்கைச் சீற்றங்களும், போர்களும், குடும்ப உறவுகளில் ஏற்பட்ட சிக்கல்களும், அதனால் உண்டான பயங்களும் அவனைத் தொடர்ந்து துன்பத்துக்கு உள்ளாக்குகின்றன.

அந்த வேளையில்தான், அவனே கண்டு வளர்த்த ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் ஒன்றான சோதிடக்கலை அவன் உதவிக்கு வருகிறது.

ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு இனமும் எதிர்காலத்தைக் கணிக்க, பல சோதிட முறைகளைக் கையாண்டு வந்திருக்கிறது.

ஏதாவது ஒரு வழியில், நடக்கப்போவதைப் பற்றி ஒரு சிறு குறிப்புக் கிடைத்தால் கூட, எவ்வளவு உபயோகமாயிருக்கும்!

மனிதனின் இந்தத் தவிப்பை உணர்ந்து, பல தேசத்து வானவியல் அறிஞர்களும், ஞானிகளும், சித்தர்களும், சோதிட வல்லுனர்களும் தேடிக்கண்டுபிடித்து, ஆய்வு செய்து, போற்றி வளர்த்த கலை இது.

போராட்டங்கள் நிறைந்த மனித வாழ்வில் அமைதி கிட்ட, சோதிடக்கலை வல்லுனர்கள் நல்வழி காட்டுவார்கள் என்று நம்புவோம்.

பாரம்பரியமிக்க வீரகேசரி இதழின் வெளியீடான ''சோதிட கேசரி'' மாத இதழ், சோதிடக் கலை வித்தகர்கள் பலர் கொண்ட குழு ஒன்றின் துணையுடன், வாசகர்களின் வாழ்வில் துணை நிற்கும்.

அன்புடன்,

**சந்திரமோகன்**

(ஆசிரியர், சோதிட கேசரி)

வீரகேசரி VIRAKESARI
வீரகேசரி
Daily மெட்ரோ News
மித்திரன்
Genius
HOME Builder
AUTO MAG
Virakesari online www.virakesari.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்புள்ள சோதிட கேசரி வாசகர்களுக்கு, வணக்கம்.**

**பாரம்பரியமிக்க வீரகேசரி பத்திரிகையின் வெளியீடாக வருகிறது, "சோதிட கேசரி" வீரகேசரி வாசகர்களின் எதிர்பார்ப்பு எத்தகையதாக இருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எல்லா விதக் கலை வடிவங்களிலும் வித்தகர்கள் யார், போலிகள் யார் என்று பிரித்தறிவது ஒரு கடினமான பணியாகவே உள்ளது. மிகுந்த எச்சரிக்கையுடனேயே பல சோதிடர்களைச் சந்தித்தோம். இந்த இதழின் "சோதிடர் குழுவில்" பங்கேற்கப் போகும் சோதிடர்கள் யார் யார், பிரதான சோதிடர் என்ற இடத்தை அலங்கரிக்கப்போபவர் யார் என்ற எங்களது தேடல் மிக நீண்டது. தேடலின் முடிவில் தேர்ந்தெடுக்கப் பட்டவர் புதுச்சேரியைச் சேர்ந்த திருமதி காயத்ரி பாலசுப்ரமணியன். அவருடன் மேலும் நான்கு சோதிடர்கள் நம்முடன் இணைந்து பணியாற்றியுள்ளனர்.**

**இதோ, அவர்களைச் அறிமுகப்படுத்துகிறோம்.** **-- இணை ஆசிரியர்.**

# சோதிட நிபுணர் குழு

தென் தமிழகத்தின் கோவில்பட்டி நகர் தந்த மாமனிதர் தெய்வக்ஞ ரத்னா எஸ். வைத்யநாதன். இந்திய விமானப்படையில் ராடர் எஞ்சினியராகப் பணிபுரிந்தவர். காஞ்சிப்பெரியவரின் ஆலோசனையின் பேரில், அவரது அருளாசியுடன் சோதிடத்துக்கு வந்தவர். மகா பெரியவருக்கு சமஸ்கிருதம் கற்றுத்தந்த பண்டிதர் சுப்பையா தீட்சிதரின் வழிவந்தவர்.

உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று சோதிடம் குறித்து உரைநிகழ்த்தியவர். திரு.வைத்தியநாதன் பல சோதிடப் புத்தகங்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி வெளியிட்டவர். முந்நூறுக்கும் மேற்பட்டவர்களை சோதிடர்களாக்கிப் பயிற்சியும் கொடுத்துள்ளார்.

பத்தாண்டுகாலம், சோதிடக்கடல் எனும் மாத இதழ் வெளியிட்ட திரு. வைத்தியநாதனின் பட்டறையில், பட்டை தீட்டப்பட்டு வந்தவர் அவரது மாணவியும், மகளுமான காயத்ரி. திருமதி காயத்ரி சோதிடக்கலை வித்தகரானதோடு நில்லாமல், இதழியல் துறையிலும் பட்டம் பெற்றவர். பல வகையான சோதிடங்களிலும் ஆழ்ந்த அறிவு கொண்டவர். குறிப்பாக, மருத்துவ சோதிடத்தில் சிறப்பான விளக்கங்கள் அளிக்கக் கூடியவர் திருமதி காயத்ரி. பல தலைமுறையாய் அவர்தம் முன்னோர்கள் பெற்ற அறிவை மூலதனமாக்கி பலரது நல்வாழ்வுக்கு வழிகாட்டியவர். இவர் எழுதிய கட்டுரைகளும், பலன்களும் பல புத்தகங்களில் வெளியாகியுள்ளன.



**காயத்ரி பாலசுப்ரமணியன்**
8, இரண்டாவது குறுக்குத் தெரு,
மாரியம்மன் நகர், காராமணிக்குப்பம்,
புதுச்சேரி - 605 004, இந்தியா.
போன்: 0091+04132202077
e-mail: gayabala_astro@yahoo.co.in





**சி. கிருஷ்ணன்**
(கண்ணன் போத்தி)
(கேரள பிரஸ்ன ஆருட சோதிடர்)
60, பொட்டுரணி தெரு,
பழங்காநத்தம், மதுரை



**யோகி ஸ்ரீ இராமனந்தா குரு**
விழுப்புரம் மெயின் ரோடு,
காடகனூர் அஞ்சல் - 605 755
திருக்கோவிலூர் T.K.
விழுப்புரம் Dt.,



**ஜி. சுந்தரராஜன்**
வேணுகோபால சுவாமி கோவில்,
பாலையம்பட்டி,
அருப்புக்கோட்டை



**சி. சிவப்பிரகாசம்**
M.Tech., M.E., Dip. T.T, D.Ast.,
மதுரை,
தமிழ்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள் எங்களுடன்...

# ஈ.ரோ டிராவல்ஸின்
## கோடை கால குளு குளு சுற்றுலாக்கள்


**முக்திநாத், போக்ரா, காட்மாண்டு** - 11 நாட்கள்
புறப்படும் மாதம் : மே, ஜூன், செப்டம்பர், அக்டோபர் (ஹெலிகாப்டர் உடனடி முன் பதிவு)

**சிம்லா, குலு, மணாலி, அமிர்தசரஸ், டெல்லி, ஆக்ரா** - 13 நாட்கள்
புறப்படும் மாதம் : ஏப்ரல், மே, ஜூன் (உடனடி முன் பதிவு மட்டுமே)


**பூரி, கொல்கத்தா, கயா, காசி / ஹரித்துவார், டெல்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர்** 9/17 நாட்கள் (மாதந்தோறும்)

**அந்தமான் தீவுகள்** - 5, 8, 10 நாட்கள் (விமானம் & கப்பல்) வாரந்தோறும்


**கேதார்நாத், பத்ரிநாத், டெல்லி/கங்கோத்ரி, யமுனோத்ரி/காசி**
11 / 16 / 17 நாட்கள். புறப்படும் மாதம் : மே, ஜூன், ஜூலை, செப்டம்பர்.

**சீரடி, சனிசிங்கனாப்பூர், நாசிக், மும்பை, பண்டரிபுரம்**
9 நாட்கள் புறப்படும் மாதம் : ஏப்ரல், மே, ஜூன், அக்டோபர், நவம்பர்.


**திருக்கயிலாயம், மானசரோவர்** - 18 நாட்க
(இரு வழி விமானம்) புறப்படும் மாதம் : ஜூன், ஜூலை.

**ஜம்மு காஷ்மீர், குல்மார்க், சோன்மார்க், வைஷ்ணவி, டல்ஹெளசி**
15 நாட்கள் புறப்படும் மாதம் : ஏப்ரல், ஜூன், ஜூலை, அக்டோபர்


**அமர்நாத், வைஷ்ணவி தேவி** - 8 / 12 / 17 நாட்கள்
புறப்படும் மாதம் : ஜூன், ஜூலை (ஹெலிகாப்டர் உடனடி முன் பதிவு)

**ஜெய்ப்பூர், அஜ்மீர், உதய்ப்பூர், மவுண்ட் அபு, ஜோத்பூர், ஜெய்சல்மீர், டெல்லி**
14 நாட்கள் புறப்படும் மாதம் : ஏப்ரல், மே, ஜூன், அக்டோபர், (குரூப் மட்டும்)

**கேங்டாக், டார்ஜிலிங், கொல்கத்தா,** - 11 நாட்கள் புறப்படும் மாதம் : ஏப்ரல், மே, ஜூன், அக்டோபர்.

**சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து** - 6 / 9 நாட்கள் (மாதந்தோறும்)

**நவசோதிர்லிங்கம் / 12 சோதிர்லிங்கங்கள்**
19 / 25 நாட்கள் புறப்படும் மாதம் ; மே, ஜூன், அக்டோபர்.

மாதந்தோறும் →
**நவபிருந்தாவனம், ஸ்ரீ சைலம், அகோபிலம்** - 7 நாட்கள்
**ஹைதராபாத்** - 5 நாட்கள் , **கோவா** - 5 நாட்கள்
**தர்மஸ்தலம், மூகாம்பிகை, சிருங்கேரி** - 4 நாட்கள்

**சுற்றுலாவிற்கான கட்டணம் தவிர வேறு எவ்வித செலவும் செய்ய வேண்டியதில்லை.**
**ஒவ்வொரு சுற்றுலாவிற்கும் 30 நபர்களை மட்டுமே அழைத்துச் செல்கிறோம்.**

ரயில் கட்டணம், புஷ் பேக் சீட் சொகுசு பஸ் கட்டணம், தினசரி மூன்று வேளை உயர்தர அறுசுவை சைவ உணவு, காலை காபி, தங்கும் வசதி (டீலக்ஸ் தனி அறையில் 4 நபர்கள்) படகு, நுழைவுக் கட்டணம் உட்பட அனைத்து செலவுகளுடன் உங்களை மன நிறைவுடன் அழைத்துச் சென்று வருகின்றோம்.

# ஈ.ரோ டிராவல்ஸ்
43, மஞ்சேரி காம்ப்ளக்ஸ், 2-வது தளம், ராயல் தியேட்டர் எதிர் ரோடு, ஈரோடு-11.
**போன் : +91 - 424 - 2221153 செல் : +91 98428 27775.** E-mail : erotravels@yahoo.com
153, MTP ரோடு, சொக்கலிங்கேஸ்வரர் கோவில் எதிரில், பெரியநாய்க்கன்பாளையம், கோவை-20. +91 98427 27775
14 / 28, விநாயகபுரம் 2-வது வீதி (ஐஸ்வர்யா மஹால் அருகில்) 100 அடி ரோடு அரும்பாக்கம், சென்னை - 106. +91 94433 47704 / 94425 27775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

## சர்வதாரி ஆண்டு

## தமிழ்ப்புத்தாண்டு பலன்

மேஷம் பக்கம் – 10
ரிஷபம் பக்கம் – 14
மிதுனம் பக்கம் – 17
கடகம் பக்கம் – 20
சிம்மம் பக்கம் – 24
கன்னி பக்கம் – 27
துலாம் பக்கம் – 34
விருச்சிகம் பக்கம் – 38
தனுசு பக்கம் – 41
மகரம் பக்கம் – 44
கும்பம் பக்கம் – 47
மீனம் பக்கம் – 50


சோதிட முறைகள் பலவிதம்
பக்கம் 12, 16, 19




முழுப்பக்கப் படங்கள்


கேரள ஆருட முறைகள்
பக்கம் 30

நன்மையும் செய்வார் சனி பகவான்
பக்கம் 55


சீன ஜோதிடம்
பக்கம் 59, 60, 61

ஸ்ரீ ராம மந்திரம் ஓர் உண்மைக் கதை
பக்கம் 23, 26, 29, 37


பத்துப் பொருத்தம்
பக்கம் 56, 57

துளசி மகிமை 40
நவக்கிரக ஸ்தோத்திரம் 13
தமிழ் ஆண்டுகள் 43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பொருளும் நல்வாழ்வும் நலமும் தருவார்,
# நினைத்ததை அருளும் கற்பக விநாயகர்!

தமிழ்நாட்டில் மதுரைக்கு அருகில், சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி நகரிலிருந்து 12 கி.மீ. தூரத்திலுள்ளது பிள்ளையார்பட்டி. இங்குள்ள ஆலயம் மிகவும் பழமையானது. ஆயிரத்து அறுநூறு ஆண்டு கால சரித்திரம் கொண்டது. இது ஒரு குடவறைக்கோவில். இங்குள்ள சிவலிங்கமும், விநாயகர் சிலையும் பாறையில் குடைந்து செய்யப்பட்டவை. நான்காம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, சிற்பக்கலை வல்லுனர்களான பல்லவ மன்னர்களின் ஆதரவுடன் பெருமைப்படுத்தப்பட்டது

இரண்டு கைகள் மட்டுமே கொண்ட, ஆதித்தமிழரின் பிள்ளையார் உருவத்தை இங்கு மட்டுமே காணமுடியும். காமதேனு பசு பால் சுறந்து பசுபதிலிங்கத்துக்கு அபிஷேகம் செய்த அற்புதமும் இந்தத் திருத்தலத்தில் தான் நடந்தது. அருள் கொழிக்கும் ஆலயமாகவும், செல்வச் செழிப்பு மிக்க திருக்கோயிலாகவும் செழித்தோங்கி நிற்கிறது.

உலக மக்களின் நன்மைக் காகவே, சிவலிங்கத்தைக் கையிலேந்தி, தவக்கோலத்தில் இருக்கிறார் பிள்ளையார்பட்டி விநாயகர். ஆயுதங்கள் எதுவும் இல்லாமல், அர்த்த பத்மாசனத்தில், இடக்கையை இடையில் தாங்கி, பக்தர்களுக்கு அபய தரிசனம் அளிக்கிறார் வலம்புரி விநாயகர்.

ஆறடி உயரத்தில் மனதை ஆட்கொள்ளும் தோற்றத்துடன், அமைதியுடன் அமர்ந்திருக்கிறார் ஆனைமுகத்துப் பிள்ளையார். அலங்காரத்துடன் அவரைக்காணும் போது மெய்சிலிர்க்கிறது. அவரது தரிசனம் கண்டவுடனேயே, நம் மனச்சுமைகள் நம்மை விட்டு அகலுவதை உணர முடியும். சிவலிங்கத்தைத் தன் உள்ளங்கையில் வைத்துத் தியானம் செய்யும் கற்பக விநாயகரை, உள்ளம் உருகி வழிபடுவோருக்கு, விநாயகர் செய்த தவப்பயன் வந்து அடையும். தும்பிக்கை வலப்புறமாக திரும்பி இருக்க, வலம்புரி விநாயகராகக் காட்சி தருகிறார் பிள்ளையரர். பிரணவ மந்திரமாம் 'ஓம்' எனும் மந்திர எழுத்தை அவர் முகத்திலே கண்டு, உச்சரித்து, மனம் அமைதியுறலாம்.

''நினைத்ததை அருளும் கற்பக விநாயகர் அற்புதக் கீர்த்தி அருள்பவர். ஆனந்த வாழ்வு நல்குவார், நற்பொருளும் நல்வாழ்வும் நலமும் தருவார்...''



கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை,
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்,
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கருமமில்லையே.

என்று கவியரசர் கண்ணதாசன் போற்றிப் பாடியிருக்கிறார்.

திருமணத் தடை ஏற்படும் ஆண், பெண் இருபாலர்களும் பிள்ளையார் பட்டி பிள்ளையாரப்பனுக்கு முகூர்த்த அர்ச்சனை செய்து வழிபட, திருமணத் தடை நீங்கி விரைவில் மணவாழ்க்கை அமையும்.

தமிழக மக்களின் தலையாய தெய்வங்களுள் முதன்மை மிக்கவராகப் பிள்ளையார்பட்டி விநாயகர் இன்றும் கருதப்படக்காரணம், நினைத்ததை நிறைவேற்றித்தரும் கண்கண்ட தெய்வமாக அவர் விளங்கி வருவது தான்.

பிள்ளையார்பட்டி ராஜகோபுர தரிசனம் மனதிலுள்ள அச்சங்களையும், வீண் சஞ்சலங்களையும், இல்லறத்திலேற் படும் மன வேறுபாடுகளையும் போக்கும்.

பிள்ளையார்பட்டி தெப்பக்குளத்தைப் பற்றி ஒரு செய்தி சொல்லப்படுகிறது. பரமேஸ்வரியின் சாபத்திற்கு ஆளான நான்முகன், இங்கே வந்து நீராடித்தன்னைப் பிடித்த சாபம் நீங்கப்பெற்று ஸ்ரீவிநாயகரின் அருளாசி பெற்றுச் சென்றதாக வரலாறு உள்ளது. முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களும் நீராடி மகிழ்ந்த தெய்வீக சிறப்பு வாய்ந்தது பிள்ளையார்பட்டி தெப்பக்குளம். இந்தத் தெப்பக்குளத்தில் நீராடினால் அனைத்து புண்ணிய நதிகளிலும் நீராடிய பலன் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

உலகமெங்கும் சென்று, செல்வம் ஈட்டி வந்து, தமிழகத் துக்கு பெருமை சேர்த்த நகரத்தார் சமூகத்தின் பராமரிப்பில் சிறப்புப் பெற்று வரும் கோவில் இது. நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் குலமரபுக் கோயில்கள் ஒன்பதுள் பிள்ளையார்பட்டியும் ஒன்றாகும்.

பெருமைமிகு பிள்ளையார் பட்டி கோவிலுக்குச் செல்ல நீங்கள் கொழும்புவிலிருந்து திருச்சி விமான நிலையம் வந்து சேர வேண்டும். அங்கிருந்து பேருந்து மூலம் காரைக்குடி செல்ல லாம். மதுரையிலிருந்து செல்பவர்கள் திருப்பத்தூர் செல்லும் சாலையில் பயணிக்க வேண்டும்.

காரைக்குடி நகரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள இந்த சிற்றூருக்கு காரைக்குடியிலிருந்தும், திருப்பத் தூரிலிருந்தும் நகரப் பேருந்துகள் உள்ளன. இத்தனை பெருமை பெற்ற பிள்ளையார்பட்டி திருத்தலத்துக்குச் சென்று, கற்பக விநாயகரை நாமும் வழிபட்டு, புத்தாண்டைத் துவங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இறைவனையே மணமகனாக அடைய விரும்பி, உறுதியுடன் நின்று போராடி வெற்றி கண்டவர் மலையத்துவச மன்னன் மகள் மதுரை மீனாட்சி. மணக்கோலத்தில் மதுரை மீனாட்சியும் சொக்கநாதரும் நமக்காகக் காட்சி தருகிறார்கள். மங்கலநாயகி, மதுரைக்கு அரசி மீனாட்சியின் தாழம்பூ குங்கும பிரசாதத்துடன் இந்த ஆண்டு தொடங்குகிறது. சர்வதாரி ஆண்டு சகல நன்மைகளையும் தரும் ஆண்டாக இருக்கட்டும்!***

# சர்வதாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்

சர்வதாரி வருட தமிழ்ப் புத்தாண்டு ஏப்ரல் மாதம் பதின்மூன்றாம் திகதி (சித்திரை 1-ம் திகதி) தொடங்குகிறது. நடைமுறையில் ஆங்கிலப் புத்தாண்டு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், பஞ்சாங்கங்கள் அனைத்தும் தமிழ்ப்புத்தாண்டின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றன. சோதிட ரீதியில், சூரிய பகவான் சித்திரை மாதத்தில், மேஷ ராசியில் பிரவேசிப்பதே தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடப் படுகின்றது. இதற்கு ஒரு வலுவான காரணம் உள்ளது. சோதிட உலகின் தலைவனாய் விளங்குபவர் சூரிய பகவான். சூரியன் உலகில் ஒளிக்கு, வெப்பத்துக்கு அதிபதி. ஒளி இல்லையேல் உலகம் இல்லை. வெப்பம் இல்லையென்றால் உயிர்த் தத்துவம் ஏது? சூரியன் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ராசியில் பிரவேசிக்கிறார். ஆனால், மேஷ ராசியில் பிரவேசிப்பது மட்டும் அப்படி என்ன விசேடம்? ஏனெனில், மேஷ ராசியில் தான் சூரியன் உச்சம் அடைகிறார். எங்கும் பிரகாசிக்கும் சூரியன், தான் உச்சமடையும் ராசியான மேஷத்தில் பிரவேசிப்பதை, தமிழ்ப் புத்தாண்டு விழாவாகக் கொண்டாடுகிறார்கள். அதுமட்டுமின்றி மேஷ ராசிதான், பஞ்ச பூதத்தின் அம்சமான நெருப்பு என்ற பிரிவின் கீழ் வரும் முதல் ராசியாகும்.

இதுமட்டுமின்றி ராசி மண்டலத்தில், முதல் ராசியான மேஷ ராசி, கால புருஷனின் தலையாகக் கருதப்படுகிறது. தலைவரான சூரியன், தலையான மேஷ (முதல்) ராசியில் பிரவேசம் செய்வதை கொண்டாடுவதுதானே முறை. எனவே தான் நம் முன்னோர்கள் சித்திரை மாதத்தின் முதல் திகதியை தமிழ்ப்புத்தாண்டின் தொடக்கமாக வைத்துள்ளார்கள். மங்களகரமான இந்த சர்வதாரி வருடப் புத்தாண்டு, இலங்கை நேரப்படி, சித்திரை மாதம் 1-ம் திகதி (13.04.2008) ஞாயிற்றுக்கிழமை , சுக்கில பட்சம், நவமி திதி, பூசம் நட்சத்திரம், சித்தயோகம், கூடிய சுபதினத்தில், துலா லக்கினத்தில் மாலை மணி 06.30 க்கு மலர்கிறது. தமிழ்ப்புத்தாண்டின் போது உள்ள கோள்களின் நிலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, வருட கிரகமான குரு பகவான் தமிழ்ப் புத்தாண்டு முதல் கார்த்திகை மாதம் 21-ம் திகதி (06.12.2008) வரை, தனுசு ராசியில் இருக்கிறார். பிறகு மகர ராசியில் பிரவேசம் செய்கிறார்.

## சர்வதாரி வருட தமிழ்புத்தாண்டு கிரக பாத சாரம்

| | | |
|---|---|---|
| சூரியன் - அசுவினி 1ல், | சந்திரன் - பூசம் 2ல், | செவ்வாய் - புனர்பூசம் 1ல் |
| புதன் -ரேவதி 4ல், | குரு - உத்திராடம் 1ல், | சுக்கிரன் உத்திரட்டாதி 4ல் |
| சனி - மகம் 3ல், | ராகு - அவிட்டம் 3ல், | கேது - மகம் 1ல் |
| லக்கினம் - சித்திரை 4ல், | நவாம்ச லக்னம் - துலாம் | |

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | சூரியன் | | செவ்வாய் |
| ராகு | ராசி | | சந்திரன் |
| | | | சனி கேது |
| குரு | | ல | |

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் செவ்வாய் கேது | | சனி |
| | அம்சம் | | |
| | | | |
| குரு | ல சுக் | ராகு | சந்திரன் |

சனி பகவான் இந்த ஆண்டு முழுவதும் சிம்ம ராசியில் சஞ்சாரம் செய்கிறார். சாயா கிரகங்களான ராகு-கேது ஆகிய இருவரும் இந்த ஆண்டு முழுவதும் ராகு-மகர ராசியிலும், கேது-கடக ராசியிலும் சஞ்சாரம் செய்கிறார்கள். 12 ராசிகளுக்கும் உரிய தமிழ்ப் புத்தாண்டு பலன்களும், பரிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

***இந்தப் புத்தாண்டில், எல்லோரும் வளமாய் வாழ நவக்கிரகங்கள் துணையாய் இருப்பார்கள். நவக்கிரகங்கள் அனைவருக்கும் நலமே புரிவார்கள்.***

**- சோதிடர் திருமதி காயத்ரி பாலசுப்ரமணியன், புதுச்சேரி (செல்: 99432 22022)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மேஷம்

**அசுவினி 1,2,3,4 பாதங்கள்**
**பரணி 1,2,3,4 பாதங்கள்**
**கார்த்திகை 1-ம் பாதம்**

**துடிதுடிப்புடன் செயல்படும் மேஷ ராசி நேயர்களே!**

சுபக் கிரகமான குரு பகவானின் அருளாசியோடு இந்த வருடம் தொடங்குகிறது. உங்களின் பாக்ய ஸ்தானமான -9ம் இடத்தில் குரு பகவான் இருப்பதால், இனிமையான சுப காரியங்கள் சிறப்பாக நடைபெறும். தள்ளிப்போன திருமணங்கள் விரைவில் நடந்தேறும். உங்கள் ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால், அரசு காரியங்கள் அனுகூலமாய் முடியும்.

**பெண்களுக்கு:**

தொடர்ந்து வரும் சுப நிகழ்ச்சிகள் உங்களை ஆனந்தத்தில் திணற வைத்துவிடும். விழா விருந்து என்று பரபரப்பாக, பல பிரயாணங்களை மேற்கொள்வீர்கள். அலைச்சலில் ஆரோக்கியத்தை மறந்து விடாதீர்கள். அதில் உரிய கவனம் செலுத்துங்கள். குழந்தைகளுக்காக நீங்கள் பட்டபாடு நல்ல பலனைத் தரும்.

உயர் கல்வியில் அவர்கள் விரும்பிய பாடமும், படித்து முடித்தவர்களுக்கு சிறப்பான பணியும் கிடைக்கும். இல்லத்தில் உறவினர் வருகையால் மகிழ்ச்சியும் வேலைப் பளுவும் அதிகரிக்கும். நூதன வகை ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். குடும்ப உறவில் நேசமும், பாசமும் அதிகமாகும்.

நெருங்கிய உறவினர்களிடையே உங்களின் மதிப்பு உயரும். தாராளமான தன வரவால், புதிய கலைப்பொருட்களும், வீட்டு உபயோகப் பொருட்களும் வந்து சேரும். மின் பொருள்களைத் தகுந்த முறையில் பராமரித்து வந்தால், வீண் விரயங்களைத் தவிர்த்து விடலாம்.

உடன் பிறந்தவருடன் நிலவிய பனிப்போர் மறையும். அக்கம் பக்கத்தாருடன் அளவுடன் பழகி வரவும்.

**மாணவர்களுக்கு:**

கல்வியில் உங்கள் நாட்டம் அதிகரிக்கும். சக மாணவர்களின் ஒத்துழைப்பால், பல பணிகள் எளிதில் முடியும். வெளி இடங்களுக்கு கல்வி பயிலச் செல்வார்கள், புதியவர்களிடம் எச்சரிக்கையாய் இருக்கவும்.

உங்கள் உழைப்பால் ஆசிரியரின் பாராட்டைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவீர்கள். நண்பர்களுடன் உல்லாசப் பயணம் சென்று மகிழும் காலமிது. பாடங்களைப் பயில, பரீட்சை வரும் வரை காத்திராமல், நேரம் கிடைக்கும் போது பயின்று வந்தால், மதிப்பெண்கள் உயர்ந்து, உங்கள் நற்பெயரும் உயரும்.

கணினிப் பாடம் பயிலும் மாணவர்களின் திறமை பிரகாசிக்கும். சவாலான பாடங்களை எளிதில் முடித்து விடுவீர்கள். எனினும் தூக்கமின்மை தலை காட்டாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். திட்டமிட்டுச் செயலாற்றினால் அலைச்சல் அதிகரிக்காது.

புதிய பாடங்கள் படிப்பவர்களுக்கும், ஆய்வுத் துறையில் உள்ளவர்களுக்கும் கல்வி தொடர்பான பணிகள் தடையின்றி நடந்தேறும். சிறந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

**பணி புரிபவர்களுக்கு:**

அலுவலகத்தில் உங்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். சிலர் பதவி உயர்வு பெற்று புதிய இடத்தில் பணி புரிவார்கள். உடன் பணிபுரிபவர்களால் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும், அதனைத் திறம்பட முறியடித்து விடுவீர்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவு, தகுந்த சமயத்தில் கை கொடுக்கும்.

> குரு காயத்ரீயை நாள் ஒன்றுக்கு 108 முறை சொல்லி வந்தாலும் நினைத்த காரியம் வெற்றியே.
>
> **குரு காயத்ரி**
>
> **வ்ருஷப த்வஜாய வித்மஹே**
> **க்ருணி ஹஸ்தாய தீமஹீ**
> **தந்நோ குரு: ப்ரசோதயாத்!**

உங்களின் பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். எனினும் பிறருக்கு கடன் கொடுப்பதில் எச்சரிக்கையாய் இருங்கள். முக்கிய பிரச்சினைகளைத் தவிர்த்து விடலாம். இழுபறியில் இருந்த கோப்புகள், சாதகமாய் முடிவதால் வேலைப் பளு கணிசமாய் குறையும்.

இரசாயனம் மற்றும் மருந்து தொழிற்சாலைகளில் பணி புரிபவர்கள், தொழில் சம்பந்தமான உபகரணங்களைக் கையாளும் போது எச்சரிக்கையாய் இருப்பது அவசியம்.

சிலருக்கு புதிய வீடு கட்டும் முயற்சி எதிர்பார்த்ததைவிட விரைவில் முடிந்து விடும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

புதிய முயற்சியில் இறங்கும் முன் தகுந்த ஆலோசனையுடன் செயல் பட்டால், உங்களின் வளர்ச்சி சிறப்பாக அமையும். நீங்கள் எதிர்பார்த்த பண உதவிகள், அதிக முயற்சி இல்லாமலே கிடைக்கும்.

பணி சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் கோப்புக்கள் பராமரிப்பதில் உங்களின் நேரடித் தலையீடு நன்மை தரும். எந்தச் சூழ்நிலையிலும் உடனிருப்பவர்களிடம் வன்மம் பாராட்டாமல் நடந்து கொள்ளுங்கள்.

இதனால், உங்களின் கௌரவம் உயரும். பிரயாணங்களில் நன்மை ஏற்படும். எனினும் உஷ்ணம் தொடர்பான நோய்கள் வராதவாறு தகுந்த உணவு வகைகளை எடுத்துக் கொள்ளவும்.

அனுபவசாலிகளின் ஆலோசனைகளுக்கு மதிப்புக் கொடுங்கள். அதனால், உயர்மட்டத்தில் உங்களின் செல்வாக்கு மேம்படும். கணக்கு வழக்குகளில் அலட்சியப் போக்கைத் தவிர்த்து செயற்பட்டால், நஷ்டம் வரும் வாய்ப்புக் களைத் தவிர்த்து விடலாம்.

**கலைஞர்களுக்கு:**

புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார உயர்வு ஏற்படும். சக கலைஞர்களிடம் இதமாக நடந்து கொள்ளுங்கள்.

புதிய முயற்சிக்குத் துணையாய் இருப்பார்கள். வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளும் போது, உங்கள் உடைமைகளில் கவனமாக இருத்தல் நலம். பழக்கமில்லாத புதிய உணவுகளைத் தவிர்த்தால், ஆரோக்கியம் சீராக இருக்கும்.

எதிர்பாராத விதத்தில் பணமோ, பொருளோ வரும் வாய்ப்பு உள்ளதால், வந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், தகுந்த மனை அல்லது பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்.

> **வாஸ்து**
>
> மேஷ ராசிக்கு நிலம், வீடு குறிக்கும் இடம் 4ம் இடமான வடக்கு திசையே. கிழக்கும் பரவாயில்லை. வீடு கட்டினாலும், வாங்கினாலும் தலைவாசல் வடக்கை - கிழக்கை பார்க்க வேண்டும்.

எவரையும் எளிதில் நம்பி விடுவது சில சமயங்களில் சிரமத்தைத் தரும். பண வரவுக்கேற்ற செலவுகள் இருக்கும். சக போட்டியாளர்களின் போக்கால், சில புதிய முயற்சிகள் தாமத மானாலும், பொறுமையுடன் செயல் பட்டால் வாய்ப்புகளும், வெற்றியும் தேடி வரும். உங்கள் துறைக்கு ஏற்ற, காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்து வைப்பது தகுந்த பாதுகாப்பைத் தரும்.

**வியாபாரிகளுக்கு:**

நீங்கள் ஈடுபட்டுள்ள துறையில் கிடைக்கும் வெற்றி, உங்களின் தொழில் விரிவாக்கத்திற்கு உதவியாய் இருக்கும்.

பங்குச்சந்தை, பணம் கொடுக்கல் வாங்குதல், மனை வியாபாரம் ஆகிய வற்றில் உள்ளவர்கள் சற்றே ஏற்ற இறக்கங்களையும், சிக்கல்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.

நெருக்கடியான சூழ்நிலையிலும், கோபத்திற்கு இடம் தராமல் இருந்தால் சிக்கல்கள் விரைவில் விலகிவிடும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் வந்தாலும், செலவினங்கள் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

வெளிவட்டாரப் பழக்கங்களில், சொற்சிக்கனம் அவசியம். வருமான வரி, சேவை வரி ஆகிய வற்றை உரிய காலத்துக்குள் செலுத்தி, அரசாங்கம் தரும் சலுகைகளை உரிய முறையில் பயன்படுத்தினால், லாபம் கணிசமாக அதிகரிக்கும். வயிறு சம்பந்தமான உபாதைகளை உடனடியாக கவனித்தால், மருத்துவச் செலவுகளை ஓரளவு கட்டுக்குள் வைக்கலாம்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 1,3,4,9 ஐக் கொண்டவர்கள் முயற்சி வெற்றி பெறும். சொத்து சுகம் பெருகும். பிறப்பு எண், விதி எண் 2,5ஐக் கொண்டவர்கள் உழைப்பின்றி ஏற்ற பலனை அடையாமல் சலித்துக் கொள்வார்கள்.**

**கூட்டு வணிகம் ஏற்றதல்ல. சினத்தைத் தவிர்த்தால் நலம். பிறப்பு எண், விதி எண் 6,7,8 ஐக் கொண்ட வர்களுக்கு சில நல்ல பலன்களே உண்டு. அவ்வப் போது நன்கு யோசித்து பிறரைக் கலந்து முடிவெடுக்கவும்.**

**அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல் ஆகும். தியானத்தாலும், இறை உணர்வாலும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை அடைவீர்கள்.

நட்சத்திரப் பலன்கள்:

**அசுவினி 1,2,3,4 பாதங்கள்:**

பொருளாதார முன்னேற்றத்தால் வசதி வாய்ப்புகள் பெருகும். உறவுகளின் பாராட்டால் உள்ளம் குளிரும்.

உங்களின் அனுசரணையான போக்கால், இழுபறியான விஷயங்களும் சாதகமாய் முடியும். சொந்த வீட்டில் குடியிருப்பவர்கள், பணியின் காரண மாக வேறு இடத்தில் தங்க வேண்டி யிருக்கும். நற்செயல்களால் நல்லோரின் ஆசியைப் பெறுவீர்கள்

**பரணி 1,2,3,4 பாதங்கள் :**

தொழிலிலும், பணியிலும் இருந்த முடக்கங்கள் நீங்கி விடும். நினைத்த காரியத்தை சாதித்து விடுவீர்கள்.

இரவலாகப் பொருள்கள் தருவதையும், பெறுவதையும் குறைத் துக் கொண்டால், தர்ம சங்கடமான சூழ்நிலைகளில் இருந்து தப்பி விடலாம்.

பணவரவு திருப்திகரமாக இருக்கும். சுப நிகழ்ச்சி மூலம், விலகியிருந்த சொந்தங்கள் தேடி வரும்.

**கார்த்திகை 1-ம் பாதம்:**

தேக ஆரோக்கியம் சீராக இருக்கும், வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ளும் முன்பு, ஆவணங்களையும், விதிமுறைகளையும் சரிபார்த்துச் செயல்படுதல் நல்லது.

குழந்தைகளால் பெருமை உண்டாகும். வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பால் புதிய முயற்சிகள் வெற்றி பெறும்.

கணக்கு சம்பந்தமான துறைகளில் உள்ளவர்கள் கவனம் சிதறாமல் பணி யாற்றினால் நல்ல பெயர் உங்களைத் தேடி வரும்.

**ஆலய பரிகாரம்**

செவ்வாயின் அம்சமான முருகன் அருள் பாலிக்கும் திருத்தலங்களுக்குச் சென்று வந்தால், வாழ்வில் ஏற்றம் உண்டாகும். விநாயகரை, தினமும் வழிபட்டு வந்தால் சகல தோஷமும் நீங்கும்.

வியாழன் தோறும் குரு பக வானை தரிசனம் செய்து வாருங்கள். வளம் பல பெருகும்.

# ஜோதிடம் ஒரு தெய்வீகக்கலை..

## வேற்றுமையில் ஒற்றுமை

வேதத்தின் அங்கமாகக் கருதப்படும் ஜோதிடம் ஒரு தெய்வீகக்கலை. இந்தக்கலை மனித வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்குகிறது. ஆதலால்தான் ஆய கலைகள் அறுபத்து நான்கில், ஜோதிடமும் சேர்க்கப்பட்டுள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity). இது ஜோதிடத்திற்கும் பொருந்தும். அவற்றைப்பற்றிய விளக்கங்களை, ஜோதிட கேசரி வாசகர்களுக்காக, தொகுத்து வழங்குகிறார் நமது ஜோதிடர் குழுவின் பிரதான ஜோதிடர் காயத்ரி. வாழ்வை வளம் பெறச் செய்யும் ஜோதிடத்தில் பல பிரிவுகள் உண்டு.

**கணிதம்:**

நாம் அனைவரும் அறிந்த ஒன்று. பெரும்பாலான இடங்களில் மக்கள் இதனை உபயோகப்படுத்தி வருகின்றனர். ஒருவர் பிறந்த தேதி, நேரம், பிறந்த இடம் ஆகியவற்றைக் கொண்டு ஜாதகம் கணிக்கப்படுகிறது.

இதில் மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகள் உண்டு. இந்த ராசிக் கட்டங்களில் அமரும் நவக்கிரகங்கள், மனிதனின் கர்ம வினைக்கு ஏற்ப பலன் தரும். ஜாதகம் கணித்த பின் பலன்கள் பார்க்கப்படுகிறது. ஜாதகத்தில் 12 பாவங்கள் உண்டு.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த பாவங்களோடு தொடர்பு உடையவை. பணியில் அமர்தல், வியாபாரம் செய்தல், திருமணம், குழந்தை பாக்யம் இவை எந்த காலக்கட்டத்தில் நடக்கும் என்பதை ஜாதகத்தின் உதவி கொண்டு அறியலாம்.

**எண் கணிதம்:**

எண்களின் உதவி கொண்டு ஒருவரின் பெயரின் அடிப்படையில் பலன்கள் சொல்லப்படும். இன்று பலரால் விரும்பப்படுவது நியூமராலஜி எனப்படும் எண்கணிதக்கலை.

**கை ரேகை சாஸ்திரம்:**

மனிதனின் கையில் ஓடும் ரேகைகளை வைத்து பலன்கள் சொல்லப்படுகின்றன. பிரபலமாக விளங்கும் சாஸ்திரங்களில் இதுவும் ஒன்று.

**சைத்ரிக சாஸ்திரம்:**

கோவில் சுவர்களில் அழியாத வகையில் சித்திரங்கள் வரைவது பற்றிய செய்திகள் கூறப்பட்டிருக்கும்.

**ருது ஜாதகம்:**

ஒரு பெண் பூப்படையும் நேரத்தின் அடிப்படையில் பலன்கள் சொல்லப்படும். திருமணம் பற்றி அறிய ருது ஜாதகத்தை வைத்து பார்க்கும் பழக்கம் இன்றும் பல இடங்களில் நடைமுறையில் உள்ளது.

தொடர்ந்து செல்க......... பக்கம் 16 க்கு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விடியற்காலையில் எழுவதால் ஏற்படும் பலன்கள்

காலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்று பெயர். அப்பொழுது விழித்துக் கொண்டு, படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். முதலில் சிரமமாக இருந்தாலும், இப்படிப் பழகிவிட்டால், பிறகு பழக்கமாகி விடும். இப்படி செய்வது ஆரோக்கியம், நீண்ட ஆயுள் முதலிய பலன்களைக் கொடுக்கும்.

அந்த நேரத்தில் தேவர்களும், முன்னோர்களும் நம் வீட்டை நோக்கி வருவார்கள். அப்போது விழித்திருந்து, மனதால் அவர்களை வழிபட்டால், அவர்களைக் கௌரவித்து வரவேற்பதாகும். அவர்கள் சந்தோஷப்பட்டு நமக்கு நன்மை செய்வார்கள்.

# நவக்கிரக ஸ்தோத்திரம்



செம்பருத்திப் பூப் போல் பிரகாசிப்பவரும் கசியப முனிவரின் புத்திரரும், காந்தி உடையவரும், இருட்டின் சத்துருவும், சகல பாவங்களையும் போக்குகிறவரு மான **சூரியனை வணங்குகிறேன்.**

தயிர், சங்கு, பனி போன்ற நிற முள்ளவரும், பாற்கடலில் உதித்தவரும், பரமேஸ்வரனின் கிரீடத்தை அலங்கரிப்பவருமான

**சந்திரனை வணங்குகிறேன்.**

பூமியின் குமாரரும், மின்னலைப்போல் பிரகாசிப்பவரும், சக்தியை கையில் உடையவருமான

**அங்காரகனை வணங்குகிறேன்.**

ஞாழல் மொட்டு போன்ற கருநிறமுள்ளவரும், உவமையில்லாத ரூபமுடையவரும், ஞானஸ்வரூபரும், சந்திரன் புத்திரரும், சாந்த குணங்கள் உடையவருமான

**புதனைநான் வணங்குகிறேன்.**

தேவர், முனிவர்களுக்கு ஆச்சாரியரும், சுவர்ணகாந்தி உடை யவரும், மூவுலகத்து அதிபதியான

**குருவை நான் வணங்குகிறேன்.**

பனி, தும்பை, தாமரைத் தண்டு போன்ற நிறம் உள்ளவரும், அசுரர்களுக்கு குருவாயும், சகல சாஸ்தி

ரங்கள் உணர்ந்தவரும், பிருகு குமாரருமான **சுக்கிரனை வணங்குகிறேன்.**

நீலமை போன்று பிரகாசிப்பவரும், சூரிய குமாரரும், யமனுக்கு மூத்தவரும், சாயா, சூரியன் இவர்களின் குமாரருமான,

**சனீஸ்வரனை நான் வணங்கு கிறேன்.**

பாதி சரீரமுள்ளவரும், அதிவீரரும், சந்திர சூரியனைக் கலக்கமடையச் செய்பவரும், ஸிம்ஹிகையின் கர்ப்பத்தில் தோன்றியவருமான **ராகுவை நான் வணங்குகிறேன்.**

பலாச புஷ்பம்போலப் பிரகாசிப்பவரும், நட்சத்திரங்களுக்குத் தலைமையானவரும், ருத்ர குமாரரும், பயங்கரருமான

**கேதுவை நான் வணங்குகிறேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





துர்க்கை அம்மன்

# ரிஷபம்

**(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி 1,2,3,4 பாதங்கள், மிருகசீரிடம் 1,2, பாதங்கள்)**

**கலையார்வம் உடைய ரிஷப ராசி நேயர்களே!**

உங்களின் இனிமையான பேச்சால் அனைவரையும் வசீகரித்து விடுவீர்கள். சிறிய விஷயங்களுக்கும் மகிழ்ச்சியடையும் நீங்கள், சிலசமயம் குழந்தைகளைப் போல் பிடிவாதம் பிடித்து உங்கள் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

இந்த தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் ராகுவும் கேதுவும் உங்களுக்கு நற்பலன்களை வாரி வழங்குவார்கள். எதிலும் வெற்றி வாகை சூடி மகிழ்வீர்கள்.

தைரியத்துடன் செயல்பட்டு எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருப்பதால் சில இடையூறுகள் தோன்றி மறையும். எனவே ஈடுபடும் காரியங்களில், எச்சரிக்கையாய் இருங்கள்.

**பெண்களுக்கு:**

இல்லத்தில் அமைதி தவழ்வது உங்கள் கையில் தான் உள்ளது. வீண் வாக்குவாதங்களுக்கும், காரசாரமான பேச்சுக்களுக்கும் இடம் தராதீர்கள். உங்கள் பேச்சில் பொறுமையும், நிதானமும் இருந்தால், பல காரியங்கள் எளிதாக முடியும். உடல்நலத்தில் கவனமாய் இருந்தால், மருத்துவச் செலவுகளை குறைத்து விடலாம்.

குடும்ப உறுப்பினர்களை உங்கள் அன்பால் கட்டி வையுங்கள். அவர்கள் பல விதத்திலும் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

அறிமுகமில்லாத நபரிடம் உங்கள் பிரச்சினைகளைப் பேசாதீர்கள். தவணை முறையில் பொருள்கள் வாங்குவதற்குப் பதிலாக, பண இருப்புக்கு ஏற்றவாறு பொருள்களைத் தேர்ந்தெடுங்கள். பொருளாதாரச் சிக்கல்கள் குறையும். குழந்தைகளின் படிப்பில் தனிக் கவனம் செலுத்துங்கள். உங்களின் ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு:**

கேளிக்கைகளைக் குறைத்துக் கல்வியில் கவனம் செலுத்தினால் நல்ல மதிப்பெண் உறுதி. நட்பு வட்டத்தின் பழக்க வழக்கங்கள் எல்லை மீறாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் கவனமாய் இருங்கள். தீய நண்பர்களை இனம் கண்டு ஒதுக்கி விடுங்கள்.

கடினமான பாடங்களை எளிதில் முடிக்கும் நீங்கள், தேவையற்ற தூக்க மின்மையையும் தவிர்க்கலாமே! கல்லூரிகளில் செய்முறைப் பயிற்சி களின் போது, தகுந்த கவனத்துடன் செயல்படவும்.

உங்களின் உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். எனவே உங்கள் முழு கவனத்தையும், சக்தியையும் புத்தகங்களோடு செலவிடுங்கள். கவிதை, கட்டுரை என்று இதர துறைகளிலும் பிரகாசிக்கும் வாய்ப்பிருப்பதால், வரும் சந்தர்ப்பங்களை, திறமையுடன் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**பணி புரிபவர்களுக்கு:**

உயரதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும், உங்கள் பணியில் தொய்வு ஏற்படாதவாறு செயலாற்றுங்கள். சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் செயல்படுங்கள்.

யாருக்கும் பிணைக்கு கையெழு த்து போடும் முன்பு, ஆலோசனை செய்யுங்கள். முக்கியமான கோப்புகளைக் கையாளும் போது, மறதிக்கு இடம் அளிக்காதீர்கள்.

எதிர்பாராத செலவுகள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதால், உங்கள் சேமிப்பை அதிகப்படுத்துங்கள். பல பணிகளை இழுத்துப்போட்டு, செயலாற்றும் நீங்கள், எளிதில் அடுத்தவரை நம்பி ஏமாந்து விடுவீர்கள்.

எனவே சூழ்நிலைக்கு ஏற்றவாறு சாமர்த்தியமான அணுகுமுறைகளை மேற்கொள்ளுங்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

உடன் இருப்பவரிடம் இதமாக நடந்து கொள்ளுங்கள். பதவிகளும் கௌரவப் பட்டங்களும் உங்களைத் தேடிவரும். கூட்டு முயற்சியால் பல சாதனைகளைப் புரிவீர்கள்.

சிறிய உடல் உபாதைகளையும் உடனுக்குடன் கவனித்துவிடுங்கள். சில மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். புதிய இடங்களுக்குச் செல்லும் போது தனிமைப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

உங்கள் சொல்லுக்கு உரிய மரியாதையும், யோசனைகளுக்கு உரிய அங்கீகாரமும் கிடைக்கும். சில புதிய பொறுப்புகளும் வந்து சேரும்.

**கலைஞர்களுக்கு:**

புதிய வாய்ப்புக்கள் வரும். கூடவே செலவினங்களும் வந்து சேரும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடாமல் இருந்தால், நிம்மதி உங்கள் வசமே! வீண் வதந்திகளை நம்பிச் செயலில் இறங்காதீர்கள்.

சக கலைஞரின் குணமறிந்து நடந்து கொண்டால், அவர்களது ஆதரவு, உங்கள் வெற்றிக்கு படிகளாய் அமையும். மரியாதை நிமித்தம் கலந்து கொள்ளும் விழாக்களில், சொற்சிக் கனத்தைக் கடைபிடியுங்கள். உங்கள் திறமைகள் தொடர்பான துறைகளில் உங்கள் ஆர்வத்தை அதிகரித்துக் கொள்ளுங் கள். தகுந்த சமயத்தில் புகழாரம் சூடி மகிழ்வீர்கள்.

பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். எனினும், தர்ம சங்கட மான சூழலை உருவாக்காமல் எச்சரிக்கையாய் இருங்கள்.

**வியாபாரிகளுக்கு :**

புதிய உத்திகள் மூலம் உங்கள் லாபம் பெருகும். கூட்டாளிகளின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள். புதிய துறையில் இறங்குபவர்கள் நிதானத்துடன் செயலாற்ற வேண்டிய காலமிது. வியாபாரத்தில், நேர்மையான வழிகளை மட்டும் தேர்ந்தெடுங்கள். தொழில் அல்லது வியாபார ரீதியாக மேற்கொள்ளும் பயணங்கள் லாபகர மாக இருக்கும்.

வியாபார விரிவாக்கத்தில், விதிகளுக்குப் புறம்பானவற்றை அனுமதிக்காதீர்கள். தகுந்த திட்டமிட்டுச் செயலாற்றினால், வெற்றி உங்களுக்கே! வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். புதிய வண்டி வாகனங்கள் வந்து சேரும்.

கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள் பண விஷயங்களில் கவனமாய் இருந்தால் நஷ்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். பங்குச் சந்தை, மனை விற்பனை ஆகியவற்றில் உள்ளவர்கள் முதலீடுகளில் அதிக பணமுடக்கத்தைத் தவிர்த்தல் சாலச் சிறந்தது.

ஏற்ற இறக்கங்களை சந்திக்கும் சூழல் இருப்பதால், சாதுரியமான உத்திகளை மேற்கொண்டால், தகுந்த பாதுகாப்புடன் செயலாற்ற முடியும்.

> **வாஸ்து**
>
> ரிஷப ராசிக்கு நிலம், வீடு குறிக்கும் இடம் சிம்மம். இதற்குரிய திசை கிழக்கு. ராசிக்குரிய திசை தெற்கு. எனவே வீடு கட்டுபவர்கள், வாங்குபவர்கள் இந்தத் திசைகளே தலைவாசல் பார்க்கும் திசைகளாகக் கொள்ளவும்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 4, 5, 6 ஆம் கொண்டவர்களுக்கு உழைப்பிற்கேற்ற உயர்வு நிச்சயம். பிறர் உதவி கிடைக்கும். சுபகாரியங்கள் நிறைவேறும்.**

**வியாபாரத்தில் முதலீடுகள் நிறைய போட்டு, நிறைய லாபம் பெறலாம். சொத்துக்கள் வாங்கலாம். சாதனை வீரர்களாக பெயர் பெறலாம்.**

**பிறப்பு எண், விதி எண் 3,8 ஐக் கொண்டவர்களுக்கு சுமாரான பலன் அமையும். அதிக ஆசை அதிக நஷ்டத்தைத்தரும்.**

**பிறப்பு எண், விதி எண் 1, 2, 7, 9 ஐக் கொண்டவர்களுக்கு சில நன்மைகள், பல தீமைகள் பொறுமை தேவை.**

## நட்சத்திரப் பலன்கள்:

**கார்த்திகை 2,3,4 பாதங்கள்:**

உங்களின் நம்பகத்தன்மையால், நல்லோரின் அபிமானத்தையும், ஆதரவையும் பெறுவீர்கள். குடும் பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை வளர விடாதீர்கள்.

உடனடித் தீர்வுகள், உறவின் விரிசல்களை சரி செய்துவிடும். சிலர் உத்தியோகம், தொழில் நிமித்தமாக இடமாற்றங்களை சந்திக்க நேரிடும். வருமானத்திற்கு குறைவிராது. கடன் தொல்லைகள் குறையும்.

பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தி வந்தால், கல்விக்கு எந்த குந்தகமும் நேராது. நெடுநாளாய் எதிர்பார்த்திருந்த பூர்வீகச் சொத்து உங்கள் கைக்கு வந்து சேரும். அரசுப் பணியில் உள்ளவர்கள் நிதானமாகச் செயலாற்றுங்கள், அது உங்கள் உயர்வுக்கு வழி வகுக்கும்.

**ரோகிணி 1,2,3,4 பாதங்கள்:**

இரசாயனத் துறையில் உள்ளவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும்.

போட்டிகளின் மூலம் உங்கள் திறமை அதிகமாகப் பிரகாசிக்கும். இரவுப் பயணங் களைத் தவிர்ப்பது நல்லது.

வழக்குகளில் சாதகமான நிலை ஏற்படும். எதிர்பாராத பொருளாதார உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும்.

பிள்ளைகளை, அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வீடு வாகனத்தால் செலவுகள் ஏற்படலாம். உடன் பிறந்தவர் களிடம் அனுசரித்துச் செல்லுங்கள்.

**மிருகசீரிடம் 1,2, பாதங்கள்:**

வரவேண்டிய பாக்கிகளை, நயமாகப் பேசி வசூலிப்பது நல்லது. வேலையாட்களின் ஆதரவு குறையா மல் பார்த்துக் கொண்டால், பணிகள் துரிதமாக முடியும். குடும்பத்தில் உள்ளவர்களின் விருப்பங்களை அறிந்து நிறை வேற்றுவீர்கள். பழைய சொந்தங்கள் மீண்டும் வந்து, உறவைப் புத்துப்பித்துக் கொள்வார்கள்.

உங்கள் பிள்ளைகளால் உங்கள் மதிப்பும் மரியாதையும் கூடும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வெளி வட்டாரப் பழக்கங் களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**ஆலய பரிகாரம்**

வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை அம்மனை வழி படவும். சனிக்கிழமை பள்ளி கொண்ட பெருமாளை தாமரை மலர் வைத்து வழி படவும். தேவ குருவின் அருள் தடையின்றி கிடைக்க, அவருக்குப் பிரியமான கடலையை நிவேதனம் செய்யுங்கள். உங்கள் ராசி நாதனான சுக்கிரனை வெள்ளிக்கிழமை தோறும் வலம் வாருங்கள். வளம் பல தந்தருள்வார்.

## சோதிடம் ஒரு தெய்வீகக் கலை

12 ஆம் பக்கத்தொடர்ச்சி...

**அங்க ஆருடம்:**

இது சாமுத்திரிகா லட்சணம் என்றும் அழைக் கப்படும். மனிதனின் அங்க அடையாளம், இவை களின் அமைப்பு, நிறம் ஆகியவற்றின் அடிப்படை யில் பலன்கள் கூறப்படுகின்றன.

**வாஸ்து சோதிடம்:**

மனிதன் குடியிருக்கும் வீடு, தேர்ந்தெடுக்கும் மனை, வீட்டின் உள்ளே அறைகள் அமைக்கும் விதம், வியாபார நிறுவனங்கள் அமைத்தல், ஆகிய வற்றில் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள், அவைகள் தரும் பலாபலன்கள் ஆகியவற்றைப் பற்றி வாஸ்து சாஸ்திரம் மூலம் அறிந்து கொள்ள லாம்.

**மேதினி சோதிடம்:**

நாட்டு நடப்பு, அரசியல் நிகழ்வுகள், இயற்கை யின் சீற்றம், பொருளாதார நிலை, மக்களின் சுபிட்சம், வியாபாரம், அந்நிய செலாவணி இவை எல்லாம் இதில் அடங்கும்.

**பஞ்ச பட்சி சாஸ்திரம்:**

இதுவும் சோதிடத்தின் ஒரு அங்கமே. அவரவர் பிறந்த நட்சத்திரத்தின் அடிப்படையில் 5 பட்சிகள் உண்டு. அவை காகம், கோழி, ஆந்தை, வல்லூறு, மயில்.

ஒவ்வொரு சாமத்திற்கும் ஒவ்வொரு பட்சியின் ஆட்சி நடக்கும். இந்த 5 பட்சிகளும் அரசு, ஊண், நடை, துயில், சாவு ஆகிய 5 தொழிலை செய் கின்றன. ஒருவரின் பிறந்த நட்சத்திரத்தை வைத்து, அவரின் பட்சி அறியப்படுகிறது. இந்த பட்சிகள் மேற்கொள்ளும் தொழிலின் அடிப்படையில் பலன் கள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பற்றிய விவரங்கள் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டி ருக்கும்.

**கிளி சோதிடம்:**

கூண்டில் உள்ள பறவையை ஒரு ஏட்டை எடுக்கச் சொல்லி, அதில் உள்ள பலன்களை அறிந்து கொள்வது. இப்போது இந்த முறை அரிதாகி வருகிறது.

**ஆகம சோதிடம்:**

ஆலய நிர்மாணம் செய்வதைப்பற்றிய செய்தி களை கூறும் சாஸ்திரம்.

**நாடி சோதிடம்:**

நமது ரிஷிகள் எழுதி வைத்த ஓலைச்சுவடி களில் இருந்து பலன்களை பார்த்துச்சொல்வர். இதற்கு மனிதனின் கைவிரல் ரேகை தேவைப் படும். இந்த முறையில் பல்வேறு காண்டங்களாகப் பிரித்து அதன் அடிப்படையில் பலன்கள் சொல்லப் படுகிறது.

பிறப்பு காண்டம், திருமண காண்டம் என்று பல்வேறு காண்டங்கள் உள்ளன. இந்த நாடி சோதிடம் முனிவர்களின் பெயரில் அகஸ்திய நாடி, பிருகு நாடி, ஸப்த ரிஷி நாடி என்று அழைக்கப்படுகிறது.

**ஆருட சாஸ்திரம்:**

மனிதனின் மனதை அரித்துக்கொண்டிருக்கும் பிரச்னைகளுக்கு, அவர்கள் கேள்வி கேட்கும் நேரத்தின் அடிப்படையில் பதிலுக்கான விடை கூறப்படும். உதாரணத்திற்கு களவு போன பொருள் கிடைக்குமா? இதுபோன்ற கேள்விக்கான விடைகளை இந்த சாஸ்திரம் சொல்லும்.

தேவப்பிரச்னம், அஷ்டமங்கள பிரச்னம்: இவை இரண்டும் கேரள மாநிலத்தில் கடைபிடிக் கப்படுகின்றன.தேவப்பிரச்னத்தில், ஆலயங்களில் தெய்வ சாந்நித்யம் எப்படி இருக்கிறது, நிகழும் தவறுகள், அதற்கு செய்ய வேண்டிய பரிகாரங்கள், சாந்திகள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை அறியலாம்.

அஷ்டமங்கள பிரச்னம் மூலம் மனிதர்களின் பிரச்னைக்கான தீர்வுகள் சொல்லப்படும். இந்த முறையில் பெரிய ராசிக்கட்டத்தில் சோழிகளை குலுக்கிப் போட்டு, கணக்கிட்டு, பிரச்னைக்கு உரிய பலன்கள், தீர்வுகள் ஆகியவை சொல்லப்படும்.

தொடர்ந்து செல்க.......... பக்கம் 19 க்கு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4 பாதங்கள், திருவாதிரை 1,2,3,4, பாதங்கள், புனர்பூசம் 1,2,3 பாதங்கள்)**

**அறிவுக் கூர்மை உடைய மிதுன ராசி நேயர்களே!**

நுணுக்கமான பணிகளைத் திறம்பட முடிக்கும் திறமை உங்களிடம் உண்டு. ஆழ்ந்த சிந்தனை உடைய நீங்கள் பணியில் மூழ்கினால், சுற்றுச் சூழலையே மறந்து விடும் இயல்புடையவர்களாக இருப்பீர்கள். இந்தத் தமிழ்ப் புத்தாண்டில், சனி பகவானின் அருளால், எதிலும் வெற்றி அடைவீர்கள். புதிய மனைகள் வாங்கும் யோகம் உண்டாகும். பகலவனைக் கண்ட பனிபோல் பகைவர்கள் மறைந்து விடுவார்கள்.

நீண்ட நாட்களாய் நிலுவையில் இருந்த வழக்குகள், உங்களுக்குச் சாதகமான விதத்தில் முடியும். நில புலன்களின் மூலம் வரும் வரவு கணிசமாக உயரும். உங்கள் பேச்சு சாமர்த்தியத்தால் எதிரிகளையும் வசப் படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொள்வீர்கள். நீண்ட காலத் தவணையில் போட்டு வைத்த தொகையினை, சுபகாரியங்களுக்கு எடுத்து செலவு செய்யும் சூழல் உண்டாகும். உங்களின் அறிவாற்றல் பளிச்சிடும்.

**பெண்களுக்கு :**

சனி பகவான் சாதகமாக இருப்பதால், எந்த செயலிலும் துணிவுடன் இறங்குவீர்கள். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கால நேரம் பார்க்காமல் கடினமாக உழைக்கும் உங்களை, உங்கள் துணைவர் பாராட்டி மகிழ்வார். உங்கள் உடன் பிறந்தவர்கள், தகுந்த சமயத்தில் உதவி செய்வார்கள்.

வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். விலை உயர்ந்த ஆடை அணிகலன்கள் வந்து சேரும். மற்றவர்களை நம்பி முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டாம். கணவன் வழி உறவில் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும்.

விருந்தினர் வருகையால் இல்லம் கலகலப்பாய் இருக்கும். வேலை தேடும் பிள்ளைகளுக்கு நல்ல வேலை அமையும். மங்கள காரியங்களுக்காக நீங்கள் எடுக்கும் முயற்சிகள் கைகூடும்.

சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களுக்கு:**

கல்வியில் இருந்து வந்த தடைகள் விலகும் நேரமிது. நண்பர்களிடையே சிறு சிறு பூசல்கள் வந்து போகும். எனவே கடந்த கால விஷயங்களைப் பற்றிய விமர்சனங்களில் ஈடுபட வேண்டாம். அமைதியாக இருந்தால், சீறி வரும் பிரச்சனைகளும் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிடும்.

உங்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் தரும் ஆலோசனைகளின்படி நடந்தால் எதிலும் வெற்றி தான்! நீங்கள் ஓட்டும் வாகனங்களில் உள்ள பழுதுகளை உடனடியாகச் சீர்செய்து விடுங்கள். கணினி பாடம் படிப்பவர்கள், கண்களின் பராமரிப்பிற்கென்று சிறிது நேரம் ஒதுக்குவது நல்லது.

**பணிபுரிபவர்களுக்கு:**

உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணியை குறித்த நேரத்தில் முடித்து விட்டால், எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. உடன் பணிபுரிபவர்கள் செய்யும் தவறுகளை இதமாகச் சுட்டிக் காட்டினால், உங்களின் வார்த்தைக்கு எப்போதும் மதிப்பிருக்கும்.

அரசுத் துறையில் பணியாற்றும் சிலர் வெளிநாடுகளில், பயிற்சியுடன் கூடிய பணிக்கு அனுப்பப்படும் பொன்னான வாய்ப்பை பெறுவார்கள். முடியாத விஷயத்திற்கு வாக்குக் கொடுத்துவிட்டு அவதிப்படாதீர்கள்.

நீங்கள் எடுக்கக் கூடிய தைரியமான முடிவுகளுக்கு உடனடி நற்பலனும் பாராட்டும் கிடைக்கும். தொலை தூரத்திலிருந்து வரும் செய்திகள் நன்மையைக் கொண்டு வரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

பிறர் தூண்டுதலுக்கு இரையாகாமல், உறுதியுடன் இருக்க வேண்டிய காலமிது. உங்கள் திறமைக்கு ஏற்ற காரியங்களில் ஈடுபடுங்கள். வீணான வாக்குவாதம், கோபம் ஆகியவற்றை அண்ட விடாமல் இருங்கள்.

நல்ல நட்பும், நல்லோரின் ஆதரவும் துணையாய் இருக்கும். பாராட்டத்தக்க அளவில் உங்கள் யோசனைகள் இருந்தாலும், அவற்றை செயல்படுத்தும் போது அவசரம் காட்டாதீர்கள்.

தகுந்த சமயத்தில் பயன்படுத்தினால், உயர்நிலையை அடைவீர்கள்.



அன்றாட வேலைகளைப் பட்டியலிட்டுச் செய்தால், நன்மைகள் தொடர்ந்து வரும், உங்கள் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அவ்வப்போது தோன்றும் பிரச்சனைகளை, மனம் விட்டுப் பேசித் தீர்த்து விடுதல் சிறந்தது.

**கலைஞர்களுக்கு:**

நீங்கள் எதிர்பார்க்கும் சலுகைகள் கிடைக்கும். வெளியூர் வாய்ப்புகள் வந்தாலும் சிலசமயம் எதிர்பார்த்த லாபம் இராது. உங்களின் வாழ்வில் இனிய சம்பவங்கள் நடைபெறும். விரும்பிய நபரே வாழ்க்கைத் துணையாக வருவதால் மகிழ்ச்சியில் திளைப்பீர்கள். சிலருக்கு அசையாச் சொத்து வாங்கும் யோகம் உண்டாகும்.

பழைய கடன்களையெல்லாம் அடைத்து விடுவீர்கள். மக்கள் நற்பணி மன்றம், கலைத்துறை ஆகியவற்றில் நீங்கள் காட்டும் ஈடுபாட்டால், புகழும் பெருமையும் உங்களைத் தேடி வரும். உங்களை ஓரம் கட்டிய பழைய நண்பர்கள், மீண்டும் வருவார்கள். தொழில் நிமித்தம் சில சங்கடங்களையும், நெருக்கடியான சூழலையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும். கலைஞர்களுக்கு 'கிசு கிசு' தொல்லைகள் நீங்கும்.

> **வாஸ்து**
>
> மிதுன ராசியின் 4 ஆம் இடம் தெற்கு திசையைக் குறிக்கிறது. மிதுன ராசி மேற்கு திசைக்குரியது. எனவே வீடு கட்டும்போது தலைவாசல் தெற்கு அல்லது மேற்கு நோக்கி இருக்க வேண்டும்.

**வியாபாரிகள்:**

கூட்டாளிகளிடையே நிலவி வந்த குழப்பமும் குதர்க்கங்களும் விலகிவிடும். புதிய முயற்சிக்கு உற்சாகத்துடன் துணையிருப்பார்கள். விஸ்தரிப்புப் பணிகள் நீங்கள் நினைத்தபடி நடக்கும். சொத்துத் தகராறு சுமூகமாக முடியும்.

இயந்திரப் பணிகள் லாபம் தரும். திரவப் பொருட்களால் அதிக லாபம் பெறலாம். தொழிலில் தோன்றும் எதிர்ப்புக்களை பக்குவமாகச் சமாளித்து விடுவீர்கள்.

புதிய யுக்திகளால் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 3, 7, 8 ஐக் கொண்டவர்களுக்கு நல்ல காதனை புரியும் காலம். உங்களது திறமைகள் மற்றவர் புரிந்து கொள்ளும் ஆண்டு. சுப காரியங்கள் நடந்தேறும். பிறப்பு எண், விதி எண் 2, 5 ஐக் கொண்டவர்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும்.**

**முயற்சி அதிகம். வெற்றி குறைவு. பிறப்பு எண், விதி எண் 1,6,4,9 ஐக் கொண்டவர்களுக்கு இந்த ஆண்டு யோகமில்லாத ஆண்டு. பிறரோடு சேர்ந்து செய்யும் காரியம் வெற்றி தரும்.**

## நட்சத்திரப் பலன்கள்:

**மிருகசீரிடம் 3,4 பாதங்கள்:**

தொழிலாளர்களது விருப்பம் நிறைவேறும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி உண்டாகும். கலைஞர்களின் நிலை உயரும். தெய்வப் பணிகள் நிறைவேறும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் உணர்வுக்கு மதிப்பளிப்பார்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

சில வேலைகளை அலைந்து திரிந்தே முடிக்க நேரிடும். சிலர் தடைப்பட்ட கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

வேலைச் சுமை அதிகரித்தாலும் மன நிறைவு கிடைக்கும். பாதியில் நிறுத்தப்பட்டிருந்த கட்டிட வேலைகள் விரைவில் முடியும்.

சுற்றத்தார் சிலரின் சுய ரூபங்களை கண்டறிவீர்கள். வெளியூர்ப் பயணங்களால் புதிய அனுபவம் கிடைக்கும். மறைமுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளுக்குப் பதிலடி கொடுப்பீர்கள்.

**திருவாதிரை 1,2,3,4 பாதங்கள்:**

உத்தியோகத்தில் தொல்லைகள் அகலும், கொடுக்கல் வாங்கல் திருப்தி தரும். புதியவர்கள் மூலம் எதிர்பாராத உதவி கிடைக்கும். சகோதர சகோதரிகள் மனக் கசப்பு நீங்கி மீண்டும் அன்பைக் காட்டுவார்கள். குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வேண்டுதலை நிறைவேற்றுவீர்கள்.

வீடு கட்டும் பணி முழுமை அடையும். வியாபாரிகளுக்கு, கலைச் சாதனப் பொருட்கள், உணவு வகைகள் ஆகியவற்றால் லாபம் கிட்டும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

குறை கூறியவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உங்கள் வேலையை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களது நினைவாற்றல் பெருகும்.

பிள்ளைகளின் திறமை பலராலும் பாராட்டப்படும். வெளிநாட்டு நண்பர்களால் நன்மை உண்டு.

**புனர்பூசம் 1,2,3 பாதங்கள்:**

பெற்றோரின் பாச மழையில் நனைவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளிடம் நல்ல மாற்றங்கள் தென்படும். புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

இழுபறியான காரியங்கள் முடிவடையும். பழைய கடனை அடைக்க புதிய வழி பிறக்கும். தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்த்தல் நலம்.

வாகனத்தில் செல்லும் போது கவனத்தைச் சிதறவிடாதீர்கள். அடகில் இருக்கும் நகைகளை மீட்பீர்கள். கலைத்துறையினருக்கு மூத்த கலைஞர்களது பாராட்டு கிடைக்கும்.

வீடு-மனை வாங்குவது மற்றும் விற்பதில் மந்த கதி ஏற்பட்டு விலகும்.

தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. வெகு நாட்களாக பார்க்க நினைத்த நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**ஆலய பரிகாரம்**

உங்கள் ராசி நாதனான புதனின் அம்சம் பெற்ற மகாவிஷ்ணுவை வணங்கி, அவருக்குப் பிரியமான துளசி மாலையை அணிவித்து வாருங்கள்.

துயரங்கள் அனைத்தும் நீங்கி விடும்.

சக்கரத்தாழ்வாரை மலர்களால் மகிழ்வித்து வழிபடவும்.

## சோதிடம் ஒரு தெய்வீகக் கலை

16 ஆம் பக்கத்தொடர்ச்சி...

**சாமக்கோள் ஆருடம்:**

இந்த முறையிலும், மனதை கலங்க வைக்கும் பிரச்னைக்கான விடைகள் கிடைக்கும். சாமங்களை வைத்து பலன்கள் கூறப்படுவதால் சாமக்கோள் ஆருடம் என்று அழைக்கப்படுகிறது.

பகலில் 12 லக்னம், இரவில் 12 லக்னம், பகலில் 8 சாமம், இரவில் 8 சாமம். கேள்வி கேட்கும் நேரத்திற்கு ஏற்ப, சாமங்களில் உள்ள கிரகங்களின் நிலைக்கேற்ப பலன்கள் சொல்லப்படுகின்றன.

**தாம்பூலப் பிரச்னம்:**

சோதிடர்களை நாடி வருபவர்கள் கொண்டு வரும் தாம்பூலத்தின் எண்ணிக்கையின் அடிப்படையில் பலன்கள் சொல்லப்படும்.

**விவசாய சோதிடம்:**

இதுவும் சோதிடத்தில் ஒரு பிரிவு. வயலில் எந்தப்பயிர் போடலாம், எப்போது மழை அதிகமாய் வரும், எப்போது விதை விதைக்கலாம், எப்போது தானியங்களை களஞ்சியத்தில் சேர்க்கலாம் - ஆகியவற்றிற்கு உகந்த கால நேரத்தை பற்றிக் கூறுவது.

இது மட்டுமின்றி, உழவர்களுக்குத் தேவையான ஏர் உழுதல், எரு விடுதல், உரம்போடுதல் ஆகிய விஷயங்களைப் பற்றியும் விவசாய சோதிடம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வியாபார சோதிடம்:**

தானியங்கள், தங்கம், வெள்ளி மற்றும் வியாபாரப் பொருட்களின் ஏற்ற இறக்கம், பங்குச் சந்தை நிலைவரம், புதுக்கணக்கு தொடங்க ஏற்ற நேரம் ஆகியவற்றை அறிந்து கொள்ள வியாபார சோதிடம் உதவும்.

**சீட்டுக்கட்டு சோதிடம்:**

மேல் நாடுகளில் இந்த முறை பிரபலமாக உள்ளது. சீட்டுக்கட்டில் வரும் படங்கள், வண்ணங்கள் இவற்றின் அடிப்படையில் பலன்கள் சொல்லப்படும்.

**மருத்துவ சோதிடம்:**

ஒருவரின் ஜாதகத்தின் அடிப்படையில் என்ன நோய், அது எப்போது தீரும், அறுவை சிகிச்சை எப்போது வைத்துக்கொள்ளலாம், எப்போது மருந்துண்ணலாம் என்றெல்லாம் அறிந்து கொள்ள முடியும்.

**குறி சோதிடம்:**

கையில் பிரம்பை வைத்துக்கொண்டு, கேள்வி கேட்பவரின் மனநிலையையும் கருத்தில் கொண்டு சொல்லப்படுவது.

இதைத்தவிர பல்லி விழும் பலன், பல்லி சொல்லுக்கு உரிய பலன், சீதை, ராமர் சக்கரம் ஆகியவையும் உள்ளன.

இவ்வளவு வகை சோதிடம் இருப்பதற்கு ஒரு வலுவான காரணம் உள்ளது. அது பிரச்னைகளுக்கு உரிய தீர்வு. மனிதன் நாள்தோறும் வாழ்வில் பல வகையான. பிரச்னைகளை சந்தித்துக்கொண்டிருக்கிறான்.

ஏதாவது ஒரு வழி மூலம் அதற்கான விடை கிடைத்தால் சரி, இந்தத் தேடலின் விளைவுதான் இத்தனை வகை சோதிடம். மனிதனின் பிரச்னை தீர, நவக்கிரகங்கள் எப்போதும் துணையாய் இருக்கும்.

-திருமதி காயத்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கடகம்

**(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம் 1,2,3,4, பாதங்கள், ஆயில்யம் 1,2,3,4, பாதங்கள்)**

## இளகிய மனம் கொண்ட கடக ராசி நேயர்களே!

எடுத்த முயற்சி அனைத்திலும் சாதனை படைக்கும் நீங்கள், சில சமயம் சிறிய விஷயங்களுக்கு கவலைப் படுவீர்கள். துன்பப்படுபவர்களுக்கு, வலியச்சென்று உதவி புரிவீர்கள். இந்த தமிழ்ப் புத்தாண்டில், சில சமயங்களில் மலையைக் குடைந்து எலியைப் பிடிக்க வேண்டியிருக்கும். உங்கள் வைராக்கியத்தால் வெற்றி அடைவீர்கள். நீண்ட காலப் பகை நீங்கிவிடும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

கூட்டுத் தொழில் செய்பவர்கள் கவனமாக இருந்தால் நஷ்டம் வராமல் தடுத்துக் கொள்ளலாம். புதிய முயற்சிகளில் தாமதமாக பலன்கள் கிடைக்கும். வாய்ப்புகள் வரும் வரை காத்திராமல் முழு மூச்சுடன் செயல்பட்டால், வெற்றி இலக்கை அடைய முடியும். குடும்ப விஷயங்களில் அனுசரித்துச் சென்றால் அமைதி நிலவும். எடுக்கும் பணியில் நிதானத்துடன் செயல்பட்டால், சிக்கல் வராது.

**பெண்களுக்கு:**

உங்களை யார் எப்படி விமர்சித்தாலும், அதனைப் பொருட்படுத்தாமல் இருந்தால், இனிமையான சூழ்நிலை நீடிக்கும். திடீரென பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். கையில் காசு இருந்தாலும் இல்லாவிட்டாலும் காரியத்தை முடிக்கும் ஆற்றலால், எந்தச் சூழ்நிலையிலும் ஜெயித்து விடுவீர்கள். தன்னம்பிக்கை உங்கள் முயற்சிக்குத் தக்க விதத்தில் துணை புரியும். பொருளாதாரம் ஓரளவு நன்றாக இருக்கும்.

உங்களின் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் சிலர், அயல்நாடு சென்று உயர்கல்வி பெறும் வாய்ப்பு உண்டாகும். கர்ப்பிணிப் பெண்கள் அதிக கவனத்துடன் செயல்படுவது நல்லது. பூர்வீகச் சொத்தில் அதிக முதலீடுகள் வேண்டாம். துணைவரின் ஒத்துழைப்பால், உங்களின் பணி சிறக்கும். உறவின் இழைகள் விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறவினர்கள் வலிய வந்து உதவி செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீஅவ்வை ஹோம்

(Registered as a Public Chartitable Trust)

4, Appavoo Gramani 3rd Street, R.A.Puram, Chennai-28
S.INDIA, Ph: +9144 - 3200 4200 Fax: +9144 - 4206 6525



## ஆதரவற்ற அன்னையருக்கு புகலிடம் அளிக்கும் ஓர் அன்பாலயம்!




பேரன்புடையீர் வணக்கம்! வேதமாதா காயத்ரி தேவியின் பேரருளாளும் அவ்வையாரின் திருவருளாளும் சமுதாயத்தினரால் நிராகரிக்கப்பட்ட பெண் முதியோர்களுக்கு அடைக்கலம் அளித்து அவர்களுடைய நலனுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது ஸ்ரீ அவ்வை ஹோம். ஆதரவின்றித் தவிக்கும் வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் இலவசமாகப் பூர்த்தி செய்து, தினசரி இறைவழிபாடு, தியானம், கூட்டு பிரார்த்தனை செய்து பராமரித்து வருகிறோம். அன்னையர்களின் கூட்டுப் பிரார்த்தனையால் தங்களின் கோரிக்கைகள் நிறைவேறும். ஆதரவற்ற அன்னையரின் வாழ்வில் மகிழ்ச்சி, மலர்ச்சி, வாழ்க்கையில் பிடிப்பு ஆகியன ஏற்படுத்தித் தர உங்கள் அன்பளிப்புகளையும் நன்கொடைகளையும் பொருளாகவோ தொகையாகவோ அனுப்பி உதவுங்கள். வயதான அன்னையருக்கு தாங்கள் செய்யும் சிறு உதவியும் நம்மை பெற்று சீராட்டி வளர்த்த அன்னையரின் உள்ளத்தை குளிரச் செய்வதற்கு இணையாகும்.

- ஒரு நாள் காலை உணவுக்கு ரூ.400/- அனுப்பும் அன்பர்களுக்கு துளசி மாலை அனுப்பி வைக்கப்படும்
- ஒரு நாள் மதிய உணவுக்கு ரூ.450/- அனுப்பும் அன்பர்களுக்கு ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்
- ஒரு நாள் இரவு உணவுக்கு ரூ.350/- அனுப்பும் அன்பர்களுக்கு நவரத்தின மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்
- ஒரு நாள் உணவுக்கு ரூ.1100/- அனுப்பும் அன்பர்களுக்கு ஸ்படிக மாலை அனுப்பி வைக்கப்படும்
- 10 நாட்கள் உணவுக்கு ரூ.11,000/- அனுப்பும் அன்பர்களுக்கு பவள மாலை ஒன்று அனுப்பி வைக்கப்படும்
- அன்னையர் ஒருவருக்கு ஒரு வருட மருத்துவச் செலவு ரூ.1300/- அனுப்பும் அன்பர்களுக்கு சந்தன மாலை அனுப்பி வைக்கப்படும்
- காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்பும் அன்பர்களுக்கு முத்துமணி மாலை அனுப்பி வைக்கப்படும்

தங்களின் திருமண நாள், பிறந்த நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், பண்டிகை நாட்கள், அமாவாசை மற்றும் பௌர்ணமி, கிருத்திகையில் வயதான அன்னையர்களுக்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

## ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீஅவ்வை ஹோமில் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணம் ரூ.300/-



காயத்ரி என்பதன் பொருள் தன்னை துதிப்பவனை, ஜபிப்பவனை காப்பாற்றுவது என்பது பொருள். காயத்ரி வழிபாடு நமக்கு நீண்ட ஆயுளையும் ஆற்றலையும், புகழ், செல்வத்தையும் அளிக்கிறது. காயத்ரி மூல மந்திரம் பாவங்களை அழித்து, புண்ணியத்தை வளர்ப்பதற்கு தோன்றிய மந்திரமாகும். நோய் நொடிகளை தவிடுபொடியாக்கும் சக்தி இதற்கு உண்டு. குடும்ப பிரச்னைகள், தோஷங்கள், வியாபார தடைகளை போக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இந்த காயத்ரி ஹோமத்தில் பங்கு பெற சங்கல்ப கட்டணமாக ரூ.300/- அனுப்பும் அன்பர்கள் தங்களுடைய பிரார்த்தனைகளையும், கோத்ரம், ராசி, நட்சத்திரத்தையும் தெளிவாக எழுதி அனுப்பினால், தங்களுடைய பிரார்த்தனைகளுக்கு ஏற்ப தனித் தனியாக சங்கல்பம் செய்து, ஹோம பிரசாதத்துடன் ஸ்ரீகாயத்ரி யந்திரம், ஸ்ரீ காயத்ரி மகா மந்திரம், மகா மிருத்யுஞ்சை மந்திரம் மற்றும் ஜெப மாலா அடங்கிய சிடியும், காயத்ரி வண்ணப்படமும், காயத்ரி தேவி ரக்ஷை மற்றும் ஹோம பஸ்பமும் அனுப்பி வைக்கப்படும். காயத்ரிதேவியின் மகா மந்திரம் அனைத்து இல்லங்களிலும் ஒளித்து ஐஸ்வர்யம் பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

வயதான அன்னையரை பாதுகாக்கவும் ஸ்ரீகாயத்ரி ஹோமத்தில் பங்கு பெறவும் தங்கள் நன்கொடையை மேற்கண்ட முகவரிக்கு Cheque/DD/MO மூலமாக SRI AVVAI HOME, CHENNAI என்ற பெயருக்கோ அல்லது N.MANICKARAN என்ற பெயருக்கு WESTERN UNION MONEY TRANSFER மூலம் ரூபாயை சென்னைக்கு அனுப்பி காயத்ரி தேவியின் திருவருளால் பூரண ஆயுளும் ஆரோக்கியமும் பெற்று, துன்பங்கள் நீங்கி, புகழ் மிகுந்த வாழ்க்கை பெற அன்புடன் வேண்டுகிறோம்.

## நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

ஆதரவற்ற அன்னையரை ஸ்ரீஅவ்வை ஹோமில் சேர்க்க: 98843 43436 (24 Hrs)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர்களுக்கு :**

கல்வி விஷயத்தில் மெத்தனமாய் இராமல், கவனத்துடன் இருத்தல் அவசியம். எழுத்துப் பணி எதுவாக இருந்தாலும் உடனுக்குடன் முடித்து விடுங்கள். வேலைப்பளு அதிகரிக்காது.

பிடிவாதத்திற்கும், முன் கோபத்திற்கும் இடம் தராமல், செயலாற்றினால் வெற்றி உங்களதே! நண்பர்கள் விஷயத்திலும், பணம் செலவழிப்பதிலும் அளவோடு இருங்கள். ஆசிரியர்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொண்டால், தேர்வு சுமையாய் தோன்றாது.

உயர்கல்வி பயில விரும்பு கிறவர்களின் ஆசை நிறைவேறும். புதிய இடங்களுக்குச் செல்கையில், அறிமுகம் ஆகாதவரை நம்பி ஏமாந்து விடாதீர்கள். கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உங்களின் நினைவாற்றல் அதிகரிக்க, முக்கியமான விடைகளை எழுதிப் பாருங்கள். மதிப்பெண்கள் கணிசமாய் கூடும்.

*தினமும் சந்திர காயத்ரீயை 108 முறை சொல்லி வாருங்கள். எல்லா நலமும் பெற்று உயர்வீர்கள்.*

**சந்திர காயத்ரீ**

**பத்ம த்வஜாய வித்மஹே**
**ஹேம ரூபாய தீமஹி!**
**தந்நோ ஹேம ப்ரசோதயாத்**

**பணி புரிபவர்களுக்கு:**

உயர் அதிகாரிகளின் மனப் போக்கையறிந்து செயல்படுவது நல்லது. சக பணியாளர்களின் நலனில் நீங்கள் காட்டும் அக்கறை யால், பிரச்சனைகளும் தீர்ந்து விடும். உங்கள் பணியும் தொடர்ந்து நடைபெறும். வாட்டி வதைத்த வேலைச் சுமை சற்றே குறையும். சாதுரியப் பேச்சால் சில காரியங் களை எளிதில் சாதித்து விடுவீர்கள்.

பழைய வாகனத்தை மாற்றி விட்டு, புது வாகனங்கள் வாங்குவீர் கள். மற்றவரால் கிடப்பில் போடப் பட்ட பணிகளை முடிப்பதற்காக, கண்விழிக்க வேண்டியிருக்கும். முக்கியமான கோப்புக்களை உங்களின் நேரடி கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நேரம் விரயமாகாமல் விரைந்து பணியாற்ற லாம்.

கடன்கள் படிப்படியாக குறை யும். இடமாற்றங்களுக்கான விண் ணப்பங்கள் சாதகமாய் முடியும். பிரிந்திருந்த சிலர், குடும்பத்துடன் இணைந்து மகிழ்வார்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர் கள்:**

கூட இருந்தே குழி பறிப்பவர் களை இனங்கண்டு ஒதுக்கி விடுங்கள். உங்கள் பணியை ஒழுங் காகச் செய்து முடித்தால், உயர் பதவிக்கான பட்டியலில் உங்கள் பெயர் இருக்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் உண்டானாலும், நீங்கள் நினைத்த காரியம் பலிதமாகும். மறைமுகப் போட்டிகளை முறியடிப்பீர்கள்.

உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பால் கடினமான பணிகளையும் திறம்பட முடிப்பதால் உங்களின் ஆதரவு பெருகும். சிலர் பொறுப்பான புதிய பதவியில் அமர்வார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றி விட முடியும்.

**கலைஞர்களுக்கு**

உங்களின் திறமைக்கு முன்னால் போட்டியும், பொறாமையும் ஓடி ஒளிந்து கொள்ளும். தொழில் ரீதியாக உயர்வான நற்பலன்களைப் பெறுவீர்கள். முன்கோபத்தை தவிர்த்தால் பெரிய மனிதர்களின் தொடர்ந்த ஆதரவு கிடைக்கும்.

புதிய கூட்டாளிகளால் அனுகூலப் பலன்கள் உண்டாகும். உங்களின் நட்பு வட்டம் பெரிதாகும். நூதன வகை ஆபரணங்களையும், கலைப் பொருள்களையும் வாங்கி மகிழ்வீர்கள். வரவுக்கு மீறிய செலவுகளுக்கு இடமளிக்காதீர்கள்.

எவ்வளவு அதிகமான பணி யிருந்தாலும், வேளை தவறாமல் உணவு உண்டு விட்டால், ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எங்கு சென்றாலும் சக கலைஞர் களோடு இணைந்து பணியாற்றி னால், பாராட்டுகள் வந்து குவியும். பணப் புழக்கத்தில் சிக்கல் இராது. எனினும் கடன் கொடுப்பதில் எச்சரிக்கை தேவை. கேளிக்கை, விழாக்கள் என்று உற்சாகமாய் இருப்பீர்கள்.

**வாஸ்து**

கடக ராசிக்கு 4 ஆம் ராசி துலாம் ராசி. அது மேற்கு திசையைக் குறிக்கும். கடக ராசி வடக்கு திசைக் குரியது. எனவே வீடு கட்டும்போது தலைவாசல் மேற்கு அல்லது வடக்கு திசையை பார்க்குமாறு கட்டவும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் ரீதியாக நினைத்ததைச் சாதிப்பீர்கள். கொடுக்கல் வாங்கல் நல்ல முறையிலேயே இருந்து வரும் நிலுவைக் கொடுப்பனவுகள் வசூலாகி விடும். கூட்டுத் தொழிலில் இருப்ப வர்கள், கணக்குகளை ஒழுங்காகப் பராமரித்து வந்தால், அரசின் சலுகை களைப் பெறலாம்.

மருந்துப் பொருள்கள், கனினி உதிரிப் பாகங்கள், துணி வகைகள் போன்றவை கூடுதல் ஆதாயம் தரும். நம்பிக்கையான ஒருவர் உங்க ளுக்கு உதவி செய்ய முன்வருவார். குழப்பமான பிரச்சனைகள், முடிவில் பெரும் வெற்றியைத் தந்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலர் வசதியான பெரிய வீட்டில் குடியேறு வார்கள்.

இரவு நேரப் பயணம், அகால உறக்கம், இரண்டையும் அணுக விடாமல் இருந்தால், உங்கள் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். எதிர்பாராத தன வரவு தாராள மாகவே கிடைக்கும். தொழிலில் இருந்த கெடுபிடிகள் குறைந்து விடும். வாடிக்கையாளரின் ஆதர வால், புதிய கிளைகள் தொடங்குவீர் கள். கொள்முதல் செய்யும் பொருள் களுக்கு, தகுந்த காப்பீடு செய்து கொள்வது நன்மையைத் தரும்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 1,5 ஐக் கொண்டவர்களுக்கு சுப காரியங்கள் நடக்கும். பிறப்பு எண், விதி எண் 3,6 ஐக் கொண்ட வர்களுக்கு தாமதமாக வெற்றி கிடைக்கும்.**

**பிறப்பு எண், விதி எண் 2,4,7,8,9 ஐக் கொண்டவர்களுக்கு தளர்ச்சி, சலிப்பு, மன உளைச்சல் அதிகம்.**

**நட்சத்திரப் பலன்கள்:**

**புனர்பூசம் 4-ம் பாதம்:**

மாணவமணிகளில் சிலர், படிப்பு முடியும் முன்னரே வேலைக்கான உத்தரவைப் பெற்று மகிழ்வார்கள். தாராளமான பணப் புழக்கத்தால், சிலர் நிலம், வீடு போன்ற அசையாச் சொத்துக்களில் முதலீடு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபம் அடைவார்கள். வங்கிகளில் நீங்கள் எதிர்பார்த்திருந்த கடன் விரைவாகக் கிடைக்கும்.

வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்க விரும்புவோரின் எண்ணம் இனிதே நிறைவேறும். பணியில் உள்ள சிலர், விருப்ப ஓய்வு பெற்று, வியாபாரத்தில் ஈடுபட்டு லாபம் ஈட்டுவார்கள்.

நீண்ட காலமாய் நடந்து வந்த வழக்குகளில் வெற்றி உண்டாகும். குடும்பத்துடன் பயணம் செய்து திருத்தலங்களை தரிசனம் செய்து மகிழ்வீர்கள்.

### பூசம் 1,2,3,4 பாதங்கள்

பகைமை கொண்டிருந்த உறவினர்கள் மனம் மாறி உங்களிடம் திரும்பி வருவார்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடை பெறும் வாய்ப்பு உண்டாகும். கைப் பணத்தைப் பார்த்துச் செலவழி யுங்கள்.

கடன் வாங்க வேண்டியிராது. இதுவரை வேலையில்லாமல் இருந்தவர்கள், நல்ல வேலையில் அமர்வார்கள். படிப்பில் மட்டு மின்றி, விளையாட்டுகள், போட்டி கள் ஆகியவற்றிலும் மாணவர்கள் வெற்றி வாகை சூடுவார்கள்.

### ஆயில்யம் 1,2,3,4 பாதங்கள்:

குடும்பத்தின் கலகலப்புக்கு இடையே சலசலப்பும் அவ்வப் போது தலைகாட்டும். எனவே அனுசரித்து நடந்து கொள்ளுங்கள்.

பொருளாதாரம் திருப்திகரமாய் இருக்கும். உடல் நலத்தில் சிறு உபாதைகள் தோன்றி மறையும். வேற்று மொழி மதத்தினரால் நன்மை அடைவீர்கள்.

### ஆலய பரிகாரம்

உங்கள் ராசிக்கு அதிபதியான சந்திர பகவானின் அருளைப் பெற, திங்கள்கிழமை தோறும் அவரை தரிசனம் செய்யுங் கள். சிறப்பான வாழ்வையும், வளத்தையும் வாரித் தருவார்.

தமிழ்நாடு ஈரோடு அருகில் உள்ள திருச்செங் கோடு அர்த்த நாரீஸ் வரரை தரிசித்து மலர்களால் அர்ச் சனை செய்யவும். திருப்பதி ஏழுமலையானை மனம் குளிர தரிசித்து வரவும்.

# ஓர் உண்மைக் கதை

- யோகி ஸ்ரீ இராமானந்த குரு



அருள் நிறைந்த நமது முனிவர்கள் மனிதனின் துன்பங் கள் மாறவும், இன்பங்கள் வளர வும் பல வழிமுறைகள் நமக்கு தந்து இருக்கிறார்கள். அந்த வழி கள் எவை என்று அறியாமல், அல்லது அறிந்து கொள்ள முயற்சிக்காமல், நம் வாழ்க்கை யைப் பல நேரங்களில் சோதனைக் காடுகளாக ஆக்கிக் கொள்கிறோம்.

சில நேரங்களில் வழி தெரிந்தும்கூட செய்வதற்கு மனம் இல்லாமல், சோம்பேறித் தனத்தால் துன்பச் சுமைகளைத் தொடர்ச்சியாக சுமந்து கொண்டு திரிகிறோம். இப்படித்தான் வெகு நாட்களுக்குப் பிறகு, எனது அன்பர் ஒருவரைச் சந்திக்க நேரிட்டது. அவர் எப்போதுமே சிரித்த முகமும், நன்னடத்தையும் உடையவர். அவர் இப்போது முற்றிலுமாக மாறிப்போய் இருந்தார். களை இழந்த முகம், குழி விழுந்த கண்கள், திடமில்லாத பேச்சு இவற்றோடு அவரைப் பார்த்தபோது மனதிற்கு சங்கடமாகத்தான் இருந்தது. அவரோடு வேறு சில விடயங்களைப் பேசிவிட்டு, இந்த நிலைக்கு என்ன காரணம் என்ற கேள்வியை வைத்தேன். ஆழமான பெருமூச்சினை வெளியிட்ட அவர் தனது சோகங்களைச் சொல்ல ஆரம்பித்தார்:

நான்கு வருடங்களுக்கு முன்பு எனது தந்தையார் புது வீடு ஒன்றைக் கட்டினார். சொந்த வீடு கட்ட வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் கனவு. கனவு நிறைவேறிய மகிழ்ச்சியில் கிரகப்பிரவேசம் செய்ய ஆரம்பித்தோம். அன்று அதிகாலையில் பூஜைகளுக்கான ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்தபோது, மின்சாரம் வழக்கம்போல் தடைபட்டது. எங்கள் மனதில் இது ஒரு அபசகுனம்போல் தோன்றினாலும், அப்பா எங்களை ஆறுதல்படுத்தி னார். "செயற்கை முறையில் உருவான விளக்குகள் அணைவதில் எந்தத் தவறும் இல்லை. இதோ பார், குத்துவிளக்கில் இயற்கையான சுடர் ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது. எனவே மனம் கலங்காது பூஜை வேலைகளைத் தொடருங்கள்" என்றார்.

அவரின் இந்த ஆறுதலான பேச்சு அந்த நேரம் நிம்மதியை தந்தாலும், அடுத்த சில நிமிடங்களில் புதிய அச்சம் எங்களிடத்தில் குடி கொண்டது. கணபதி ஹோமத்தை ஆச்சாரியார் தொடங்கும்போது, குத்துவிளக்கின் தீபம் திடீரென குளிர்ந்துவிட்டது. அப்போதும் அப்பா ஆறுதல் சொன்னார். ஆனால் எங்கள் மனக்கலக்கம் தீரவில்லை. எப்படியோ கிரகப்பிரவேசம் நிறைவேறியது. சில நாட்களில் நன்றாக நடமாடிக்கொண்டு இருந்த எனது தந்தையார், திடீரென்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தார். அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். ஆனால், மருத்து வர்களைக் காலன் முந்திக்கொண்டான். நாங்கள் சிறு வயதிலேயே தாயாரை இழந்தவர்கள். எங்கள் துயரம் இதோடு நிற்கவில்லை. தகப்பனா ருக்கு வருட திதி செய்வதற்கு முன்பே, ஒரு சிறு மனஸ்தாபத்தால் என் மனைவி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டாள். அவளை நான் கொலை செய்து இருப்பேன் என்று சந்தேகப்பட்ட எனது மைத்துனர்கள் என் மீது வழக்கு தொடர்ந்தனர்.

கதை தொடர்கிறது... செல்க பக்கம் 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிம்மம்

**(மகம் 1,2,3,4, பாதங்கள், பூரம் 1,2,3,4, பாதங்கள், உத்ரம் 1-ம் பாதம்)**

பெருந்தன்மையாய் நடந்து கொள்ளும்

சிம்ம ராசி நேயர்களே!

எல்லா விஷயத்திலும் முதலிடம் பெற விரும்புவீர்கள். சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் விளங்கும் நீங்கள், சவாலான பணிகளையும் சிரமமின்றி முடிப்பீர்கள். தலைமை தாங்கும் குணத்தால் புதிய சிகரங்களை அடைவீர்கள். நல்லோரின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். திருமணம், வளைகாப்பு ஆகிய சுபநிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடந்தேறும். விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவற்றால் இரட்டிப்பு சந்தோஷம் கிடைக்கும். பிள்ளைகளால் அனுகூலம் உண்டு. கலைஞர்களும், மாதர்களும் வெற்றி நடைபோடுவார்கள். ஆபரண வியாபாரிகள் அதிக லாபம் அடைவார்கள். கூட்டுத் தொழிலில் அதிரடி மாற்றங்களை நிகழ்த்துவீர்கள். தள்ளிப் போன வியாபார ஒப்பந்தங்கள் மீண்டும் கையெழுத்தாகும்.

**பெண்களுக்கு:**

சுப நிகழ்ச்சிகள், விருந்து, விழா என்று பரபரப்பாய் இருப்பீர்கள். உறவினரோடு உரையாடி மகிழும் வாய்ப்புகள் வந்த வண்ணம் இருக்கும். பங்காளிச் சண்டை நீங்கும். சொந்த பந்தங்களின் ஆதரவும், அனுசரணையும் பக்கபலமாய் இருக்கும்.

அக்கம் பக்கத்தாரின் அன்புத் தொல்லையைத் தவிர்க்க இயலாது. சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு புதிய தீர்வுகள் கிடைக்கும். வராது என்றிருந்த பணம் வந்து சேரும். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாய் இருக்கும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும்.

உங்களின் திறமையைக் குறை கூறியவர்கள், உங்களின் செயல்திறனைக் கண்டு வியப்படைவார்கள். கன்னிப் பெண்களின் காதல் கைகூடும். புதிய உறவின் வருகையால், இல்லம் கலகலப்பாய் இருக்கும்.

**மாணவர்களுக்கு:**

உங்களின் சிந்தனைத் திறன் பெருகும். ஆசிரியர்களின் அன்பைப் பெறுவீர்கள். பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். பெற்றோரின் அன்பும், அரவணைப்பும் உங்களை உற்சாகப் படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீயவர்களிடம் நெருங்கிப் பழகாதீர்கள். நண்பர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும், நட்பில் விரிசல் விழாது.

தூரதேசம் சென்று கல்வி பயிலும் வாய்ப்புகளை நழுவ விடாதீர்கள். ஆராய்ச்சி, மருத்துவம், கணிதம் பயிலும் மாணவர்கள், துறை சம்பந்தப்பட்ட நிபுணர்களைச் சந்தித்து, சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். சிலர் தனியார் மற்றும் அரசு அளிக்கும் சலுகைகளைக் கட்டணங்களை பெறும் வாய்ப்பினை அடைவார்கள். நல்ல நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள்.

**பணி புரிபவர்களுக்கு:**

தனியார் துறைகளில் உள்ளவர்கள், பொறுமையுடன் பணியில் ஈடுபட்டால், புகழும், செல்வாக்கும் நிலைக்கும். இடமாற்றங்கள் நினைத்தபடி அமையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். தலைமைப் பொறுப்பை ஏற்கும் சூழ்நிலை உருவாகும்.

உத்தியோக உயர்வுக்காக எழுதும் தேர்வுகளில் பலத்த போட்டியிடையே முதலிடம் பெறுவீர்கள். தொல்லை தந்த அதிகாரிகள் வேறிடத்திற்கு மாற்றப்படுவார்கள். வேலைப்பளு அதிகரிக்கலாம். மதிப்பு கூடும்.

இயந்திரம், இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள் கவனத்துடன் செயலாற்றுவதோடு, தகுந்த பாதுகாப்பு விதிகளையும் கடை பிடியுங்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

புறம் பேசக் கூடியவர்களை விலக்கிவிடுங்கள். எந்தப் பணியாய் இருந்தாலும் பொறுமையாகச் செயல் பட்டால் பெருமை நிச்சயம். வீண் புகழ்ச்சிக்கு அடிமையாகாதீர்கள். துணிவுடன் செயலாற்றினால், புகழ் மற்றும் பாராட்டு உங்களைத் தேடி வரும். நல்ல மனிதர்களின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்ளுங்கள்.

ஒப்பந்தங்களில் கையெழுத்து இடும் முன்பு படித்துப் பார்த்தால், வீண் பிரச்சனைகள் வராது. வழக்கு விவகாரங்கள் இழுபறியாய் இருக்கும்.

சிலர் எதிர்பாராத வகையில் புதிய பதவி கிடைக்கப் பெறுவர். விஷய ஞானமும், விவேக புத்தியும் உடைய நீங்கள் அதனைத் தக்க விதத்தில் பயன்படுத்தினால், உங்களின் திறமை பட்டை தீட்டிய வைரமாய் மேலும் பிரகாசிக்கும்.

**கலைஞர்களுக்கு:**

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். பேச்சு வார்த்தைகளில் பொறுமை காத்து, உங்கள் காரியத்தை திறம்பட முடித்துவிடுவீர்கள். எந்த ஊருக்குச் சென்றாலும், மிதமான உணவு வகைகளை மட்டும் எடுத்துச் கொள்ளுங்கள்.

உங்கள் தொழில்மேல் உள்ள பக்தியால், கடுமையான உழைப்பில் ஈடுபடுவீர்கள் அதற்குத் தகுந்த பலனும் இருக்கும். இருந்த போதிலும் ஆரோக்கியத்தில் அலட்சியம் காட்டாதீர்கள். பழைய கடன் பாக்கிகளைத் தீர்த்து விடுவீர்கள்.

உங்கள் நலனில் உறுதுணையாய் இருப்பவர்களின் ஆலோசனைகளை ஏற்றுச் செயல்பட்டால், உங்களின் வளர்ச்சி புது மெருகுடன் திகழும். வெளிநாட்டு பயணங்கள் சில பேருக்கு காமதேனு போல, அள்ள, அள்ள குறையாத பலன்களைத் தரும்.

**வாஸ்து**

சிம்ம ராசிக்கு 4 ஆம் வீடு விருச்சிகம். அதன் திசை வடக்கு. சிம்மத்தின் திசை கிழக்கு. எனவே வீடு கட்டும்போது தலைவாசல் வடக்கு அல்லது கிழக்காக அமைந்தால் நன்மை.

**வியாபாரிகளுக்கு:**

புதிய முயற்சிகள் நல்ல ஆதாயம் தரும். வெளிவட்டாரப் பழக்கத்தினால் உங்களின் நட்பு வட்டம் பெரிதாகும். புதிய துறையில் இறங்கும் முன்பு, ஏற்ற இறக்கங்களை அறிந்து கொண்டால் அதற்குத்தக்கவாறு செயலாற்ற முடியும்.

நம்பிக்கையான வேலையாட்களிடம், பெருந்தன்மையாய் நடந்து கொள்ளுங்கள். உங்களை விட்டு விலகாமல் இருப்பார்கள். கூட்டுத் தொழிலில் உள்ளவர்கள், எந்த சூழ்நிலையிலும் வெற்றுப் பத்திரங்களில் கையெழுத்து போடாதீர்கள்.

கட்டிட சம்பந்தமான தொழில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். முறையான தொழில் வளர்ச்சிக்கு செலவிடும் தொகையால் உங்கள் லாபம் அதிகரிக்கும். சுயதொழில் புரிபவர்களுக்கு அரசின் சலுகைகள் கிடைக்கும்.

**நியூமராலஜி :**

**பிறப்பு எண், விதி எண் 1,3, 9 ஐக் கொண்டவர்களுக்கு பல சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வேலை கிடைக்கும். சொத்து சேரும்.**

**பிறப்பு எண், விதி எண் 5,6 ஐக் கொண்டவர்களுக்கு மத்திம பலன். கூட்டு வியாபாரம் கூடாது. முயற்சிகள் தாமதமாக பலன் அளிக்கும்.**

**பிறப்பு எண், விதி எண் 2,4,7,8 ஐக் கொண்டவர்களுக்கு அவயோகங்கள் நடந்தாலும் பெரிய பாதிப்புகள் இல்லை.**

## நட்சத்திரப்பலன்கள்:

**மகம் 1,2,3,4 பாதங்கள்**

பூர்வீகச் சொத்துக்களால் லாபம் அடைவீர்கள். தள்ளிப் போட்டு வந்த தெய்வ காரியங்கள் எளிதில் முடியும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். செலவுகள் அதிகமானாலும் நினைத்த காரியம் நடந்து விடும்.

நிர்வாகத் துறையில் உள்ளவர்கள் கௌரவப் பட்டங்களைப் பெறுவர்.

பிள்ளைகளால் முன்னேற்றம் ஏற்படும். தாய்வழி ஆதரவு உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாகும்.

உங்கள் கௌரவத்தையும், புகழையும் காக்க பாடுபடுவீர்கள். தொழில் வசதி பெருகும். நோய்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலிருந்து நிவாரணம் அடைவீர்கள்.

### பூரம் 1,2,3,4 பாதங்கள்

கலைத்துறையில் புதியதாக ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தொழிலில் ஈடுபட்டவர்களின் வளர்ச்சி அபரிமிதமாய் இருக்கும். பூமி லாபம், வாகன யோகம் பெறும் வாய்ப்புகள் வரும். கூட்டு வியாபாரம் சிறப்பாக இருக்கும்.

அதிகாரத்தில் இருப்பவர்கள், அன்பால் காரியத்தைச் சாதிக்கும் காலமிது. பஞ்சு, ஆயத்த ஆடைகள், மின்சாதனங்கள் விற்பனை போன்ற தொழிலில் உள்ளவர்கள் பாதுகாப்பை விரிவுபடுத்திக் கொள்வது சிறந்தது. வீண் செலவுகளைக் குறைத்தால் சேமிப்பு உயரும்.

எதிரிகளின் தொல்லை நீங்கும். உற்றார் உறவினரின் வருகையால் மகிழ்ச்சி பெருகும். நவ நாகரிக ஆபரணங்களின் விற்பனை லாபத்தை தரும்.

### உத்திரம் 1-ம் பாதம்

உங்களுக்கு கிடைக்கும் பரம்பரைச் சொத்து மூலம் வரும் லாபத்தை, எதிர்கால சேமிப்பாய் மாற்றி வையுங்கள். வளமான எதிர்காலத்திற்கு அடித்தளம் இடவேண்டிய சந்தர்ப்பங்களும் வரும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

எனவே சோம்பலை விரட்டி, புது உற்சாகத்துடன் செயல்படுங்கள். நினைத்த இலக்கை அடைவது உறுதி. உணவில் கட்டுப்பாடு அவசியம். நேரம் தப்பித் தூங்க வேண்டிய சந்தர்ப் பங்களுக்கு இடமளிக்காத வகையில், திட்டமிட்டு காரியங்களைச் செயலாற்றுங்கள்.

ஒரு பதவி உயர்வு கூட இல்லையே. என்று புழுங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு, தக்க சமயத்தில் பதவி உயர்வு கிடைக்கும். குடும்ப நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் பெறுவீர்கள்.

### ஆலய பரிகாரம்

ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய பகவானைச் சுற்றி வாருங்கள். சங்கடங்களைக் களைந்து செம்மையான வாழ்வைத் தந்தருள்வார். திருநள்ளாறு சென்று சனீஸ்வர பகவானை தரிசிக்கவும். வியாழன் தோறும் ஸ்ரீதட்சிணா மூர்த்தியை வழிபடவும்.

## ஓர் உண்மைக் கதை....

[23ம் பக்கத் தொடர்ச்சி]

காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் அலையாய் அலைந்த நான், நிம்மதியை மட்டுமல்ல, கௌரவத்தையும் இழந்தேன். ஆண்டவன் அருளினால் என் மனைவியின் சாவு கொலை அல்ல, தற்கொலை என்று நீதிமன்றம் உண்மையை உணர்ந்து என்னை விடுவித்தது. ஒன்றரை வருடம் கழித்து நல்ல செய்தியை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்றேன். தொலைபேசி ஒலித்தது. அதன் வழியே எனது தம்பி லொரியில் அடிபட்டு மரணித்த செய்தி காதுகளில் குண்டுகளாக வெடித்தது. என் நிலை எப்படி இருக்கும். சற்று யோசியுங்கள். ஆறுதல் சொல்ல பெரியவர்களும் இல்லை.

துக்கத்தை பகிர்ந்து கொள்ள துணைவியும் இல்லை. ஆகட்டும் பார்க்கலாம் என்று தைரியம் சொல்ல சகோதரனும் இல்லை. வேறு துணையின்றி, என்னை மட்டுமே சார்ந்து உள்ள, எனது ஐந்து வயது மகன் மட்டும் இல்லை என்றால், நானும் செத்துப்போய் இருப்பேன். விதி என்னை மட்டும் ஏன்தான் இப்படி குறிவைத்து தாக்கி சீரழிக்கிறதோ தெரியவில்லை'', என்று கூறி அழுவதற்குக்கூட சக்தியில்லாமல் சிரித்தார்.

அவரின் இந்த சிரிப்பு அரண்மனைச் சுவர் கதரை பெயர்ந்து கிடப்பது போலவும், மொட்டை மரத்தில் ஒற்றைக் காகம் சிறகு அடிப்பது போலவும் இருந்தது. சிறிது நேர மௌனத்திற்குப்பிறகு, அவரிடம், ''உங்களுக்கு இப்போது எது இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்'', என்று கேட்டேன். அதற்கு அவர் மரணம் என்பது பெரும் துயரம். அந்த துயரம் தொடர்ச்சியாக என்னைத் துரத்துகிறது.

விதி வழிதான் வாழ்க்கை என்பது எனக்கு நன்றாக புரிந்தாலும், என்னை விட்டு என் மகனோ, என் மகனை விட்டு நானோ நிரந்தரமாக பிரிந்துவிடுமோ என்ற அச்சம் என்னை வாட்டி எடுக்கிறது. அந்த பயத்தை நான் வெல்ல வேண்டும். அதற்கு என்ன வழி என்று கேட்டார்.

கதை தொடர்கிறது... செல்க பக்கம் 29க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கன்னி

**(உத்திரம் 2,3,4, பாதங்கள், ஹஸ்தம் 1,2,3,4 பாதங்கள், சித்திரை 1,2 பாதங்கள்)**

## மற்றவர்களைச் சிரிக்க வைத்து, சிந்திக்க வைக்கும் கன்னி ராசி நேயர்களே!

உங்களின் மனித நேயத்தால் மற்றவரின் துயர் தீரும். நீங்கள் சமயோசித புத்தியால் எதனையும் சாதிக்கும் திறன் கொண்டவர்கள். இந்த தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் ராகு, கேது இருவரும் தடையின்றி நற்பலன்களை வழங்குவார்கள். கார்த்திகை மூன்றாம் வாரம் முதல் குரு பகவானும் அவர் பங்குக்கு சௌபாக்கியத்தைத் தந்தருள்வார். வெளிநாட்டுப் பயணங்கள் இனிமையாகவும், லாபமாகவும் அமையும். குடும்பத்தில் சுப காரியங்கள் தடபுடலாக கைகூடி, கோலாகலமாய் நடைபெறும். புதிய உற்சாகத்துடன், எந்த செயலையும் மளமளவென்று முடித்துவிடுவீர்கள். சிலர் பணி நிமித்தம் மலை வாசஸ்தலங்களுக்குச் செல்வர். விலை உயர்ந்த வண்டி வாகனங்களை வாங்கும் பாக்கியம் கிட்டும்.

**பெண்களுக்கு:**

பிள்ளைகளின் போக்கிற்கேற்ப இதமான ஆலோசனை வழங்குங் கள். உங்கள் வழிக்கு வந்து விடுவார்கள். இங்கிதமாக நடந்து கொள்ளும் உங்களை, அக்கம் பக்கத்தார் எப்போதும் சுற்றி வருவார் கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக் கும். எதிர் காலத்திற்கு பணம் சேமிக்க ஏற்ற காலமிது. எனவே அதற்கேற்றவாறு உங்கள் பொருளாதார வளத்தை அபிவிருத்தி செய்து கொள்ளுங்கள். எலியும், பூனையுமாய் இருந்த தம்பதிகள் நகமும், சதையுமாய் மாறி வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்கலைகளைப் பயிலும் வகையில் வரும் வாய்ப்புகளை, தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். முதியோர் சொல்லும் குறைகளை பெரிதுபடுத்தாமல் விட்டுவிடுங்கள். உங்களது துணைவரின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். வாங்கும் புதிய நகைகளை, மறவாமல் பத்திரமாக வையுங்கள். பிள்ளைகளின் உத்தியோக முயற்சிகள் உடனே பலிதமாகும்.

**மாணவர்களுக்கு!**

கல்வியில் அற்புதமான ஏற்றமும், உயர்வும் உண்டாகும். பரிசுகளும், பாராட்டும் பெறும் இனிய காலம் வர இருப்பதால், உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். மேற்கல்விக்கான தேர்வு முடிவுகள் தாமதமாய் வந்தாலும், நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள்.

கவிதை கட்டுரைப் போட்டிகளிலும் வெற்றி உலவருவீர்கள். நண்பர்களின் குணமறிந்து நல்லவர்களைத் தேர்வு செய்யுங்கள். எல்லாவற்றிலும் உறுதுணையாய் இருப்பார்கள். தேர்வுகள் நெருங்கி வருவதால், வீண் அலைச்சலுக்கும், கேளிக்கைகளுக்கும் இடம் தராதீர்கள்.

ஆரோக்கியத்தை வளர்க்கும் உணவு வகைகளை மட்டும். சேர்த்துக் கொள்ளுங்கள். குழுவாகப் படிக்கும் பழக்கம் உடையவர்கள் திறமையான மாணவர்களுடன் சேர்ந்து பயிலுங்கள். காரசாரமான விவாதங்களிலும், விமர்சனங்களிலும் தலையிடாதீர்கள்.

**பணிபுரிபவர்களுக்கு!**

பணியில் இருந்த கெடுபிடிகள் தளர்ந்து விடும். உங்கள் இலாக்கா தொடர்பான விவரங்களை விரல் நுனியில் வைத்துக் கொண்டால், மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் திறமைக்கும், உழைப்புக்கும் உரிய பரிசு கிடைக்கும். பொறுப்பான பணியில் உள்ளவர்கள், உங்கள் பணியை வேறு நபரிடம் ஒப்படைக்க வேண்டாம். முயற்சி எடுத்தால்தான் கோரிக்கைகள் நிறைவேறும்.

சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும். சிறிய விஷயங்களுக்காக சர்ச்சையில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் நலம். எதிரிகளின் இடையூறு, உங்கள் பணியை பாதிக்காத வண்ணம் எச்சரிக்கையாய் இருங்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு!**

எதிரிகளால் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் விலகும். மக்களின் பாராட்டைப் பெறும் விதத்தில் உங்கள் உழைப்பு இருக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும். அலைச்சல் அதிகரிக்கும். வெளிப்படாமல் மறைந்திருந்த உங்கள் ஆற்றல், மீண்டும் பிரகாசிக்கும்.

புதிய பொது நலன் பணிக்காக சற்று முயற்சி எடுத்து பாடுபட வேண்டியிருக்கும். கடுமையான பேச்சுக்களையும், சர்ச்சைக்குரிய விவாதங்களையும் தள்ளி வைத்து விடுங்கள். ஆக்க பூர்வமான பணிக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவால், அனைவரும் உங்களைப் பாராட்டி மகிழ்வர்.

பணவரவு திருப்திகரமாக இருக்கும். இது வரை பாராமுகமாய் இருந்தவர்கள், மீண்டும் உங்களை நாடி வருவார்கள்.

**கலைஞர்களுக்கு!**

புதிய ஒப்பந்தங்கள் தாராளமாய் வரும். இதுவரை இருந்து வந்த தடை-தோல்வி இனி இருக்காது. பணம் அதிகமாய் புரண்டாலும், செலவுகளில் சிக்கனமாய் இருந்தால், சேமிப்பு பெருகும். விருந்து விழாவென செல்லும் இடங்களில் கண்ணியத்தைக் கடைப் பிடியுங்கள்.

நெருங்கிய நண்பர்களாயினும், உங்கள் ரகசியங்களை வெளியிடாதீர்கள். இதுவரை நடந்ததை நினைத்து மனம் புண்பட வேண்டாம். இனி உற்சாகப் பலனே நடக்கும். உங்களின் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். தொழிலில் இருந்த பின்னடைவுகள் மறையும். நண்பர்களிடையே எதிர்பாராத அனுகூலம் இராது.

அவர்களால் மனக்கசப்பு உருவாகலாம். அனுசரித்து நடந்து கொண்டால், பிரச்சனைகள் பெரிதாகாமல் பிசுபிசுத்து விடும். வீண்



வதந்திக்கு முக்கியத்துவம் அளிக்காமலிருந்தால், நிம்மதி நிலவும்.

**வியாபாரிகளுக்கு!**

கூட்டாளிகளிடையே நிலவி வந்த பாராமுகம் மறைந்து விடும். அலைச்சல் அதிகரித்தாலும் அது ஆதாயமாகவே முடியும். வாடிக்கையாளரின் வரவும் ஆதரவும் பெருகும். புதிய முயற்சிகளுக்கும், உத்திகளுக்கும் நல்ல வரவேற்பு இருக்கும். பணியாளர்களிடம் இதமாக நடந்து கொள்ளுங்கள்.

உங்களிடம் பக்க பலமாய் இருப்பார்கள். அரசிடமிருந்து நீங்கள் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறும். நழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் வரும்.

அதனை உங்கள் திறமையால் தக்க வைத்துக் கொள்ளுங்கள். வியாபார நிமித்தம் வெளியூர் செல்கையில், உணவு மற்றும் குடிநீரில் கவனமாய் இருந்தால், தேக உபாதைகள் தலைகாட்டாது. கடன்கள் படிப்படியாக குறைந்து வரும்.

**நியூமராலஜி :**

**பிறப்பு எண், விதி எண் 4,6,9 ஐக் கொண்டவர்களுக்கு சுபகாரியங்கள் நிறைவேறும். வாணிபம் பெருகும். சொத்துக்கள் சேரும். பிறப்பு எண், விதி எண் 5,7 ஐக் கொண்டவர்களுக்கு பெரிய முயற்சியால் சுமாரான பலனே நடக்கும். விரயச்செலவு உண்டு. பிறப்பு எண், விதி எண் 1,2,3,8 ஐக் கொண்டவர்களுக்கு பிறர் உதவி கிடைத்து நல்ல காரியங்கள் நடக்கும். பெரிய பாதிப்பு இல்லை.**

## நட்சத்திரப் பலன்கள்:

**உத்திரம் 2,3,4 பாதங்கள்:**

தள்ளி - நின்ற உடன்பிறப்புகள்

**வாஸ்து**

கன்னி ராசிக்கு 4 ஆம் வீடு தனுசு. தனுசுவின் திசை கிழக்கு. கன்னி திசை தெற்கு.

எனவே வீட்டின் தலைவாசல் வட கிழக்கு அல்லது தெற்கு பார்த்து இருக்கும்படி வீடு கட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிய வந்து பேசுவார்கள். குடும்ப வருமானம் உயரும். சொன்னதைக் கேளாமல் அடம்பிடித்த பிள்ளைகள், இனி உங்களுக்கு சாதகமாய் இருப்பார்கள். குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்களும், சிக்கல்களும் தீரும். சிலர் உல்லாசப் பயணம் செல்வர். இதுகாறும் எதிர்மறையாய் சிந்தித்த நீங்கள் இனி ஆக்கப் பூர்வமாய் செயல்படுவீர்கள். உங்களின் தாழ்வு மனப்பான்மை நீங்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அடிக்கடி வேலை தேடி அலைந்தவர்கள் நிரந்தரமான பணியில் அமர்வார்கள்.

தந்தை வழி உறவினர்களுக்கு பணம் செலவழிக்க வேண்டியிருக்கும். விலையுயர்ந்த பொருட்கள், வீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றை கவனமாய்க் கையாளுங்கள். வியாபாரத்தில் பங்குதாரரிடையே நிலவிய மனஸ்தாபம் நீங்கும்.

**ஹஸ்தம் 1,2,3,4 பாதங்கள்:**

உங்களை எதிரியாய் பாவித்த அதிகாரிகள் மனம் மாறுவார்கள். இனி கேட்ட இடத்துக்கே மாற்றல் கிடைக்கும். சிலர் அயல்நாட்டுத் தொடர்பு கொண்ட நிறுவனத்தில் சேர்வார்கள். உடல் உபாதைகளுக்கு, மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்து, மாத்திரைகள் உட்கொள்ள வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவார்கள். குடும்பத்தில் பொருள் வரவு சரளமாக இருக்கும்.

**சித்திரை 1,2, பாதங்கள்:**

தானாகப் பலரும் உதவி செய்ய முன் வருவார்கள். இதுவரை உங்களை எதிர்த்தவர்கள் இனி இணக்கமாக நடந்து கொள்வார்கள். கடன் தொல்லைகள் கட்டுக்குள் இருக்கும். பழைய வீடுகளை மராமத்து செய்யும் காலமிது.

வாகனப் பராமரிப்பில் சுணக்கம் வேண்டாம். சீரான வண்டி சிரமங்களைத் தராது. கண் நோய்கள் வந்து விலகும்.

வியாபாரிகள் அதிக லாபத்தினை எதிர்பார்த்து குறுக்கு வழியில் செல்லாதீர்கள். சட்டத்திற்கு உட்பட்ட எல்லா முயற்சிகளும் நன்மையாகவே முடியும்.

**ஆலய பரிகாரம்**

ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய பகவானைச் சுற்றி வாருங்கள். சங்கடங்களைக் களைந்து செம்மையான வாழ்வைத் தந்தருள்வார். திருநள்ளாறு சென்று சனீஸ்வர பகவானை தரிசிக்கவும். வியாழன் தோறும் ஸ்ரீதட்சிணா மூர்த்தியை வழிபடவும்

## ஓர் உண்மைக் கதை....

26ம் பக்கத் தொடர்ச்சி



பிறப்பவன் இறக்க வேண்டுமென்பது பொதுவான விதி. ஆனால் அந்த விதியை நமது மனம் அவ்வளவு சீக்கிரம் ஏற்றுக்கொள்ளாது.

இறைவன் ஏதாவது ஒரு காரணத்தை வைத்து சில காரியங்கள் செய்து விடுகிறான். அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் அளவிற்கு மனிதனின் அறிவு இன்னும் வளரவில்லை. இனிமேலும் வளருமா என்பது தெரியவில்லை. ஆனாலும் இவரது துயரத்தின் மூலத்தை நான் அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன்.

அதனால் அவர் தந்தையார் கட்டிய புதிய வீட்டின் வரைபடத்தைக் கொண்டு வரச் சொன்னேன். பத்து நாட்கள் கழித்து, தனது வீட்டின் வரைபடத்தோடும், தலைவாசலுக்கு கீழே இருந்து எடுத்த மண்ணோடும், என்னை வந்து சந்தித்தார். அந்த மண்ணின் தன்மையை ஆராய்ந்தபோது, அதில் தோஷம் எதுவும் இல்லை. அவரது துயரங்களின் காரணத்தை, அவர் வீட்டு வரைபடம் மௌனமாக சொன்னது. தென்மேற்கு மூலையில் கழிப்பிடமும், வடகிழக்கு மூலையில் கார்ஷெட்டும் அமைக்கப் பட்டு இருந்தது. நைருதி பள்ளமும், ஈசான்ய கூரையும் மரணத்தை கம்பளம் விரித்து வரவேற்கும் என்பது வாஸ்து சாஸ்திரத்தின் பொதுவான விதி.

இதை அவரிடம் சொல்லி, உடனடியாக வீட்டு அமைப்பை மாற்றும்படி சொன்னேன். ஆனால் அவர் அதில் ஆர்வம் காட்டவில்லை. வீட்டைத் திருத்துவதனால் மரண பயத்தை வெல்ல முடியும் என்ற வாதத்தை அவர் நம்பவில்லை.இதற்கு மேலும் அவருடன் விவாதிப்பதால் எந்தப் பயனும் விளையப்போவது இல்லை என்பதை உணர்ந்தேன்.

கலங்கிப்போய் இருக்கும் அவர் மனதை தெளிய வைத்தால், அவராகவே சரியான வழியைத் தேர்ந்து எடுத்துக் கொள்வார் என்ற முடிவிற்கு வந்தேன். "மந்திரங்கள் ஜெபிப்பதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?" என அவரைக் கேட்டேன்.அதற்கு அவர், "மந்திரங்கள் என்பது நாத வடிவம். நாதம்தான் இறைவனின் சொரூபம். மந்திரங்களின் சப்த அலைகள் நிச்சயமாக மாறுதலை ஏற்படுத்தும் என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறேன். அதே நேரம் எல்லா மந்திரங்களையும், எல்லோராலும் ஜெபிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும்.

கதை தொடர்கிறது... செல்க பக்கம் 37க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரள பிரஸ்ன ஆருட ஜோதிடம்



**ஹரி ஸ்ரீ கணபதயே நம:**

குரு பிரம்ம குரு விஷ்ணு குரு தேவோ மஹேஷ்வர:
குரு ஸாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:

வேதநூல் தர்ம ஸாஸ்திரம் மேன்மையை அறிந்தேனாகி ஸாதனையால் கற்பகத் தனி நாட்டின் இறைவனாகி ஜோதி ரூபமாய் குருவாகி சொர்க்கத்தை மண்ணில் நல்கும் ஆதியாம் குருவே நின் தாழ் பணிந்தேன் போற்றி போற்றி.



புவியில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒத்த அதிர்வோடு இயக்குகிறான் இறைவன். இதன் விளைவாய் பற்பல விடயங்களை நமக்கு வெளிப்படுத்துகிறான். எந்த விடயம் எப்படி, எப்போது வெளிப்பட வேண்டும் என்ற சூட்சுமத்தை நமக்கு அருகிலேயே வைத்துவிட்டு சாட்சியாக நின்று விளையாட்டைக் கவனிக்கிறான். இறைவனின் இத்தகைய விளையாட்டுக்களை புரிந்து கொள்வதற்கு நுட்பமான அறிவு தேவை. இந்த நுட்பமான அறிவே தெய்வீக கலையாம் ஜோதிடமாகும்.



நவக்கிரக நாயகர்களை கட்டங்களில் மட்டுமே பார்க்காமல், நம்மைச் சுற்றியுள்ள அனைத்து பொருட்களிலும், நிகழ்வுகளிலும் காண வேண்டும். இந்தக் கருத்திற்கு வலு சேர்ப்பதே பிரஸ்ன ஆருட முறைகள். தாம்பூல பிரஸ்னம், ஹோரா ஆருடம், நிமித்த பிரஸ்னம், ஆருட பிரஸ்னம் என்ற பல வகையிலும் பார்க்கப்படும் இந்தக் கலைக்கு தாய்வீடு கேரளா மாநிலம் ஆகும்.

அஷ்டமங்கள தேவபிரஸ்னம், அஷ்டங்கள பிரஸ்னம் என்ற அமைப்புப்படி தேவதா உபாஸனையுடன் நல்ல முறையில் கணித்து கூறக்கூடியதாகும்.

குடும்ப பிரஸ்னத்தில் குல தெய்வம், தொழில், குடும்ப நிலைகள், பிதுர்ஸ்தானம் இவைகளை அறியலாம்.



தேவ பிரஸ்னத்தில் தாம்பூலத்தின் மூலமாகவும், சொர்ணாருடத்தின் மூலமாகவும், த்ரிஸ்புடம், சதுர்ஸ்புடம் பஞ்சஸ்புடம் மூலமாகவும் கூறலாம். திருக்கோயில் சம்பந்தமாக பார்க்கப்படும் அக்ஷடமங்கள தேவபிரஸ்னம், மிகவும் விசேஷமானதாகும் அக்ஷடமங்கள பிரஸ்னம் என்ற அமைப்புப் படி தேவதா உபாஸனையுடன் நல்ல முறையில் கணித்து கூற வேண்டும்.

எல்லாவற்றிற்கும் முழுமையான தெய்வ அனுகூலமும், உபதேச தேவதா அனுகூலமும் இருந்தால் தான் இந்த கலையில் முழுமையான வெற்றி பெற முடியும்.



இந்த பிரஸ்ன சாஸ்திரத்தின் மூலம் வைத்ய சாஸ்திர அமைப்பு பற்றியும் தெரிந்து கொள்ள முடியும். அதற்குரிய சிகிச்சை முறையை ஆயுர்வேத ரீதியில் செய்து கொள்ளவும், இந்த பிரஸ்ன மார்க்கத்தில் வழி உள்ளது.

அடுத்து வரும் இதழ்களிலும், இது குறித்து மேலும் விவரங்களைத் தருவேன். மீண்டும் சந்திப்போம்.

"லோஹா ஸமஸ்தா ஸுஹினோ பவந்து"

**ஜி. கிருஷ்ணன்** (கண்ணன் போத்தி)
kannanpotti@yahoo.com
(கேரளபிரஸ்ன ஆருட சோதிடர்)
09344412223, 09994633108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி தடை ஏதும் இல்லை – வெற்றி நிச்சயம்



## பார்வையாளர்களை சந்திக்கும் நேரம்

தினசரி காலை 11 மணிமுதல்
தினசரி மதியம் 2 மணிவரை
பிரதி செவ்வாய் விடுமுறை



## முன் அனுமதி பெற்று வருதல் அவசியம்

ஸ்ரீ தேவதை எட்சினிகளிடம் நேரடியாக கேட்டு உங்களின் எத்தகைய பிரச்சினைகளும் முற்றிலும் தீர்க்கப்படும். மேலும் பிரசன்ன ஜோதிடத்தின் மூலம் உங்கள் வருங்கால வாழ்க்கைப் பலன்கள் துல்லியமாக கூறப்படும்.



தொழில், வியாபார பிரச்சினைகள் குடும்பம், கணவன் மனைவி சிக்கல்கள், தீராத நோய்கள், தீயசக்தி பாதிப்புகள் கல்வி உத்யோகம் வெளிநாடு சென்றிடவும், அரசியல், சினிமா இவற்றில் வெற்றி அடைய அதர்வண வேதம், திருமந்திரம் ஆகியவைகளின் வழி சிறப்பு பரிகார ஹோமங்கள் செய்து பூரண நிவாரணம் தரப்படும்.

**வீடுகளை இடிக்காமல் இந்திய, சீன வாஸ்த்துப்படி சரியான பரிகாரம் செய்து தரப்படும்**

ஜனவசியம், பணவசியம், தரும் மஹாமேரு மற்றும் ரசமணிகள், ரசவிக்ரகங்கள், ஸ்ரீசக்ரம், சுதர்சன, ஸ்ரீகணபதி, வாஸ்து நவக்கிரக, மஹாலஷ்மி, குபேர, ப்ரதியங்கரா, பைரவ, தன்வந்திரி ஆகிய அனைத்து வித யந்திரங்கள் பூஜை செய்து தரப்படும்

**5000 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்துபோன அரிய நவபாஷான மருந்து மீண்டும் உலகிலேயே முதல் முறையாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு சகல நோய்களும் தீர்க்கப்படுகிறது.**


குருஜியுடன் இத்தாலி நாட்டு பக்தர்

**குபேர, சர்வகாரிய சரஸ்வதி அஞ்சனங்கள் உட்பட அனைத்துவிதமான அஞ்சனங்களும் முறைப்படி பூஜை செய்து தரப்படும்.**

மேலும் உங்கள் வாழ்க்கை பிரச்சினைகளுக்கு தபால் வழியில் தீர்வு கூறப்படும். அதற்கு உங்கள் பிரச்சினைகளை தெளிவாக எழுதி, சுயவிலாசமிட்ட கவர்உடன் SRI RAMANANDA என்றபெயருக்கு ரூபாய் 250/- M.O. அல்லது D.D. எடுத்து அனுப்பவும்.


குருஜியுடன் அமெரிக்கா நாட்டு பக்தர்

# ஸ்ரீராமன் ஜோதிட நிலையம்

**யோகி ஸ்ரீ இராமானந்த குரு**

விழுப்புரம் மெயின்ரோடு, காடகனூர் அஞ்சல்–605 755, திருக்கோவிலூர் T.K., விழுப்புரம் Dt.
போன்: +91-4153-291775 செல்: +91 97904 14806
e-mail: venkatmscec@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலட்சுமி, சரஸ்வதி, பார்வதி எனும் முப்பெருந்தேவியரும்,
விஷ்ணு, பிரம்மா, சிவன் எனும் மும்மூர்த்திகளும், ஒருங்கே இணைந்த
அருள்மிகு கொல்லூரு மூகாம்பிகை அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதன்



சுக்ரன்



சந்திரன்



குரு

## சூரிய வணக்கம்

ஆயிரம் கரங்கள் நீட்டி,
அணைக்கின்ற தாயே போற்றி!

அருள் பொங்கும் முகத்தைக்
காட்டி, இருள் நீக்கம் தந்தாய்
போற்றி!

தாயினும் சால பரிந்து
சகலரை அழைப்பாய் போற்றி!

தூயவர் இதயம் போலத்
துலங்கிடும் ஒளியே போற்றி!

தூரத்தே நெருப்பை வைத்து,
சாரத்தைத் தருவாய் போற்றி!

ஞாயிறே! நலமே போற்றி!
நாயகன் வடிவே போற்றி!

நானிலம் உளநாள் மட்டும்
போற்றுவோம் போற்றி! போற்றி!!



அங்காரகன்



கேது



சனீஸ்வரன்



ராகு

# நவக்கிரக நாயகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# துலாம்

**(சித்திரை 3,4,பாதங்கள், சுவாதி 1,2,3,4, பாதங்கள், விசாகம் 1,2,3 பாதங்கள்)**

## எந்த விஷயத்திலும் நடுநிலை யுடன் முடிவு எடுக்கும் துலா ராசி நேயர்களே!

கடுகளவு பாராட்டினாலும் மனம் மகிழும் நீங்கள், உங்களை நாடி வந்தவர்களுக்கு, வெள்ளை மனதுடன் உதவி செய்வீர்கள். இந்த தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் சனி பகவானின் பூரண அருள் உங்களுக்கு உண்டு. புதிய வீடு, வாகனங்கள் வந்து சேரும். இறங்கு முகமாய் இருந்த பொருளாதாரம் ஏறுமுகமாய் மாறும். புகழும், உயர்பதவியும் உங்களைத் தேடி வரும். கலைஞர்கள் புதிய சாதனைகளைப் படைப்பார்கள். சரம் சரமாய் தங்க ஆபரண வகைகள் வந்து சேரும். உற்றார், உறவினர் புடை சூழ இருப்பதால், உங்கள் இல்லம் ஆலமரம் போல் அனைவருக்கும் அடைக்கலம் தரும். தெய்வ நம்பிக்கை பெருகும். ஆலய திருப்பணிகளில் கலந்து கொள்ளும் பெரும் பேறு கிடைக்கும்.

**பெண்களுக்கு:**

உங்களால் குடும்பம் சிறந்த நிலையை அடையும். புத்தாடை, அணிகலன் வாங்கி மகிழ்வீர்கள். பணி நிமித்தம் பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். கருத்து வேறுபாடுகளை, இனிமையான பேச்சின் மூலம் சரிசெய்து விடுவீர்கள். கணவன் மற்றும் குடும்பத்தாரின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். பொருளாதார வளம் திருப்தியாக இருக்கும். குழந்தைகள் சங்கீதம், வாய்ப்பாட்டு ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்குவார்கள். திருமண காரியங்கள் இனிமையாய் நடக்கும். உங்களின் புத்திசாலித்தனத்தால் நீங்கள் எடுக்கும் முயற்சிகளும், செயல்களும் வெற்றியடையும். சொத்துக்களை விற்கவும், வாங்கவும் செய்வீர்கள். உங்களின் தனித் திறமைகள் பிரகாசிக்கும். கலையார்வம் உடைய நீங்கள், மேற்கொள்ளும் நூதன கலைப் பணி, அனைவராலும் பாராட்டப்படும்.

**மாணவர்களுக்கு:**

சுறுசுறுப்புடன் இயங்க வேண்டிய காலமிது. உங்களின் அறிவுக் கூர்மையை அதிகப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளின் சொந்த பூமியாம், கேரளத்து நம்பூதிரி ஜோதிஷம்"

விதியை மதியால் [மாந்ரீகத்தால்] வெல்லலாம்!



அதர்வண வேத சாஸ்திரத்தினை உலகிலேயே மிகவும் அதிகம் பயன்படுத்துவது கேரள நம்பூதிரிகளே!



அவற்றில் பிரும்ம ஸ்ரீ பாலக்காடு

ஸ்ரீ சூரியன் நம்பூதிரி M.A., D.I.A., B.A. Astro.,

மனிதகுலம் நலம் பயக்கும் வகையில் நன்மைக்காக, **காரியசித்தி** பெற, **தேவபிரசன்னம்,** மூலம் எதிர்வரும் தீங்குகளை தவிர்த்து, துர்சக்திகளை விலக்கி, பகைவர்களிடமிருந்து விலகி இருக்க **சத்ரு விலக்கல்,** தம்பதிகளுக்குள் **தாம்பத்ய வசியம்,** வியாபாரம் விருத்தி பெற வியாபார வசியம், இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறவும், தாங்கள் காதல் திருமணம் நிறைவேறிடவும் **பார்வதி சுயம்வர** ஹோமம், நோய்களை நீக்கி, **தன்வந்திரி ஹோமம்** - அம்மாவாசையில் **பிரத்யங்கரா** மற்றும் **சரபேஸ்வரர்** பூஜா, ஹோமம் செய்விக்கப்படும்.

முன் அனுமதியுடன் கூடிய நேரில் தொடர்பிற்கு

ஸ்ரீ சாஸ்தா ஜோதிஷாலயா

140/45, சுப்பிரமணிய முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

Ph: +91-44-93815 07444 / +91 98401 02001 / +91 98849 43309

visit : www.namboodrijyothisham.com Email : suryaguru64@gmail.com

குறிப்பு வெளிநாட்டு அன்பர்கள் ஜாதகங்களுடன் (or) தங்களது பிரச்சனைகளை தெளிவாக கடிதம் எழுதி ஆலோசனை கட்டணமாக ரூபாய் INR 1000 Western Union Money Transfer (or) D.D. மூலம் சுயவிலாசமிட்ட தபால் தலை ஒட்டப்பெற்ற கடித தொடர்பு கொள்ளவும்.

# கிழமைகளில் செய்யத் தகுந்த காரியங்கள்

**ஞாயிறு :** மங்கள காரியங்கள், ஹோம சாந்தி, யாத்திரை, பட்டாபிஷேகம், வைத்திய சிகிச்சை, தோல், ஸ்வர்ணம், ஸங்பிரஹம், மாந்திரீகம், விதை விதைத்தல், விவாத ஆரம்பத்திற்கும், கிரகப்பிரவேசம், சில்ப காரியங்கள், யுத்தம், பூஷணம், அலங்காரம், யானை, குதிரை வாகனம், சிம்மாசன ஆரோஹணத்திற்கும், கிருஷி ஆரம்பம், ஹிரண்ய தானம் உத்தமம்.

**திங்கள் :** சேவகஜன அபிவிருத்தி, வியாபாரம், பூஷணாலங்காரம், விவாஹம், சேதுபந்தனம், தான்ய சங்கிரஹம், தேவாலய ஆரம்பம், யக்ஞம், மாங்கல்யம் செய்தல், தெற்கு நோக்கி பிரயாணம், ஜல - புஷ் பாதி, விவசாயத்திற்கு கிணறு வெட்டுதல், இவைகளுக்கு உத்தமம்.

**செவ்வாய் :** யுத்த காரியங்களுக்கு, விஷம், அக்னி, வாஹனம், விவாதம், யுத்தம், சத்ரு பந்தனம், விருஷ சேதனம், மிருக வேட்டை, சைன்ய சிக்ஷணம், பூமியில் லோக தாது ஸங்கிரஹம், கொள் விதை விதைத்தல், ஸ்திரீகள் எண்ணெய் ஸ்நானம் செய்தல், கிழக்கு நோக்கி பிரயாணம் இவைகளுக்கு உத்தமம்.

**புதன் :** மாங்கல்யம் செய்தல், விவாக சுப காரியங்கள், ஹோம சாந்தி, ஜலப் பிரயாணம், மருந்துண்ணல், சேவகஜன அபிவிருத்தி, வஸ்திராலங்கார தாரணம், விதை விதைத்தல், நீதி, தர்க்கம், கணிதம், சில்பாதி, வித்யாரம்பம், பூமி ஸங்கிரஹம், மித்ர தரிசனம், வாஹன சங்கிரஹம், ஆரோகணம், எண்ணெய் ஸ்நானம் செய்தல், பாக்கு விதை விதைத்தல், பத்திரம் எழுதுதல் இவைகளுக்கு உத்தமம்.

**வியாழன் :** தேவதா பிரதிஷ்டையும், அபிஷேகம், குரு தரிசனம், விரத ஹோமாதிகள், பிரயாணம், சில்ப சாஸ்திர வித்யாரம்பம், நிஷேகம், விவஹாதி சுப காரியங்கள், யோகாப்பியாசம், வேதாத்யயனம், கிணறு வெட்டுதல் இவைகளுக்கு உத்தமம்.

**வெள்ளி :** விவாஹ சுப காரியங்கள், வாஹன ஸங்கிரஹம், மருந்து உண்ணல், கிருஹ ஆரம்பம், சில்ப காரிய ஆரம்பம், ரத்னாதி பூஷண அலங்கார ஸங்கிரஹம், பரோபகராதி, தர்ம காரியங்கள், நூதன வஸ்திர தாரணம், வது-பிரவேசம், கிணறு வெட்டுதல், ஸ்திரீகளுக்கு எண்ணெய் ஸ்நானம் செய்ய, தொட்டிலில் குழந்தையை விடுதல், கிருக்ஷி உத்தமம்.

**சனி :** சேவகஜன ஸ்வீகாரம், பக்ஷி, கழுதை, ஒட்டகம், இரும்பு, ஈயல், கல், நீலம், ரத்தின ஸங்கிரஹம், தோல், யந்திரம், சாஸ்திராதி செய்வதற்கும், அக்ஷராப்பியாசம், தீக்ஷைபந்தனம், பிக்ஷாடனம், எண்ணெய் ஸ்நானம் செய்தல், பருத்தி விதைத்தல், தானிய ஸங்கிரஹத்திற்கும் உத்தமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களை தேடிப் பிடித்து படியுங்கள். எந்தச் சூழ்நிலையிலும், பெற்றோரை விட்டுக் கொடுக்காதீர்கள். அவர்களின் அரவணைப்பு உங்களை அரண் போல் காக்கும். உணவு வகையில் கவனத்துடன் இருந்து கொண்டால், ஆரோக்கியம் சீராக இருக்கும்.

எந்த காரியத்தினையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செய்து விடுங்கள். கடைசி நேர அலைச்சலைத் தவிர்த்து விடலாம். செய்முறைப் பயிற்சிகளின் போது, கவனத்துடன் இருங்கள். அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். ஆசிரியர் தரும் குறிப்புக்களைத் தகுந்த விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். வாகனங்களில் பயணம் செய்கையில், கவனச் சிதறலுக்கு இடம் தராதீர்கள்.

**பணிபுரிபவர்களுக்கு:**

எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற ரீதியில் அவசரமாக செயல்படாமல், நிதானத்துடன் செயலாற்றினால் எதிலும் வெற்றிதான்! உங்கள் அலுவலக விஷயத்தில் அடுத்தவர் தலையீட்டை அனுமதிக்காதீர்கள். வீண் வாதமும், பிடிவாதமும் விட்டு விட வேண்டிய விடயங்கள்.

அதிகாரிகள் தரும் ஆலோசனையை ஏற்று, அதன்படி பணியினை முடிக்கும் வழக்கத்தை மேற்கொள்ளுங்கள். பிரச்சனைகள் ஏதும் தோன்றாது. நீங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். சக ஊழியர்களால் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

உற்சாகத்துடன் பணியில் இறங்கினால் பாராட்டும், பதக்கங்களும் தேடி வரும். பணியின் இடையே ஓய்வு அவசியம் என்பதை உணர்ந்து செயல்பட்டால் ஆரோக்கி யத்தில் நலிவு ஏற்படாது.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

சரியானபடி யோசித்து, கடினமாக முயற்சிகள் மேற்கொண்டு, எதையும் சிறப்பாக செய்து முடிப்பவர் நீங்கள். சற்றே வளைந்து கொடுத்தால், நீங்கள் செய்ய நினைத்த காரியம் இனிதாகவும், லாபகரமாகவும் முடியும். வார்த்தைகளை அம்பாக இல்லாமல், அன்பாக செலுத்தினால் உங்கள் நண்பர்கள் என்றும் உங்களுடன் இருப்பார்கள்.

வயதில் மூத்தவர்கள் தரும் ஆலோசனைகளைத் தட்டாமல் ஏற்றுக் கொள்ளுங்கள். எதிரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக் கூடும்.

எனவே எதிலும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. வீண் செலவுகளைத் தவிர்த்தால், பொருளாதார இழப்புகள் அவ்வளவாய் இராது. கௌரவத்துடன் கூடிய புதிய பொறுப்புகள் வந்து சேரும். அதனை ஏற்றுத் திறம்பட நடத்துவீர்கள்.

**கலைஞர்களுக்கு:**

வரும் வாய்ப்புகளுக்கேற்ற உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். சிலர் ஆடம்பரமான வீடுகளில் குடியேறுவர். அரசாங்கத் தொடர்புகளினால் லாபம் கிட்டும். புதிய இடங்களில் சாதுர்யமாகவும், பொறுமையாகவும் நடந்து கொண்டால், அதிகமான பாராட் டுதல்களைப் பெறுவீர்கள்.

சிலர் வெளிநாடு சென்று கலை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி



முடிப்பீர்கள். உங்களின் கடும் உழைப்பால் புதிய வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். பணவசதி மேம்படுவதால், பழைய கடன்களை அடைத்து விடுங்கள். உங்கள் உடல்நலனில் அக்கறை கொள்ளவும். உங்களுக்குத் தேவையான புதிய ஆடை ஆபரண வகைகள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை வாங்கிக் குவிப்பீர்கள்.

**வாஸ்து**

துலா ராசிக்கு 4 ஆம் வீடு மகரம். அதன் திசை தெற்கு. துலாவின் திசை மேற்கு. எனவே வீட்டிற்கு தலைவாசல் தெற்கு அல்லது மேற்கில் இருக்குமாறு வீட்டைக் கட்ட வேண்டும்.

**வியாபாரிகளுக்கு:**

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமைகள் விலகிவிடும். வெளியூர்ப் பயணங்கள் சற்றே அனுகூலப் பலன்களைத் தரும். பழைய பாக்கிகள் வசூலாகத் தாமதம் ஏற்படும்.

வாடிக்கையாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை எப்பாடு பட்டேனும் நிறைவேற்றிவிடுவீர்கள். நீண்ட நாட் களாக வாங்க நினைத்திருந்த நவீனக் கருவிகளை வாங்க ஏற்ற காலம். பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியா பாரம் சுறுசுறுப்பாக நடைபெறும்.

கூட்டாளிகளிடம் விட்டுக் கொடுத்துச் சென்றால், வீண் விரயங்களைத் தவிர்க்கலாம். வெளி யூரில் கிளைகள் அமைக்கும் பணிகள் தொய்வின்றி நடைபெறும். நன்கு விசாரித்தபின், புதிய பணியாளர்களை வேலைக்கு அமர்த்தவும்.

**நியூமராலஜி :**

**பிறப்பு எண், விதி எண் 7, 8 ஐக் கொண்டவர்களுக்கு முன்னேற்றமான ஆண்டு. அதிகாரம், அந்தஸ்து, புகழ் உயரும். வாணிபம் வளரும்.**

**பிறப்பு எண், விதி எண் 1,2, 5 ஐக் கொண்டவர்களுக்கு விரையம் அதிகம். தாமதமான பலன்கள் ஏற்படும். அதிக முதலீடு செய்து அவதிப்பட வேண்டாம்.**

**பிறப்பு எண், விதி எண் 3,4,6,9 ஐக் கொண்டவர்களுக்கு பிறர் உதவியால் நற்காரியங்கள் நடந்தேறும்.**

## நட்சத்திரப் பலன்கள்

**சித்திரை 3,4 பாதங்கள்:**

எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும். உறவினர்களும் சாதகமாக இருப்பதால், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சில ருக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். பெரிய முதலீடுகளில் நிதானமாக செயல்படுவது நல்லது.

சொத்து சம்பந் தமான பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து விடுங்கள். பொருளாதார நிலையில் பிரமாதமான உயர்வுகள் உண்டாகும். பதவி உயர்வும், ஊதிய உயர்வும் நீங்கள் எதிர்பார்த்தபடி அமை யும். குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையும். வெளிநாடு செல்லும் யோகமும், அதன் மூலம் அனுகூலமும் ஏற்படும்.

**சுவாதி 1,2,3,4 பாதங்கள்:**

நண்பர்களின் ஆலோசனைகள் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தில் ஏற்றமிகு பலன்களே உண்டாகும். குடும்பத்தோடு சிலர் தெய்வ தரிசன பய ணங்களை மேற்கொள்வார்கள். எதிரி களின் பலம் குறையும்.

கடந்த காலங்களில் இருந்த உடல் உபாதைகள் நீங்கிப் புதுப்பொலிவுடன் காட்சி தருவீர்கள். குழந்தைகள் மூலம் சுபச் செலவுகள் ஏற்படும். கணவன் மனைவி ஒற்றுமை சிறப்பாக அமையும்.

குழந்தைகளும் ஆதரவாக இருப் பார்கள். செய்யும் தொழிலை விரிவு படுத்தும் நோக்கம் எளிதில் பூர்த்தி யாகும். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.

**விசாகம் 1,2,3 பாதங்கள் :**

கொடுக்கல் வாங்கலில் சரள மான நிலை நிலவும். மருத்துவச் செலவுகள் குறையும். தொழிலில், உடன் இருப்பவர்களே எதிரிகளாக மாறிவிடுவார்கள். எனவே, எவரையும் எளிதில் நம்பி விடாதீர்கள்.

அதிக அலைச்சலைத் தவிர்த்து, மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். புதிய திட்டங்களை ஒத்திப் போடுவது நல்லது.

கல்வியில் மாணவர்கள் எடுக் கும் முயற்சி, வெற்றிக்கு வழி வகுக்கும். பணியில் உள்ளவர் களுக்கு எதிர்ப்புகள் விலகி ஆதரவு பெருகும்.

கடன் அட்டைகளைப் பயன் படுத்தாமல் இருந்தால், செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

**ஆலய பரிகாரம்**

ந வ க் கி ர ஹ ஹோத்திரங் களுக்கு சென்று நெய்விளக்கு ஏற்றி வழிபடவும். திருப்பதி பாலாஜி யைத் தரிசிக்கவும்.

செந்தாமரையில் வீற்றி ருக்கும் திருமகளைத் துதித்து வாருங்கள். அன்னை உங்கள் கோரிக்கைகளை கனிவுடன் நிறைவேற்றி வைப்பாள்.

29ம் பக்கத் தொடர்ச்சி

**தவறுதலான மந்திரத்தையோ அல்லது மந்திரத்தைத் தவறுதலாகவோ சொன்னாலோ, எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்**

என்பதையும் நான் உணர்ந்து இருக்கிறேன்'', என்றார். அவரின் இந்த விளக்கம் எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. மந்திர சாஸ்திர ஞானமுடையவர்களுக்கு, அடிப்படையாக என்ன தெரிய வேண்டுமோ அதை அவர் தெரிந்து வைத்திருப்பது வியப்பாகவும் இருந்தது. மந்திரத்தைத் தவறுதலாகச் சொல்வது மட்டுமல்ல, அதற்கென்று உரிய முறையில் சொல்லாவிட்டாலும் பயன் அளிக்காமல் போகும். அதற்கு அவர், ''என் மரண பயத்தைத் தீர்ப்பதற்கான மந்திர முறைகள் இருந்தால், எனது நிலைமையை ஆராய்ந்து, உபதேசம் செய்ய முடியுமா?'' என்று கேட்டார்.

**அதற்கு என்று பண்டைய கால முனிவர்கள் சில ரகசிய முறைகளை சொல்லி வைத்து உள்ளனர். கண்களை மூடி, ஆசனத்தில் அமர்ந்து, நமது மூச்சு உள்வாங்கும்போது 'ரா' என்ற அட்சரத்தையும் நிதானமாக மிக அமைதியாக மூச்சை வெளியிடும்போது 'மா' என்ற அட்சரத்தையும் ஆழ்ந்து உச்சரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நமது நாடி நரம்புகளில் 'ராம நாம சக்தி' அதிர்வலைகளாக உருவாகி, மூலாதாரத்தில் நிறைந்துவிடும்.**

**நமது அறிவுக் கண்ணும் திறக்கும். துயரங்களை நீக்க வழியும் தெரியும் என்றேன்.**

அவரின் குண இயல்புகளை மிக நன்றாக ஆழ்ந்து உணர்ந்த நான், அதற்கு தகுந்த மந்திரமான 'ஸ்ரீராம' நாமத்தை ஜெபம் செய்யும்படி சொன்னேன். ஜெபம் செய்வது என்றால் கண்களை மூடி, ஆசனத்தில் அமர்ந்து, மனதிற்குள் மந்திரத்தை தொடர்ச்சியாக உச்சரிப்பது தான் வழக்கம். ஆனால், ஸ்ரீராம நாமத்தை அப்படி உச்சரிக்கக்கூடாது.



அப்படி உச்சரித்தால் ஸ்ரீராம நாமத்தின் முழுமையான பலனை நம்மால் அடைய முடியாது. ''இந்த முறையில் உச்சரித்து, அண்மைக் காலத்தில், பலன் கண்டவர்கள் யாரே னும் உண்டா?'' என்று கேட்டார். அறி வாளிகள் ஆதாரம் கேட்பது இயற்கைதான். அதற்கு நான், ''பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும், மகாத்மா காந்தியும் ஆதாரங்கள்'' என்றேன். அவர் திருப்தியுடன் சென்றார். சில மாதங்களில் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டார். ''ஐயா, என்னிடத்தில் இப்போது மரண பயம் இல்லை. நீங்கள் சொன்னபடி, வீட்டு அமைப்பை மாற்றி விட்டேன். புதிய தெம்புடன் இருக்கிறேன் என்றார்''.



இது **ஸ்ரீராம நாமத்தின் சக்தி**க்கு, அண்மைக்கால ஆதாரம் ஆகும்.

**-யோகி ஸ்ரீ இராமானந்த குரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விருச்சிகம்

**விசாகம் 4-ம் பாதம், அனுஷம் 1,2,3,4 பாதங்கள், கேட்டை 1,2,3,4 பாதங்கள்)**

**வாழ்வில் தோல்விகளை கண்டு அஞ்சாமல் எதிர்நீச்சல் போடும் விருச்சிக ராசி நேயர்களே!**

பிரச்சனைகளுடன் நேருக்கு நேர் மோதி வெற்றி பெறுவீர்கள். எதையும் புதுமையாகச் செய்யும் நீங்கள் மனசாட்சிக்கு மரியாதை தரக்கூடியவர்களாய் இருப்பீர் கள். இந்த தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் சாதனை படைப்பதற்கு ராகுவும், கேதுவும் சரளமாய் உதவுவார் கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சவால் களைச் சந்தித்து வெற்றி பெறும் காலமிது.

இந்த வருடம் புதுத் தொழில், புது வியாபாரம் என்று உற்சாகத்தோடு பணியில் ஈடுபட உகந்த காலமிது. இந்த காலகட்டத்தில் உங்களின் திறமை களை வெளிப்படுத்தி உயர்ந்த கௌரவங்களை பெறு வீர்கள். தற்போது வசிக்கும் வீட்டிலேயே சிலர், வசதி களை கூடுதலாக பெருக்கிக் கொள்வர்.

பிள்ளைகளின் படிப்பு திருமணம் ஆகியவை அவரவர் மனதுக்கிசைந்தபடி அமையும். உங்கள் திட்டங்களை உரியமுறையில் செயல்படுத்தினால். புதிய இலக்குகளை அடைவீர்கள். சிலருக்கு தடைப் பட்டிருந்த உத்தியோக உயர்வு, வருமான உயர் வெல்லாம், காத்திருந்த காலத்திற்கும் சேர்த்து மொத்த மாய் வந்து சேரும்.

**பெண்களுக்கு:**

குடும்பத்தில் உள்ளவர்களது எண்ணங்களை அறிந்து, அதை பூர்த்தி செய்வீர்கள். எதிர்பார்த்தபடி பணவரவு இருக்கும்.

பழைய நட்பு மீண்டும் துளிர்க்கும். பிள்ளை களிடம் அதிகக் கண்டிப்பு வேண்டாம். கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். வேலை தேடும் பெண்களுக்கு, தகுதிக்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் எழுந்தவுடன் இரு உள்ளங்கைகளை விரித்து வைத்து சொல்லும் மந்திரம்

**கராக்ரே வஸதி லட்சுமி**
**கர மத்யே ஸரஸ்வதி**
**கர மூலே ஸ்திதா கௌரி**
**ப்ரபாதே கர தர்ஷணம் சுபம்**

**-முப்பெரும்தேவியர் அருள் கிட்டும்.**

நல்ல வேலை கிடைக்கும். உறவினர் வருகையால் சில பிரச்சனைகள் உண்டாகும். அதையும் சமாளித்து விடுவீர்கள்.

பூர்வீகச் சொத்துக்களில் நிலவி வந்த பிரச்சனைகள் எல்லாம் ஒரு தீர்வுக்கு வந்து, உங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆதாயங்கள் இந்த ஆண்டில் கிடைக்கும். தாய்வழியில் எதிர்பார்த்த உதவிகள் அமையும்.

ஆக்கப் பூர்வமான தைரியமே உங்கள் மூலதனம். அதே சமயம் பேசுகின்ற வார்த்தைகள், மென்மையாய் இருந் தால், எவரும் உங்களை தேடி வரு வார்கள். உறவுகள் பலப்படும். மின் சாதனப் பொருள்களைப் பழுது பார்த்து வைத்தால், புதிய செல வினங்களைத் தவிர்த்து விடலாம்.

**மாணவர்களுக்கு:**

ஆசிரியரின் ஆதரவும், பெற்றோர் தரும் ஊக்கமும் உங்களை சாதனை படைக்கும் மாண வர்களாய் உயர்வடையச் செய்யும். நீங்கள் பெறும் மதிப்பெண்ணால், உங்களது பள்ளி, கல்லூரிகளின் மதிப்பு மேலும் உயரும்.

மேற்கல்விக்கு வேண்டிய துறையில் கல்வி பயிலும் வாய்ப்பும் அமையும்.

அதற்குத் தேவையான வசதி களும் கிடைக்கும். புதிய நண்பர் களிடம் சற்று எச்சரிக்கையுடன் பழகுவது நல்லது.

தேவையற்ற பொழுது போக்கு களைத் தவிர்த்த படிப்பில் கவனம் செலுத்தினால், மதிப்பெண்களோடு, உங்களது மதிப்பும் உயரும். அரசு மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிட்டும்.

**பணிபுரிபவர்களுக்கு:**

கடமைகளில் ஆர்வம் மேலிடும். வேலை மாற்றத்தால் நல்ல சூழ்நிலை அமையும். வெளி நாட்டு வேலைக்கு முயற்சி செய்த வர்கள், விரும்பியபடி வெறி நாடு களில் பணியில் சேர்வார்கள். தற் காலிக பணியில் உள்ளவர்கள், பணி நிரந்தரத்திற்கான உத்தரவைப் பெறு வார்கள். தனி நபர் விமர்சனங் களுக்கு இடமளிக்காதீர்கள்.

சிலசமயம் மற்றவர்களது பணி யையும் சேர்த்து பார்க்க வேண்டிய சூழல் உருவாகும். கண் எரிச்சல், தூக்கமின்மை ஆகியவை வந்து போகும். உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்த சக பணி யாளர்கள், உண்மையை உணர்ந்து உங்களிடம் வருவார்கள். அவர் களை ஏற்றுக் கொள்வதால் உங்கள் பெருந் தன்மையை உணர்வார்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர் களுக்கு:**

அவ்வப்போது பிரச் சனைகள் தலை தூக்கினாலும், உங்கள் நற்பெயருக்கு பங்கம் உண் டாகாது. அலட்சியம், அனாவசிய சந்தேகம் ஆகியவற்றில் மாட்டிக் கொள்ளாதீர்கள். வெளி வட்டாரப் பழக்கங்களை குறைப்பது சாலச் சிறந்தது.

உடனிருப்பவர்களின் மனம் கோ ணாமல் நடந்த கொண்டல், அனைத்து பணிகளும் சீரான முறையில் நடக்கும்.

**வாஸ்து**

விருச்சிக ராசிக்கு 4 ஆம் இடம் கும்பம். இதன் திசை மேற்கு. விருச்சிக ராசியின் திசைவடக்கு.

எனவே புதிதாக வீடு கட்டு பவர்கள் வீட்டின் தலைவாசல் மேற்கு அல்லது வடக்கில் பார்க்குமாறு கட்டவேண்டும்.

பணியாளர்கள் செய்யும் சிறு தவறுகளை பூதக் கண்ணாடி வைத் துப் பாராமல், பெருந்தன்மையுடன் மன்னிக்கும் பழக்கத்தை மேற்கொள் ளுங்கள்.

**கலைஞர்களுக்கு:**

சக கலைஞர்களின் போக் கில், இணக்கமும், சுணக்கமும் கலந் தே காணப்படும். அதற்கேற்றவாறு உங்கள் பணிகளை அமைத்துக் கொள்ளுங்கள். பெரிய மனிதர் களின் ஆதரவு கிடைக்கும்.

எனினும் வேளை தவறிய நேரங்களில் சந்திப்பதை நாசுக்காகத் தவிர்த்தால், தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்து விடலாம். கடந்த கால சோதனைகள் தந்த பாடங்களை மறவாமல் செய லாற்றினால், வெற்றியும் நிம்மதியும் நிலைத்திருக்கும். வரவும், செலவும் சமமாய் இருக்கும்.

**வியாபாரிகளுக்கு:**

வருத்தத்துடன் விலகிச் சென்ற கூட்டாளிகள், மீண்டும் வரு வார்கள். குறை கூறாமல், அரவ ணைத்துக் கொள்ளுங்கள். கடும் உழைப்பின் மூலம், வியாபாரத்தை பழைய நிலைமைக்கு கொண்டு வந்து விடுவார்கள்.

அரசுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை உடன் செலுத்தி அபராதம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். விரிவாக் கத்துக்கரிய பணிகளை மேற்கொள்ள ஏற்ற காலமிது. சரக்குகள் வாங்கும் போதும், விற்கும்போதும், பெரிய தொகைக்கான வாக்குறுதி தருவதில் கவனமாய் இருங்கள்.

மனச் சோர்வும், உடல் சோர்வும் வாராத வண்ணம் ஆரோக்கியத்தில் தகுந்த கவனம் செலுத்தி வாருங்கள். புதிய முயற்சிகள் மன நிறைவைத் தரும்விதத்தில் இருக்கும்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 3,8 ஐக் கொண்டவர்களுக்கு முன்னேற் றமான காலம். சொத்து சேர்ப்பீர் கள். அயல்நாடு செல் வீர்கள்.**

**பிறப்பு எண், விதி எண் 2,9, 7 ஐக் கொண்டவர்களுக்கு தாமத பலன்களே சித்திக்கும்.**

**பிறப்பு எண், விதி எண் 1,4,5,6 ஐக் கொண்டவர்களுக்கு யோகம் சரியில்லை.**

**நட்சத்திரப் பலன்கள்:**

**விசாகம் 4-ம் பாதம்:**

உங்களின் பிடிவாத குணத்தால், வரும் வாய்ப்புகளை கை நழுவ விட்டு விடாதீர்கள். உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து போகும். பொருளாதார நிலை சிறப்பாக அமைந்தாலும், சில சமயம் வரவுக்கு மீறிய செலவுகளும் உண்டாகும்.

எனவே சேமிப்பை அதிகப் படுத்துங்கள். மனைவாங்குபவர் கள் இடைத் தரகர்களிடம் எச்சரிக் கையாய் இருப்பது நல்லது புதிய இடமாற்றத்தால் சாதகமான பலன் கள் கிட்டும். வீடு கட்டும் முயற்சி முழு வீச்சில் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பொது அறிவு, விளையாட்டு போன்ற போட்டிகளில் பெரும் பரிசால் உங்களுக்கும் பெருமை தேடித் தருவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வந்த வண்ணம் இருப்பார்கள்.

**அனுஷம் 1,2,3,4 பாதங்கள் :**

பணியில் உள்ளவர்கள், செய்கின்ற வேலையிலும் பழகுகின்ற நபர்களிடமும் எச்சரிக்கையாய் இருங்கள்.

நீங்கள் எதிர்பார்த்த ஆதாயமும், சலுகைகளும் கிடைக்கப் பெறுவீர்கள். திருமணத்திற்காக காத்திருக்கும் பெண்களுக்கு மனம் போல் மாங்கல்யம் அமையும்.

கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்கள், உங்கள் குழுவோடு இணைந்து செல்லுங்கள். விதிமுறைகளைக் கடைப்பிடித்தால், வம்பு, தும்புகளில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கலாம். தள்ளிச் சென்ற சுப நிகழ்ச்சிகள், விரைமவில் நிறைவேறும். உங்கள் அபிமானத்துக்கு உரியவர் களைச் சந்தித்து மகிழ்வீர்கள். கணினித் துறையில் உள்ளவர்களுக்கு பொற் காலமிது.

**கேட்டை 1,2,3,4 பாதங்கள்:**

குடும்பத்தில் அத்தியாவசியச் செலவுகளுக்கு முதலிடம் கொடுங்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து விடுங்கள். கடன் தொல்லையே இராது. நிலுவையில் இருந்த வழக்குகள், நஷ்டம் இல்லாமல் முடியும்.

குடும்பத்தாருடன் மகிழ்ந்திருக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். சஞ்சலங்கள் நீங்கி விடும். கலைஞர்கள் மற்றும் பொது வாழ்வில் உள்ளவர்கள் நேரந்த வறாமை, இன்முகத்துடன் பழகுவது ஆகியவற்றை கடைப் பிடித்தால், வெற்றியும் புகழும் உங்களைத் தேடிவரும்.

உடல் ஆரோக்கியத்திற்கு முதலிடம் கொடுத்து வந்தால், முன்பே இருந்த உபாதைகள் மீண்டும் தலைகாட்டாது.

**ஆலய பரிகாரம்**

செவ்வாயின் அம்சம் பெற்ற வேலவனை தொழுது வாருங்கள்.

சிக்கல்களை விலக்கி சிறப்புடன் வாழ வைப்பார்.



# துளசியின் மகிமை

நமது மஹாலெட்சுமி தேவியே பூவுலகில் அவதரித்து மக்களின் உடல்பிணி, உள்ளப்பிணி ஆகிய இருவகைப் பிணிகளையும் நீக்கி. இன்ப வாழ்வு கொடுப்பதற்காக எடுத்த வடிவமே துளசியாகும். சாதாரணமானவர்களுக்கு மருந்து செடியாகவும், தெய்வீகத் தன்மையோடு காண்பவர்களுக்கு மஹாலெட்சுமியின் ஸ்வரூபமாக காட்சியளிப்பவள் ஸ்ரீதுளசிதேவி.

துளசியை வாயிலின் முன்னாலோ, வீட்டில் அழகிய மாடங்கள் அமைத்தோ பக்தியுடன் வளர்க்க வேண்டும். தினந்தோறும் துளசிக்கு தண்ணீர்விட்டு, மலரிட்டு, குங்குமம் சந்தனமிட்டு, தீபம் ஏற்றி, காலை மாலை இருவேளைகளிலும் வணங்கி வரவேண்டும். இப்படி செய்பவர்கள் கன்னிப்பெண்களாக இருந்தால் நல்ல மணாளனைப் பெறுவார்கள். சுமங்கலிகளாக இருந்தால் மாங்கல்ய பலமும், லஷ்மி கடாஷமும் ஏற்படும்.

துளசிச் செடியின் மகத்துவம் போற்றுவதற்குரியது. துளசிச் செடி மீது பட்டகாற்று நம் வீட்டிற்குள் வருவது மிகவும் நல்லது. துளசிச் செடி உள்ள இடங்களில் பூச்சிகள் வருவதில்லை. விஷ ஜந்துக்கள் நடமாட்டம் இருக்காது. வலம்புரிச் சங்கில் வைக்கப்பட்ட தீர்த்தத்தில், துளசி இலைகளைப் போட்டு, மறுநாள் காலையில் அதை அருந்தும் போது, பல நோய்கள் தீருகின்றன. பூஜா பாத்திரங்களில் மிகவும் சிறந்ததான வில்வதளத்துடன் சேர்த்து எட்டாகக் கூறப்படும் அஷ்டதள துளசியும் ஒன்று. இது விஷ்ணு பூஜைக்கு மட்டும் அன்றி, சிவ பூஜைக்கும் சிறந்தது. துளசி மணிமாலை அணிவது உடலுக்கு மிகவும் நல்லது.

துளசி பூஜை செய்து வந்தால் சகல சௌபாக்கியங்களையும் பெறலாம். துளசிதேவியின் அஷ்ட நாமங்களையும் ஸ்தோத்திரம் செய்து வரவேண்டும். அப்படி செய்து வந்தால் அஸ்வமேதயாகம் செய்த பலன் கிட்டும். துளசி இலையின் நுனியில், பிரம்மன் தங்கி இருக்கிறார். அடியில் சங்கரன் இருக்கிறார். நடுவில் நாராயணன் வாழ்கிறார். பன்னிரெண்டு ஆதித்தியர்கள், பதினோரு ருத்திரர்கள், எட்டு வசுக்கள், அஸ்வினி தேவர்கள் ஆகியோரும் இதில் வாழ்கிறார்கள். துளசி இலை நீர், கங்கை யைப் போலப் புனித மானது.



## தானமும் - பலனும்

ஆடை தானம் - ஆயுள் விருத்தி

அரிசி தானம் - பாவம் போக்கும்

பழங்கள் தானம் - சுவர்க்க போகம் தரும்

அன்னதானம் - நினைத்தது கைகூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தனுசு

**(மூலம் 1,2,3, பாதங்கள், பூராடம் 1,2,3,4 பாதங்கள், உத்ராடம் 1-ம் பாதம்)**

## தன்னலம் இன்றி பொது நலத்துடன் செயல்படும் தனுசு ராசி நேயர்களே!

கால நேரம் பார்க்காமல் கடமையில் கண்ணாக இருக்கும் நீங்கள், தவறு செய்தவர்களை தட்டிக் கேட்கும் குணம் உள்ளவர்கள்.

இந்த தமிழ்ப் புத்தாண்டில், உங்கள் ராசி அதிபதியான குரு பகவான், கார்த்திகை 21-ம் தேதி வரை உங்கள் ராசியிலும், பிறகு குடும்ப ஸ்தானத்திலும் அமர்ந்து அருள் பாலிப்பார். இது வரை இருந்த தடைகள் நீங்கி, எல்லா விஷயங்களிலும் ஏற்றம் உண்டாகும் கலைத் துறையில் உள்ளவர்களின் கற்பனைத் திறனுக்கு நல்ல வரவேற்பு இருக்கும்.

சுபச்செலவுகளுக்காக அதிக பணம் செலவழிக்கும் காலமிது. அரசாங்க வேலைகளில் இருந்த தேக்க நிலை மாறும். பல மறைமுக எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். புதிய முயற்சிகளில் அளவான முதலீடு அவசியம்.

வியாபாரத்தில் உள்ளவர்கள், தற்காலத் தேவைகளுக்கு ஏற்றாற் போல் உத்திகளை மாற்றிக் கொண்டால், லாபத்திற்கு குறைவிராது. நீண்ட நாளாக மருத்துவ சிகிச்சையில் இருந்தவர்கள், பூரண குணமடைந்து பொலிவுடன் இருப்பார்கள்.

**பெண்களுக்கு!**

குடும்பத்தாருடன் ஆன்மிகப் பயணம் மேற்கொள்வீர்கள். படிப்புக்காக, வெளியிடத்தில் தங்கிப் படித்த பிள்ளைகள் மீண்டும் குடும்பத்தில் இணைவதால் இல்லத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும்.

உறவு வட்டத்தில் அனைவரையும் அரவணைத்துச் செல்வதால், முன்பிருந்த மனஸ்தாபங்கள் மறைந்து விடும். சொந்த பந்தங்களின் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். குடும்ப வருமானம் உயரும். அக்கம் பக்கத்து வீட்டாருடன் அளவாகப் பழகுவது நல்லது. வீடு-மனை வாங்குவதற்கான சூழ்நிலை சாதகமாக அமையும்.

நல்ல விடயங்களை உடனுக்குடன் முடித்து, உங்கள் நற்பெயரைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். முரண்டு பிடிக்கும் பிள்ளைகளிடம் அன்பாகப் பேசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகினால், பல பிரச்சனைகள் சுமூகமாகத் தீரும். உடன்பிறப்புகளின் போக்கு சிலசமயம் வருத்தத்தைத் தந்தாலும், மனம் விட்டுப் பேசினால் நல்வழிக்கு வருவார்கள்.

**மாணவர்களுக்கு:**

பாடங்களைப் பயிலுமுன், நினைவாற்றலை அதிகரிக்கும் பயிற்சிகளை செய்து வந்தால், தன்னம்பிக்கையுடன் தேர்வு எழுதலாம். உயர்க் கல்விக்கான முயற்சிகளில் தொய் வேற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அதிக கண்விழித்தலுக்கு இடம் தராமல், சிறிது சிறிதாக பாடங்களைப் பயின்று வந்தால், எந்த பாடமும் சுமையாய் தோன்றாது. தீய சகவாசத்தை ஒதுக்கிவிடுதல் அவசியம். இரவலாகப் பெறும் உபகரணங்களை, கவனமாக வைத்துக் கொண்டால், தண்டம் கட்டுதலுக்கு அவசியமிராது.

எவரையும் நம்பி உங்கள் மதிப்பெண் சான்றிதழ்களைத் தரா தீர்கள். சிறிய கேள்விகளாயினும் அதனை ஒதுக்காமல் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். உணவு விஷயங்களில் மிதமாக இருப்பது சிறந்தது.

**பணிபுரிபவர்களுக்கு:**

பதவி உயர்வால், உங்கள் பொருளாதாரமும் உயரும். மூத்த அதிகாரிகள் தரும் உதவிகளை ஏற்றுக் கொள்வதில் தயக்கமும் காட்டாதீர்கள்.

அது உங்கள் வேலைப் பளுவைக் குறைக்கும். உயர் அதிகாரிகள் மற்றும் சக ஊழியர்களைப் பற்றிய விமர்ச்சனங்களில் ஈடுபடாதீர்கள். அது உங்கள் நற்பெயரைப் பாதிக்கும்.

முதுகு வலி, கழுத்து வலி ஆகியவற்றை உடனுக்குடன் கவனித்து விட்டால் அதிக மருத்துவச் செலவுகள் வராது. பணம் புழங்கும் இடத்தில் பணி புரிபவர்கள், விழிப்புடனும் பொறுப்புடனும் பணியாற்றினால், நற்பெயர் எடுக்கலாம்.

உங்கள் திறமைகளை வெளிக் காட்டும் வாய்ப்புக்களை தகுந்த விதத்தில் பயன்படுத்தினால், உங்கள் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எவ்வளவு பணியிருந்தாலும் குடும்பத்தினரின் தேவைகளுக்கு முதலிடம் கொடுத்து வந்தால், இல்லத்தில் அமைதி நிலவும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு:**

புகழ் கண்டு மயங்காமல் பணியாற்றி வாருங்கள். நல்லலோரின் யோசனைகளும், ஆசிகளும் உங்களின் வளர்ச்சிக்கு உதவியாய் இருக்கும். உங்கள் பலம் பலவீனம் இவற்றைக் கருத்தில் கொண்டு செயலாற்றினால், வெற்றி உங்கள் பக்கமே! விமர்ச்சனங்களுக்கு இடமளிக்காத விதத்தில் உங்கள் செயல்பாடுகளைச் செம்மையாக்கி கொள்ளுங்கள். எதிர்ப்புகள் விலகி ஆதரவுகள் கூடும். புதிய பதவி வகிக்கும் யோகம் உண்டாகும். வெளிநாட்டுப் பயணங்கள் சாதகமாய் அமையும். உடனிருப்பவரின் பிரச்சினைகளை வளர விடாமல் உடனடித் தீர்வுகளைக் கண்டறிந்தால், உங்கள் மதிப்பு உயர்வது உறுதி!

**கலைஞர்களுக்கு:**

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுமுன் விதிமுறைகளையும், உங்களின் லாபத்தையும் அறிந்து செயல்படுங்கள். திறமைக்கு சவாலான நிகழ்ச்சி களைத் திறம்பட முடிப்பதன் மூலம் உங்கள் புகழ் மேலும் வளரும்.

வருவாயின் ஒரு பகுதியை சேமித்து வந்தால், பொருளாதாரத் தொய்வுகளை சரிக்கட்டிவிடலாம். அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். கலைக்குழு வைத்திருப்பவர்கள், கடல் கடந்து செல்லும் வாய்ப்பினை பெற்று மகிழ்வார்கள். சக கலைஞர்களின் குற்றங்குறைகளை பெரிது படுத்தாமல் அனுசரித்துச் செல்லுங்கள். எப்போதும் உங்களுக்கு ஆதரவு நல்குவார்கள்.

**வியாபாரிகளுக்கு:**

ஊழியர்களிடம் கண்டிப் பையும், கனிவையும் கலந்து காட்டிவந்தால், பணிகள் சீராக நடைபெறும். புதிய கூட்டாளிகள் மூலம் வியாபாரம் மேலும் விரிவடையும். இரும்பு மற்றும் மின்சாதன உதிரி பாகங்கள், இவைகளின் விற்பனையால் வரவி

**வாஸ்து**

மீனராசிக்கு 4 ஆம் இடம் மிதுனம். அதன் திசை மேற்கு. மீனத்தின் திசை வடக்கு. எனவே புதிதாக வீடு கட்டுபவர்கள் மேற்கு அல்லது வடக்கு திசையைப் பார்க்கும்படி தலைவாசல் வைக்கவும்.

னங்கள் அதிகரிக்கும். அசையா சொத்துக்களின் பராமரிப் பில் சில சிக்கல்கள் வரவினங்கள் அதிகரிக்கும். அசையா சொத்துக் களின் பராமரிப்பில் சில சிக்கல்கள் தோன்றி மறையும். அதற்குரிய ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பது நல்லது.

விளம்பர உத்திகளால் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும். தொழிலாளர் களின் நலனில் நீங்கள் அக்கறை காட்டுவீர்கள். அவர்களும் இரவு பகல் பாராமல் பாடுபட்டு லாபத்தை ஈட்டித் தருவார்கள்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 1,4,6 ஐக் கொண்டவர்களுக்கு சுப காரியங்கள் நடக்கும். சொத்து சேரும்.**

**பிறப்பு எண், விதி எண் 3,9 ஐக் கொண்டவர்களுக்கு தாமதமாக அதிக முயற்சியின் விளைவாக காரியம் கைகூடும்.**

**பிறப்பு எண், விதி எண் 2,5, 7,8 ஐக்கொண்டவர்களுக்கு பிறர் உதவியால் நன்மை விளையும்.**

## நட்சத்திரப் பலன்கள்

**மூலம் 1,2,3,4 பாதங்கள்:**

உங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையானவர்களின், தேவை யறிந்து செய்யும் உதவியால், அவர் களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும். எதிரிகள் அடிபணிந்து கிடப் பார்கள். தொழிலில், ஆரோக்கிய மான போட்டிகளுக்கு ஊக்கமளியுங்கள்.

அதே சமயம் போட்டிக்கும், பொறாமைக்கும் இடமளிக்காதீர்கள். நியாயமான வெற்றி உங்களை நாடி வரும். குழந்தைகள் விஷயத்தில் கவனமாக இருங்கள். இதமான கண்டிப்பு நல்ல பலனைத் தரும். பணியில் இருப்பவர்கள், முகஸ்துதி புரிபவர்களை அருகில் சேர்க்காதீர்கள். உண்மையான உதவி செய்பவர்களின் அருமையை உணர்ந்து கொண்டால், பணியில் சிறப்பான வகையில் முன்னேற்றம் உண்டாகும்.

**பூராடம் 1,2,3,4 பாதங்கள்:**

இதுவரை சுணக்கமாய் இருந்த நிலை மாறி, சுறுசுறுப்புடன் செயலாற்றி நினைத்த இலக்கை அடைவீர்கள். பொருளாதாரம் சீராக இருக்கும். வராக்கடனும் வந்துவிடும். குடும்பத்தில் அனுசரித்து நடந்து கொண்டால், அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்காகப் பாடுபடுவார்கள். உங்களின் பணிச் சுமையை மகிழ்வுடன் பகிர்ந்து கொள்வார்கள். வெற்றி வந்தாலும், நிதானமாக இருந்தால், நற்பெயரை எளிதில் தக்க வைத்துக் கொள்ளலாம். எங்கு பயணம் சென்றாலும், உடைமை களில் கவனமாய் இருப்பது அவசி யம். புதிய வகை ஆபரணங்கள், நூதனப் பொருட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை மேலும் கூடும்.

**உத்ராடம் 1-ம் பாதம்:**

பாராமுகமாய் இருந்த உறவி னர்கள் மீண்டும் உறவுகளை புதிப்பித்துக் கொள்வார்கள். சொந்த வீடு என்னும் கனவு கனிந்து வரும் காலமிது. உங்களின் ஆசைப்படி இல்லம் அமையும். திருமணம் ஆகியும் மழலை பாக்கியம் இல்லாத வர்களுக்கு, இந்த ஆண்டு குழந்தைச் செல்வம் கிட்டும்.

ஆரோக்கிய விடயத்தில் சற்று கவனமுடன் இருந்தால், எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். தேவையற்ற நட்பைத் தவிர்ப்பதால், நல்ல முன்னேற்றத்தை அடை வீர்கள். பாதியில் நின்ற பணிகள் முழுமை பெற்று விடும்

**ஆலய பரிகாரம்**

தமிழகத்தில் மதுரைக்கு அருகில் உள்ள ஆலங்குடி சென்று ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வழி படவும். தென்தமிழகத்தில் திருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் சென்று முருகபெருமானை தரிசனம் செய்யவும்.

## தமிழ் வருடங்களுக்கு இணையான ஆங்கில வருடங்கள்

| | | | |
|---|---|---|---|
| பிரபவ | 1927 - 28, 1987 - 1988 | ஹேவிளம்பி | 1957 - 58 2017 - 2018 |
| விபவ | 1928 - 29, 1988 - 1989 | விளம்பி | 1958 - 59 2018 - 2019 |
| சுக்ல | 1929 - 30, 1989 - 1990 | விகாரி | 1959 - 60 2019 - 2020 |
| பிரமோதூத | 1930 - 31, 1990 - 1991 | சார்வரி | 1960 - 61 2020 - 2021 |
| பிரஜோத்பத்தி | 1931 - 32, 1991 - 1992 | பிலவ | 1961 - 62 2021 - 2022 |
| ஆங்கீரச | 1932 - 33, 1992 - 1993 | சுபகிருது | 1962 - 63 2022 - 2023 |
| ஸ்ரீமுக | 1933 - 34, 1993 - 1994 | சோபகிருது | 1963 - 64 2023 - 2024 |
| பவ | 1934 - 35, 1994 - 1995 | குரோதி | 1964 - 65 2024 - 2025 |
| யுவ | 1935 - 36, 1995 - 1996 | விசுவாவசு | 1965 - 66 2025 - 2026 |
| தாது | 1936 - 37, 1996 - 1997 | பராபவ | 1966 - 67 2026 - 2027 |
| ஈஸ்வர | 1937 - 38, 1997 - 1998 | பிலவங்க | 1967 - 68 2027 - 2028 |
| வெகுதான்ய | 1938 - 39, 1998 - 1999 | கீலக | 1968 - 69 2028 - 2029 |
| பிரமாதி | 1939 - 40, 1999 - 2000 | சௌமிய | 1969 - 70 2029 - 2030 |
| விக்கிரம | 1940 - 41, 2000 - 2001 | சாதாரண | 1970 - 71 2030 - 2031 |
| விஷு | 1941 - 42, 2001 - 2002 | விரோதிகிருது | 1971 - 72 2031 - 2032 |
| சித்ரபானு | 1942 - 43, 2002 - 2003 | பரிதாபி | 1972 - 73 2032 - 2033 |
| சுபானு | 1943 - 44, 2003 - 2004 | பிரமாதீச | 1973 - 74 2033 - 2034 |
| தாரண | 1944 - 45, 2004 - 2005 | ஆனந்த | 1974 - 75 2034 - 2035 |
| பார்த்திப | 1945 - 46, 2005 - 2006 | ராக்ஷஸ | 1975 - 76 2035 - 2036 |
| விய | 1946 - 47, 2006 - 2007 | நள | 1976 - 77 2036 - 2037 |
| சர்வசித்து | 1947 - 48, 2007 - 2008 | பிங்கள | 1977 - 78 2037 - 2038 |
| சர்வதாரி | 1948 - 49, 2008 - 2009 | காளயுக்தி | 1978 - 79 2038 - 2039 |
| விரோதி | 1949 - 50, 2009 - 2010 | சித்தார்த்தி | 1979 - 80 2039 - 2040 |
| விக்ருதி | 1950 - 51, 2010 - 2011 | ரௌத்திரி | 1980 - 81 2040 - 2041 |
| கர | 1951 - 52, 2011 - 2012 | துன்மதி | 1981 - 82 2041 - 2042 |
| நந்தன | 1952 - 53, 2012 - 2013 | துந்துபி | 1982 - 83 2042 - 2043 |
| விஜய | 1953 - 54, 2013 - 2014 | ருத்ரோத்காரி | 1983 - 84 2043 - 2044 |
| ஜய | 1954 - 55, 2014 - 2015 | ரக்தாக்ஷி | 1984 - 85 2044 - 2045 |
| மன்மத | 1955 - 56, 2015 - 2016 | குரோதன | 1985 - 86 2045 - 2046 |
| துன்முகி | 1956 - 57 2016 - 2017 | அட்சய | 1986 - 87 2046 - 2047 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மகரம்

**(உத்ராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம் 1,2,3,4 பாதங்கள், அவிட்டம் 1,2 பாதங்கள்)**

**புகழ் கண்டு மயங்காமல் கடமையாற்றும் மகர ராசி நேயர்களே!**

ஆணவத்திற்கும் அதிகாரத்திற்கும் அசைந்து கொடுக்காத நீங்கள் அன்புக்கு அடிபணிவீர்கள். இந்தத் தமிழ்ப்புத்தாண்டில், குரு பகவான் அதிக அளவில் வெளியூர் பயணங்களை அளிப்பார். புதிய மனிதர்களையும், புதிய இடங்களையும் பார்க்கும் வாய்ப்பால், உங்களின் நட்பு உலகம் விரிவாகும். ஆன்மீக நாட்டத்தால், அதிக அளவு இறைப்பணியில் ஈடுபடுவீர்கள்.

குடும்ப அமைதியைக் காப்பதில் உங்களின் அனுசரிப்பு அதிகமாக இருக்கும் காலமிது. அவசரச் செலவுகளுக்கு உங்கள் சேமிப்பு கை கொடுக்கும் வெளி வட்டாரப்பழக்கத்தில் கவனமாய் இருந்தால் தொல்லைகள் தலைகாட்டாது. வாழ்க்கை தரும் பாடங்களால் உங்களின் மனோதிடம் மேலோங்கும்.

கோபத்தைத் தவிர்த்து, கனிவாகப் பேசி, காரியங் களைச் சாதிக்கும் பழக்கம் நல்ல பலனைத் தரும். உங்கள் அந்தரங்க விஷயங்களில் அடுத்தவர் தலை யீட்டைத் தவிர்த்தாலே, பல பிரச்சனைகள் பெரிதாகா மல், சுமுகமாக முடியும். உங்கள் கடும் உழைப்பின் பலன் வெற்றி மாலையாய் வந்து விழும்!

**பெண்களுக்கு:**

உங்களை நோக்கி வரும் பிரச்சினைகளைத் தைரிய மாக எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். குழந்தை களின் ஆரோக்கியத்தில், காட்டும் அக்கறையால், மருத்துவச் செலவு குறையும். பிறரை நம்பி, முக்கிய பொறுப்புக்களை அளிக்காதீர்கள். அவற்றை உங்களின் நேரடி கவனிப்பில் வைத்தல் நல்லது. எல்லோரையும் அனுசரித்து நடந்து கொண்டால், உறவுகள் சீராக இருக்கும்.

எதிலும் எச்சரிக்கையாய் இருந்தால், எதிரிகளால் உருவாகும் இடைஞ்சல்கள் பஞ்சாய் பறந்துவிடும். வாக்கில் இனிமை இருந்தால், அனைத்தும் இனிமை யாகவே முடியும். உடன் பிறந்தவர்கள் இடையே ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணக்கை, உங்கள் மென்மையான அணுகு முறையால் தீர்த்து விடுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமையில், அனுபவத்தின் முதிர்ச்சி வெளிப்படும். பிரயாணங்களில், பதப்படுத்திய உணவு வகைகளைத் தவிர்த்தல் நல்லது.

விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வைத்தால், வீண் தேடல்களைத் தவிர்க்கலாம். குழந்தைகளின் சகவாசங்களைக் கவனித்துத் தேவைப்பட்டால், இதமான அறிவுரை சொல்லுங்கள். புரிந்து கொண்டு நடந்து, நற்பெயர் பெறுவார்கள்.

**சனி ஸ்துதி**

**நீலாஞ்ஜன சமாபாசம்**
**ரவிபுத்ரம் யமாக்ரஜம்**
**ச்சாயா மார்த்தாண்ட சம்பூதம்**
**தம் நமாமி சனைஸ்வரம்**

**மாணவர்களுக்கு:**

உங்களின் முழு உழைப்பையும் படிப்பில் செலுத்தி வந்தால் மதிப்பெண்கள் பெறுவதில் தடை யேதும் இராது. ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஆலோசனைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டால், உயர் கல்விக்கான தேர்வுகளில் முதலிடம் பெறுவது உறுதி. முயற்சி செய்வதில் தளர்ச்சிக்கு இடம் கொடுக்காதீர்கள். தேர்வு சமயங்களில், குளிர்ச்சியான உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

மாதிரி தேர்வுகளை தவறாமல் எழுதினால், தேர்வு பயம் விலகி விடும். கண் சம்பந்தமான உபாதைகளை உடனடியாக கவனிப்பது நல்லது. பித்தியேக படிப்பு தொடர்பாக, வெளிநாடுகளுக்குச் செல்ல எழுதும் தேர்வுகளின் முடிவுகள் அனுகூலமாய் அமையும். நேரம் கிடைக்கும் போது, பிடித்த பாடங்களைப் படித்துக்கொண்டால், கல்வி கரும்பாய் இனிக்கும்!

**பணி புரிபவர்களுக்கு:**

தேங்கிக் கிடக்கும் பணிகளைத் திறம்பட முடிப்பதால், அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். பதவி உயர்வால், பொறுப்புகளும் கூடும்.

சக பணியாளர்களின் ஆதரவு குறையாமல் பார்த்துக் கொண்டால், தகுந்த சமயத்தில் உதவிக்கரம் நீட்டுவார்கள்.

அலுவலகம் மூலமாக எதிர்பார்த்த கடன்கள் சற்றே தாமதமாகக் கிடைக்கும். இதுவரை இருந்த மந்தகதி விலகிவிட்டாலும், எதிலும் கவனமாக இருந்தால், உங்கள் நற்பெயர் மேலும் உயரும்.

பணியின் காரணமாக, சிலர் வேறிடங்களில் தங்க நேரிடும். பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கம் இருப்பதால், ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் நல்லது. உடல் ஆரோக்கியத்தில் தகுந்த அக்கறையுடன் இருந்தால், அலுவலகப் பணியில் முழு கவனத்துடன் செயலாற்ற முடியும்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு:**

உயர்வான எண்ணங்களையும், தனித் திறமையும் கொண்டவர்களின் உதவியால், உயர்ந்த பதவியில் அமர்வீர்கள். விலை உயர்ந்த வாகனங்களை வாங்கும் காலமிது. பணப் புழக்கம் சரளமாக இருக்கும். உங்களின் தேவைகள் பூர்த்தியாகும். சமூகத்தில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும்.

நண்பர்களிடம் இதமாக நடந்து கொண்டால், வீண் விரோதம் வளராது. கண் மூடித்தனமாக புதியவரை நம்பி, பெரிய பொறுப்புக்களை ஒப்படைக்காதீர்கள். வாக்குறுதிகளை கொடுக்கும் முன்பு, சிந்தித்துச் செயல்படுங்கள். சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொண்டால், சங்கடங்களைத் தவிர்க்கலாம். சாந்தமாக உரையாடினால், நண்பர்களும், நல்லவர்களும் உதவி செய்ய முன் வருவார்கள்.

**கலைஞர்கள்:**

விருந்து, விழா என்று மகிழும் காலமிது. மக்கள் விரும்பும் புதிய மாறுதல்களை மேற்கொண்டால், வருகின்ற வாய்ப்புகளைத் தக்க வைத்துக் கொள்ளவது எளிதாக இருக்கும். உங்களின் நீண்ட நாள் திட்டங்களை நடைமுறைப்படுத்த, அதிகம் உழைக்க வேண்டியிருக்கும்.

உழைப்புக்கேற்ற பலனும் கிடைக்கும். சக கலைஞர்களின் போக்கில் விரும்பத்தகாத மாறுதல்கள் ஏற்படும். அவர்களை ஒதுக்காமல் ஆதரவு தந்தால், நல்வழிக்கு மாறுவார்கள். உங்கள் வளர்ச்சிக்கும் துணை புரிவார்கள்.

**வாஸ்து**

மகர ராசியின் 4 ஆம் வீடு மேஷம். அதன் திசை கிழக்கு. மகரத்தின் திசை தெற்கு.

எனவே புதிதாக வீடு கட்டுபவர்கள் தலைவாசல் கிழக்கு அல்லது தெற்கு பார்த்தபடி கட்டவும்.

**வியாபாரிகளுக்கு:**

புதிய பணியாட்கள் வந்து சேர்வார்கள். சிலருக்கு, எதிர்ப்பையும் மீறி, புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். வருகின்ற லாபத்தால், குடும்ப பிரச்சனைகள் தீர்ந்துவிடும்.

கணக்குகளில் சில சிக்கல்கள் எழும் வாய்ப்பும் இருப்பதால்,

தேவையான ஆவணங்களையும், கோப்புகளையும் தக்க பாதுகாப்பாக வைப்பது நல்லது. வங்கிக் கணக்கு களையும் சரியான முறையில் வைத்துக் கொண்டால், அபராதம் கட்ட நேரிடாது.

கூட்டாளிகளிடம் பொறுப்புக்களைத்தரும் முன்பு, தகுந்த ஆலோசனை அவசியம். உங்களின் வாக்குச் சாதுர்யத்தால், வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை உயரும். விரிவாக்கமும் தடையின்றி நடைபெறும்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 1,6,8 ஐக்கொண்டவர்களுக்கு தக்க சமயத்தில் உதவி கிடைத்து முன்னேறுவீர்கள். சொத்து சேரும்.**

**பிறப்பு எண், விதி எண் 2,4,7 ஐக் கொண்டவர்களுக்கு சுமாரான பலன், யோசித்து செயலாற்றவும்.**

**பிறப்பு எண், விதி எண் 3,5,9 ஐக்கொண்டவர்களுக்கு குரு வக்ர காலத்தில் நன்மை நிறைய உண்டு.**

**நட்சத்திரப் பலன்கள்**

**உத்திராடம் 2,3,4 பாதங்கள்:**

திடமான மனத்துடன் பணியில் ஈடுபட்டால், எந்த சிரமும் வராது. வருமானமும், செலவும், கணக்கின்றிப் பெருகும். பிள்ளைகளுக்கு அரசு பதவிகள் கிடைக்கும். உறவாடிக் கெடுப்பவர்களிடமிருந்து விலகியே இருப்பது நன்மை தரும். சகோதரர் வழியில் சில செலவுகள் செய்வீர்கள்.

வண்டி வாகனங்களால் செலவுகள் அதிகமாகும். சிலர் பூர்வீகச் சொத்துக்கள் விற்று, புதிய மனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவார்கள். உங்களின் செல்வாக்கு, சொல்வாக்கும் பெருகும். பிள்ளைகளின் கல்வி நலம் மேலோங்கும். மனைவி வழிச்சொத்து வந்து சேரும்.

**திருவோணம் 1,2,3,4 பாதங்கள்:**

கொடுக்கல் வாங்கலில் தேக்கம் ஏற்படும். வாக்கு வாதங்களுக்கு இடமளிக்காமல் இருந்த வந்தால், குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவிராது. புதிய முயற்சிகள் தடையின்றி நடைபெறும்.

நுண்கலையாளர்களின் திறமைக்கு உரிய பணியும், பாராட்டும் கிடைக்கும். அரசு தொடர்புடைய தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவினங்கள் அதிகமாய் இருக்கும்.

ஆலய வழிபாடு, அமைதியைத் தரும். புதிய துறையில் ஈடுபடுபவர்களுக்கு, தக்க உதவி கிடைக்கும். பிள்ளைகள் உங்களின் விருப்பமறிந்து நடப்பார்கள்.சிறிய பிரச்சனைகளை பெரிது படுத்தாமல் இருந்தால், உறவுகள் அனுசரணையாக இருப்பார்கள்.

**அவிட்டம் 1,2, பாதங்கள்:**

உற்றார் உறவினரின் வருகை அதிகரிக்கும். அரசாங்கப் பணியில் இருப்பவர்கள் கவனத்துடன் பணிபுரிய வேண்டும்.

தொழில் அபிவி ருத்திக்கு அதிக மூலதனம் போட வேண்டியிருக்கும். வியாபாரத்தில் மந்தமான நிலை தோன்றி விலகும். பூர்வீகச் சொத்துக்களைப் பெற, அதிகம் செலவழிக்கும் நிலை உருவாகும்.

சக ஊழியர்களின் பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பது சாலச் சிறந்தது.

**ஆலய பரிகாரம்**

ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாற்றி வழிபடவும். திருப்பதி பாலாஜியை தரிசித்து வரவும்.

உங்கள் ராசி நாதனான சனிபகவானை, சனிக்கிழமை தோறும் தொழுது வாருங்கள்.

குறைகளைக் களைந்து கேட்டதையெல்லாம் கனிவுடன் தருவார்.

## வலம் வருதல்



| | |
|---|---|
| விநாயகர் | 1 அல்லது 3 முறை |
| கதிரவன் | 2 முறை |
| சிவபெருமான் | 3,5,7 முறை |
| முருகன் | 3முறை |
| தட்சணாமூர்த்தி | 3 முறை |
| சோமஸ்கந்தர் | 3 முறை |
| அம்பாள் | 4,6,8 முறை |
| விஷ்ணு | 4 முறை |
| லஷ்மி | 4 முறை |
| அரசமரம் | 7 முறை |
| அனுமான் | 11,16 முறை |
| நவக்கிரகம் | 3,9 முறை |
| பிரார்த்தனை | 108 முறை |

## விடியற்காலையில் நீர் அருந்துதல்



துளசி, வில்வம், தாமரைப்பூ, அருகம்புல் ஆகிய ஏதாவது ஒன்றினை செம்புப்பாத்திரத்தில் இரவு நீரில் போட்டு, மூடி வைத்து, விடியற்காலம் அந்த நீரை அருந்தினால், உடலில் வெப்பம் சம்பந்தமான நோய்கள் தீரும்.

விடியற்காலை படுக்கையை விட்டு எழுந்ததும் நீர் அருந்த வேண்டும். இதனால் உடல் வெப்பம் குறையும். இரவில் ஒரு லிட்டர் தண்ணீரை காய வைத்து விடியற்காலை அருந்த வேண்டும். இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் குறையும்.

## நவக்கிரக வழிபாட்டு முறை

திருக்கோயில்களில் நவக்கிரகங்களை சுற்றும்போது 1,2,3 என்று விரல்விட்டு எண்ணி சுற்றக் கூடாது. எண்ணாமல் சுற்றுவதற்கு ஓர் எளிய வழி...

| | | |
|---|---|---|
| முதல்சுற்றில் | - | ஞாயிறே போற்றி |
| இரண்டாவது சுற்றில் | - | திங்களே போற்றி |
| மூன்றாவது சுற்றில் | - | செவ்வாயே போற்றி |
| நான்காவது சுற்றில் | - | புதனே போற்றி |
| ஐந்தாவது சுற்றில் | - | வியாழனே போற்றி |
| ஆறாவது சுற்றில் | - | வெள்ளியே போற்றி |
| ஏழாவது சுற்றில் | - | சனியே போற்றி |
| எட்டாவது சுற்றில் | - | ராகுவே போற்றி |
| ஒன்பதாவது சுற்றில் | - | கேதுவே போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கும்பம்

**(அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம் 1,2,3,4 பாதங்கள், பூரட்டாதி 1,2,3 பாதங்கள்)**

## விடாமல் உழைக்கும் கும்ப ராசி நேயர்களே!

வாக்குத் தவறாத நீங்கள் கால நேரம் பார்க்காமல் கடினமாக உழைப்பவர்கள். அமைதியாக இருக்கும் நீங்கள், போட்டியென வந்துவிட்டால், புலியாக மாறி விடுவீர்கள். இந்தத் தமிழ்ப் புத்தாண்டில், கார்த்திகை 3-ம் வாரம் வரை, குரு பகவானின் அருளாசியினால், மங்களகரமான நிகழ்ச்சிகள் மடமடவென்று நடைபெறும். குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். சொன்ன சொல்லை நிறைவேற்றும் காலமிது.

பொருளாதார நிலையில் பிரமாதமான மாற்றங்கள் ஏற்படும். உங்களது முயற்சிக்கு வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். கிடப்பில் போடப் பட்டிருந்த பணிகள் எல்லாம் கிடுகிடுவென்று நடைபெறும். பூர்வீகச் சொத்துக்களால் லாபம் உண்டாகும். இதுவரை நிலவி வந்த சிக்கல்கள் யாவும் விலகி, நீங்கள் நினைத்த காரியத்தைத் துணிவுடன் சாதிப்பீர்கள்.

புதிய திட்டங்களை மிகவும் அற்புதமாக செயல்படுத்தும் வலிமை உண்டாகும். வியாபாரத்தில் சிறப்பான லாபமும் அபிவிருத்தியும் கிடைக்கும். மனதில் நிலவிய குழப்பங்கள் தீர்ந்து, உற்சாகமாய் செயலாற்றுவீர்கள்.

**பெண்களுக்கு:**

புதிய உறவால், மகிழ்ச்சி கூடும். கணவரின் ஆரோக்கியம் சீராக இருக்கும். உற்றார் உறவினர்களின் உதவியும், ஆதரவும் கிடைக்கும். கணவன் மனைவி இடையே இருந்து வந்த மனவேற்றுமைகள் விலகி, மகிழ்ச்சி மலரும். எட்டாக் கனியாய் இருந்தவைகள், கனிந்து வரும். புதிய பொருட்கள், நகைகள் வாங்கும் யோகம் உண்டாகும். தாராளமான தனவரவால், சுப நிகழ்ச்சிகளுக்கு மகிழ்வுடன் பணம் செலவழிப்பீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். கடன் முழுவதும் அடைபடும். முதியோரின் ஆரோக்கியத்தில் கவனமாய் இருக்க வேண்டிய காலம். வீட்டு உபயோகப் பொருள்கள், புதிதாக வாங்க வேண்டியிருக்கும். நீங்கள் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயணம், மனத்தெம்பையும், தெளிவையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீகச் சொத்து விடயமாக ஏற்பட்டிருந்த சிக்கல்கள் எல்லாம் அவிழ்ந்து, தெளிவான நிலை உண்டாகும்.

**மாணவர்களுக்கு:**

படிக்கும் முறையறிந்து படித்தால், அனைத்துப் பாடங்களையும் திறம்பட படித்து விட முடியும். விளையாட்டுகளில் கவனத்தைச் சிதற விடாமல், முழு மூச்சுடன் படித்தால், நினைத்த பாடம், கிடைக்கப் பெறுவீர்கள். சிலருக்கு, படிப்பு முடிந்தவுடன், உடனடியாக சிறந்த வேலை கிடைக்கும். கடினமான பாடங்களில் கவனக் குறைவிற்கும், மறதிக்கும் இடமளிக்காதீர்கள். அவ்வப்போது எழும் சந்தேகங்களை உடனடியாக தீர்த்துக் கொண்டால், கடைசி நேர பதற்றங்களைத் தவிர்த்துவிடலாம். படிப்புக்கு அளிக்கும் முக்கியத் துவத்தை, ஆரோக்கியத்திற்கும் அளித்து வந்தால், சுறுசுறுப்பாய் தேனீ போல், தேவையான செய்திகளைச் சேகரிக்க முடியும். பெற்றோர் தரும் அறிவுரைகளை ஏற்று நடந்தால், கல்விக்கான அடித்தளம சிறந்த முறையில் இருக்கும்.

**பணி புரிபவர்களுக்கு:**

பணம் இல்லையே என்ற நிலையை கடந்து, பணத்தை என்ன செய்யலாம், எதில் முதலீடு செய்யலாம் என்கின்ற அளவுக்கு பொருளாதாரம் உயரும். நீங்கள் பணிபுரியும் துறையில், உயர் பதவியில் அமர்வீர்கள். இதுவரை அனுபவித்த மனக் கஷ்டம் நீங்கி விடும். இனி நடக்கப் போவது நல்ல நாட்களே! உயர் அதிகாரிகள் உங்களின் ஆலோசனை கேட்டு நடப்பார்கள். கணினித் துறையில் உள்ளவர்களின் திறமையால், நீங்கள் வேலை செய்யும் நிறுவனம் முன்னேற்றம் காணும். இதனால் உங்கள் மரியாதை உயரும். அலுவலகத்தில், உங்களுக்கென்று தனி கௌரவம் இருக்கும். எந்தத் துறையில் பணி புரிந்தாலும், உங்களின் திறமையால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள்.

**பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு!**

பதவிக்கு தரும் மதிப்பை பண்புக்கு தர வேண்டும் என் நினைக்கும் நீங்கள், பிறரிடமும் அப்படியே நடந்து கொள்வீர்கள். படபடவென்று வார்த்தைகளை வீசாமல் இருந்தால், வருத்தப்பட வேண்டிய நிலை வாராது. நிதானமான போக்கு நன்மையைத் தரும். சரளமான பணப் புழக்கம் இருந்தாலும் ஒரு புறம் செலவுகள் இருந்து கொண்டே இருக்கும். உங்கள் சிந்தனையும், திறமையும் ஒன்று பட்டால், ஒருவரும் உங்களை அசைக்க முடியாது!

இதுவரை உங்களை இழிவாக நினைத்தவர்கள் கூட, உங்களின் செயலாற்றல் கண்டு வியந்து நிற்பார்கள். வெளிநாட்டுப் பயணங்கள், அனுகூலப் பலன்களைத் தரும். என்னதான் தலை போகிற வேலையாய் இருந்தாலும், வேளைக்கு உணவு உண்டு வந்தால், ஆரோக்கியமும் சீராக இருக்கும், சிறப்பாகவும் செயலாற்ற முடியும்.

**கலைஞர்களுக்கு:**

வாய்ப்புகள் வந்தாலும், சில சமயம் எதிர்பார்த்த பணவரவு இருக்காது. உங்களின் தொழிலுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவது, வீடு மாற்றுவது, வாகனங்களைப் பராமரிப்பது என வருகின்ற வருமானத்தை விட செலவுகள் கூடுதலாகும். தொல்லை கொடுத்து வந்த நண்பர்கள் இணக்கமாய் நடந்து கொள்வார்கள். கால தாமதமான திருமணங்கள் விரையில் நடந்து விடும். சக கலைஞர்களின் குற்றங்குறைகளை மற்றவரிடம் பேசாமல் இருப்பது அவசியம். கலை நிகழ்ச்சிகள் தொடர்பாக, ஏற்கனவே இருந்த பிரச்சனைகள், மீண்டும் வராத வண்ணம் உங்களின் செயல்பாடு இருப்பது நல்லது. வெளிநாடு செல்பவர்கள், வதந்திகளுக்கு இடம் தராத விதத்தில், பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

**வியாபாரிகளுக்கு:**

லாபகரமான முயற்சிகளில் ஈடுபட இது உகந்த நேரம். எதிரிகளிடம் எச்சரிக்கையாய் இருந்தால், புதிய பிரச்சனைகள் தோன்றாது. வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப, புதிய பொருட்களைத் தக்க சமயத்தில் தகுந்த முறையில் அறிமுகப்படுத்தினால், லாபம் இரட்டிப்பாகும். உங்களால் நன்மையடைந்த கூட்டாளிகள், திடீரென்று பிரிந்து புதிய தொழிலில் ஈடுபடுவார்கள். உண்மையும், விசுவாசமும் உள்ள தொழிலாளர்களின் ஆதரவால், எதிலும் வெற்றி அடைவீர்கள். கடன் தொல்லைகள் படிப்படியாக குறையும். வியாபார வளர்ச்சிக்காக நிறுவனங்கள் தரும் சலுகைகள், உங்கள் வாடிக்கை யாளர்களை சென்றடைவதில் தடை இல்லாமல் பார்த்துக்கொண்டால், அனைவராலும் பாராட்டப்படுவீர்கள். புதிய நிறுவனங்களும் உங்களை நாடி வரும். வெளிநாட்டு ஒப்பந்தங்கள் லாபகரமாய் இருக்கும்.

**நியூமராலஜி :**

**பிறப்பு எண், விதி எண் 5,6 ஐக்கொண்டவர்களுக்கு இந்த ஆண்டில் தேவையனைத்தும் பூர்த்தியாகும். சொத்து சேரும்.**

**பிறப்பு எண், விதி எண் 2,9,4 கொண்டவர்களுக்கு மத்திம பலன்.**

**பிறப்பு எண், விதி எண் 1,3,7,8 கொண்டவர்களுக்கு அதிக முயற்சி தேவை.**

## நட்சத்திரப் பலன்கள்

**அவிட்டம் 3,4 பாதங்கள்:**

நண்பர்கள், நல்லோரின் ஆதரவால், வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். கடந்த காலத்தில் ஏற்பட்ட தேவையில்லாத செலவுகள் குறைந்து, வரவுகள் அதிகமாகும். குடும்ப வாழ்வில் பூரிப்பு உண்டாகும். சுபகாரிய முயற்சிகளில் பரிபூரண வெற்றி உண்டாகும். தேவையற்ற கருத்து மோதல்களுக்கு இடமளிக்காமல், இதமாக நடந்து கொண்டால், உறவினர் உங்களை விரும்பி வருவார்கள். பணியில் உள்ளவர்களுக்கு, உயர் அதிகாரிகளின் ஆதரவு பெருகும். மாணவர்கள், ஆசிரியர் காட்டும் வழியில் நடந்தால், நற்பலன்களும், நல்ல பெயரும் கிடைக்கும்.

**சதயம் 1,2,3,4 பாதங்கள்:**

தொழிலில் இருந்த போட்டிகள், பொறாமைகள் விலகும். பொருட்களின் வருகையும்,

**வாஸ்து**

**கும்பராசிக்கு 4 ஆம் வீடு ரிஷபம். அதன்திசை தெற்கு. கும்பத்தின் திசை மேற்கு.**

**எனவே புதிதாக வீடு கட்டுபவர்கள் தலைவாசல் தெற்கு அல்லது மேற்கு பார்த்துபடி கட்டவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கையும் சந்தோஷத்தைத் தரும். உடல்நலனில் கவனமாக இருந்தால், மருத்துவ விடுப்புக்கு அவசியமிராது. பிள்ளைகளின் வழியில் புதிய செலவுகள் ஏற்படும்.

தனியார் நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு, பாராட்டும், விருதுகளும் கிடைக்கும். எடுக்கும் காரியத்தில் வெற்றி கிட்டுவதால், மனதில் மகிழ்ச்சியும், வாழ்வில் ஏற்றமும், உயர்வும் உண்டாகும். சேமிப்பும் அதிகமாகும். கலைஞர்களின் உழைப்புக்கு உரிய மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். சிலருக்கு வாகன வகையில் செலவுகள் கூடும்.

திருமணமான பெண்கள், புகுந்த வீட்டில் அனைவரின் அன்புக்கும், அபிமானத்திற்கும் பாத்திர மாவார்கள். சிலர் பழைய வீட்டை மனதுக்கிசைந்த வகையில் புதுப்பிக்கும் பணியில் இறங்குவார்கள்.

### பூரட்டாதி 1,2,3 பாதங்கள்:

கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலை இருக்கும். பல நாட்களாக வசூலாகாத கடனும் வசூலாகிவிடும். எதிரிகளின் பலம் குறையும் இல்லத்தில் உங்களின் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். முன்பிருந்த நெருக்கடிகளும், தேக்க நிலையும் மாறும்.

சிரத்தை எடுத்து செய்யும் காரியங்கள் நல்ல பலனைத் தரும்.

இருந்த கோரிக்கைகள் நிறைவேறிடும். கணவன் மனைவி இடையே இருந்த பிரச்சனைகள் மறையும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும்

### ஆலய பரிகாரம்

உங்கள் ராசி நாதனான சனியின் உள்ளம் குளிர, அவருக்குப் பிரியமான நீல நிற மலர்கள் கொண்டு வழிபடுங்கள். அனைத்து வளங்களையும் அள்ளி, அள்ளித் தருவார். தமிழ்நாட்டில் நாகப் பட்டினம் அருகில் திருக்கடையூர் சென்று அபிராமி தாயை வணங்கி வரவும்.

திருப்பரங்குன்றம் சென்று முருக தரிசனம் செய்யவும்.

## பன்னிரண்டு ராசிகளும் அவற்றிற்குரிய பொருள்களும்



**மேஷம்:**

புன்செய் பயிர்கள், கேழ்வரகு, கோதுமை, பருத்தி, தங்கம்

**ரிஷபம்:**

அரிசி, புஷ்பம், பசுக்கள், எருமை, ஜவுளிகள்

**மிதுனம்:**

படர்கொடிகள், பருத்தி, அல்லி வேர், காற்றுக் காலத்துப் பயிர்கள்



**கடகம்:**

கிழங்குகள், பழவர்க்கம், வாழை இழைகள், புல், பட்டைகள்

**சிம்மம்:**

ஆகார தானியங்கள், கருப்பு -கட்டி, ரஸ வஸ்துக்கள், தோல்கள்

**கன்னி:**

கோதுமை, கொள்ளு, சணல், நார்

**துலாம்:**

கோதுமை, கடுகு, உளுந்து



**விருச்சிகம்:**

கரும்பு, உலோக வர்க்கங்கள்

**தனுசு:**

எள்ளு, வேர்கள், கிழங்குகள், உப்பு, ஆயுதங்கள், வஸ்திரங் கள்

**மகரம்:**

கரும்பு, விருஷங்கள், முட்செடி கள், காரீயம், தங்கம்



**கும்பம்:**

புஷ்பம், பழ வர்க்கங்கள், இரத்தினங்கள், பலவிதச் சாமான்கள்

**மீனம்:**

மீன்கள், எண்ணெய், முத்துக்கள், வைரங்கள் மற்றும் சில்லறைச் சாமான்கள்

**பலன்கள்**

எந்த ராசிக்கு 3,6,10,11 ல் பாபக்கிரகங்கள் எப்போது இருக் கின்றனவோ, அந்த ராசிக்குரிய பயிர் கள் அப்போது விருத்தியாகும். எந்த ராசிக்கு 1,2,4,5,7,9,12ல் பாபக் கிரகங்கள் எப்போது இருக் கின்றனவோ, அப்போது ராசியின் வஸ்துக்கள் விலை அதிகமாகவும், அபூர்வமாயும் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீனம்

**(பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி 1,2,3,4 பாதங்கள், ரேவதி 1,2,3,பாதங்கள்)**

**விடாமுயற்சியும், நேர்மையும் உடைய மீன ராசி நேயர்களே !**

நிதானத்தையும் கடைப்பிடிப்பீர்கள். பதற்றம் இல்லாமல் பல வேலைகளைப் பக்குவமாகச் செய்வீர்கள். இந்த தமிழ்ப் புத்தாண்டு முழுவதும் சனி பகவானின் அருளோடு நினைத்ததையெல்லாம் சாதித்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் உங்கள் ஈடுபாடு அதிகமாகும். அண்டை வீட்டாரது ஆதரவு பெருகும். கலைஞர்களின் திறமை சிறப்பான முறையில் பிரகாசிக்கும்.

வியாபாரத்தில் அவசர முடிவுகளைத் தவிர்த்தல் நல்லது. புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் புது வியூகம் அமைத்து, போட்டிகளை முறியடிப்பீர்கள். முக்கியமான முடிவுகளைத் தகுந்த ஆலோசனைக்குப் பின் எடுத்தல் நல்லது. தடைகள், விடை பெறும் நேரமிது. பிரிந்து சென்ற பங்குதாரர்கள், தங்களது தவறை உணர்ந்து திரும்பி வருவார்கள். மறைமுகப் பிரச்சனைகள் தீரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி வெற்றியாகும். மனதில் தெம்பும், தைரியமும் அதிகமாகும். உங்களை நம்பி ஒப்படைக்கும் பொறுப்புக்களை சிறப்பாக முடிப்பீர்கள்.

**பெண்களுக்கு:**

சுப காரியங்களை உறுதி செய்ய நல்ல நேரம் இது உங்கள் பிரச்சனைகளை, சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்வீர்கள். வாரிசுகளால் நன்மை உண்டு. உற்றார் உறவினரின் வருகைக்கேற்ப வேலை பளுவும் கூடும். செலவுகள் அதிகமானாலும் நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். குடும்பத்தில், வாக்கு வாதங்களுக்கு இடமளிக்காமல் இருந்தால், பூரண அமைதி நிலவும். நீங்கள் இழந்த பொருள் திரும்பி வரும். வாகனங்களில் செல்லும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்தைத் தவிர்த்து விவேகத்தை கடை பிடியுங்கள். பயணங்கள் இனிமையாய் அமையும். கையில் பணம் இருக்கும் போது சேமித்தால், பொருளாதார இறக்கங்களை எளிதாய் சமாளிப்பீர்கள்.

**மாணவர்களுக்கு:**

மாணவர்கள் சலனமின்றி, உறுதியான மனோபலத்துடன் படிப்பில் ஈடுபட்டால், எல்லா பாடங் களிலும் முதலிடம் தான்! நண்பர்கள் இடையே உருவான மனக் கசப்பு, சொல்லாமல் விடைபெறும். நட்பு மீண்டும் உறுதிபடும். தோல்வி களைக் கண்டு மனம் கலங்காதீர்கள்.

அவை தரும் பாடங்களை, வெற்றியின் படிகளாக்கிக் கொள் ளுங்கள். பயத்திற்கும், பரபரப் பிற்கும் இடமளிக்காமல், சீராகச் செயல்பட்டால், வரும் தேர்வுகளில், உங்களின் திறமை நன்கு வெளிப் படும். எந்த சந்தர்ப்பத்திலும், தீய பழக்கங்களின் பக்கம் திரும் பாதீர்கள். வாழ்க்கை திசை மாறி விடும்.

**பணியில் இருப்பவர்களுக்கு:**

சாதகமும், பாதகமும் கலந்து இருக்கும். எனவே, சூழ்நிலைக்கு ஏற்றவாறு செயலாற்றும் திறமையை வளர்த்துக் கொள்வது அவசியம். அலுவலக வரவு செலவு கணக்கு களை சரியாக வைத்துக் கொள் ளவும். உயர் அதிகாரிகளிடம் அள வாகப் பழகி வரவும். சக ஊழியர் கள் தரும் ஒத்துழைப்பால், பணிகள் சிறப்பாக நடைபெறும். உங்கள் துறை தொடர்பான ஆவணங்களை யும், கோப்புகளையும் கவனமாகக் கையாளவும். மறைமுக வருமானங் களுக்கு ஆதரவு காட்டாதீர்கள்.

அது உங்கள் நிம்மதிக்கு உலை வைத்து விடும். நியாயமான முறையை மேற்கொண்டால், முடிவு எப்போதும் நன்மையாகவே இருக்கும். முன்கோபத்தைக் கட்டுப்படுத்தினால், முயற்சிகள் யாவும் ஆக்கப்பூர்வமான பலன்களைத் தரும். அலுவலகப் பணிகளுக்கு முதலிடம் கொடுத்து உழைத்தால், பதவி உயர்வு உங்களைத் தேடி வரும். உடல் நலனில் காட்டும் அக்கறையால், மருத்துவச் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உங்களின் பணியும் இடையூறு இன்றி நடைபெறும்.

**பொதுவாழ்வில் இருப்பவர் களுக்கு:**

உங்களின் பரோபகார குணத்தால், அனைவரின் மனத் திலும் உங்கள் பெயர் தங்கும். உங்களின் முன்னேற்றம், நட்பு, நிம்மதி, இவை அனைத்தும் உங் களின் நல்வாக்கில் அடங்கியுள்ளது. இதனை நினைவில் கொண்டு செயல்படுவது நல்லது.

பகைவர்களின் இடையூறு வந்தாலும், அதனை துணிவுடன் சமாளிப்பீர்கள். பாராட்டு வந்தாலும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வீர்கள். அலைச்சலுக்குப்பின், சில விஷயங்கள் சாதகமாய் முடியும். முக்கியமான பணிகளுக்கென்று அதிக நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும். தூக்கமின்மை அவ்வப்போது தலை காட்டும். புதிய மனிதர்களிடம் அளவுடன் பழகுங்கள்.

புதிய சொத்துக்கள் வாங்கும் முன்பு, ஆவணங்களைச் சரி பார்த்துக் கொண்டால், எந்த சிக்கலும் எழாது. கடந்த காலத்து பகை நட்பாக மாறும் வேற்று மதத்தினரும் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

> **வாஸ்து**
>
> மேஷ ராசிக்கு நிலம், வீடு குறிக்கும் இடம் 4ம் இடமான வடக்கு திசையே. கிழக்கும் பரவாயில்லை. வீடு கட்டினாலும், வாங்கினாலும் தலைவாசல் வடக்கை - கிழக்கை பார்க்க வேண்டும்.

**கலைஞர்களுக்கு:**

உங்களின் பொருளாதாரம் திருப்பதிகரமாக இருக்கும். உங்களின் வசதி வாய்ப்புகளும் பெருகும். தொழிலில் இருந்த பயமும், தயக்கமும் பறந்தோடி விடும். குடும்ப உறுப்பினர்களும் உங்களுக்கு ஆதரவாய் இருப் பார்கள். உறவாடிக் கெடுப்பவர் களிடம் எச்சரிக்கையாய் இருந்தால், பணக்கஷ்டமும், மனக்கஷ்டமும் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

உங்களின் செல்வாக்கு அதிகரித் தாலும், எதிலும் எளிமையாய் இருங்கள். அதுவே, உங்களை முன் னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும். ஊஞ்சலாட்டம் ஆடும் மனதை கட்டுக்குள் வைத்தால், அபவாதம் அருகில் வராது. வெளியூர், மற்றும் வெளி நாட்டுப் பயணங்களின் போது, எந்த விஷயத்திலும் கவனமாய் இருத்தல் அவசியம். பயணங்களின் மூலம் நீங்கள் எதிர்பார்த்த அனுகூலம் உண்டாகும்.

**வியாபாரிகளுக்கு:**

உங்களின் தேவைக்கேற்ப, அவ்வப்போது சரக்குகளைத் தரு வித்துக் கொண்டால், தேவையற்ற பணமுடக்கம் இராது. புதிய தொழில் தொடங்குவதற்கும், விரிவு படுத்துவதற்கும், நீங்கள் எதிர் பார்த்த உதவி தக்க சமயத்தில் கிட்டும். கூட்டாளிகளிடையே கார சாரமான விவாதம் ஏற்படும். சுமுகமான முறையில் தீர்வு காண்பது சாலச் சிறந்தது.

உங்களின் வளர்ச்சிக்கு பக்க பலமாய் இருப்பவர்களை பாராட்ட மறவாதீர்கள். உதட்டில் புன்ன கையும், உள்ளத்தில் நஞ்சும் வைத்து உறவாடுபவர்களுக்கு, உங்கள் பல வீனம் தெரிந்தால், அது புதிய சிக்கல் களைத் தோற்றுவிக்கும். பணியாளர் களின் உழைப்புக்குத் தகுந்த மரியா தையை அளித்து வந்தால், எந்த பிரச்சினைகளும் தோள் கொடுப் பார்கள்.

**நியூமராலஜி:**

**பிறப்பு எண், விதி எண் 1,4,8 ஐக் கொண்டவர்களுக்கு பல சுப காரியங்கள் நடைபெறும். சொத்து சேரும். அயல்நாட்டுத் தொடர்பும் ஏற்படும். பிறப்பு எண், விதி எண் 7,9 ஐக்கொண்டவர்களுக்கு தாம தமான பலன்கள்.**

**முயற்சிகள் அதிகம் செய்தால்தான் பாதி பலன் கிடைக்கும். விதி எண் 2,3,5 ஐக் கொண்டவர்களுக்கு சில காரியங்கள் சாதகம். பல பாதகம். பிறரைக் கலந்து ஆலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க வேண்டாம்.**

## நட்சத்திரப் பலன்கள்

**பூரட்டாதி 4-ம் பாதம்:**

பணியில் சிரமமிருப்பினும், உங்களின் தனித்திறமையால் அதை தீர்த்து விடுவீர்கள். தள்ளிப் போட்டு வந்த காரியங்கள் விரைவில் முடியும். வேலையாட்கள் உங்களின் மனம் கோணாமல் நடப்பார்கள். கூட்டுமுயற்சி நன்மை தரும்.

கடன் தொல்லைகள் ஓரளவு கட்டுக்குள் இருக்கும். நீண்ட நாட்களாய் வராமலிருந்த மூதாதை யரின் சொத்து உங்கள் வசமாகும். உங்களின் கண்ணியமான நடத்தையால் கௌரவப் பட்டம், கௌர பதவி ஆகிய இரண்டும் உங்களைத் தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாலமாய் வருத்தி வந்த நோய்களிலிருந்து நிவாரணம் அடைவீர்கள். சுய தொழில் புரிபவர்களுக்கு, எதிர்பாராத இடத்திலிருந்து உதவியும் ஆதரவும் கிட்டும்.

**உத்திரட்டாதி 1,2,3,4 பாதங்கள்:**

குழந்தைகளில் படிப்பில் நீங்கள் காட்டும் அக்கறையால், அவர்கள் ஆர்வத்துடன் பாடங்களைப் பயின்று வருவார்கள். செய்தொழில், பிரயாணம் ஆகியவை நன்மை தரும்.

குடும்ப ஒற்றுமையால், கடினமான பணியும் சிரமமின்றி முடியும். குடும்பத்தில் மூத்தவரிடம் அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழல் உருவாகும்.

உங்களின் வரவுக்கேற்றவாறு செலவுகளை சுருக்கிக் கொண்டால், பொருளாதாரம் உங்களை பயமுறுத்தாது.

நீண்ட நேரம் வேலை பார்க்கும் சூழல் உருவாகும். கண்களில் பராமரிப்பில் தனி கவனம் செலுத்த வேண்டிய காலம். மாணவர்கள் கல்வியில் சொல்லக் கூடிய அளவிற்கு பல்வேறு சாதனைகளை செய்வார்கள்.

கலைஞர்களின் செயல்களில் விறுவிறுப்பும், வேகமும் காணப்படும். புதிய வாய்ப்புகளும் வந்து கொண்டிருக்கும்.

**ரேவதி 1,2,3,4 பாதங்கள்:**

இந்த காலம் உங்களைப் புகழின் உச்சிக்கு கொண்டு செல்லும். உங்களை எதிர்த்தவர்கள் அடங்கிச் செல்வார்கள். நல்ல நண்பர்களால் சிறப்பான உதவி கிடைக்கும். இந்த காலகட்டத்தில் சில எச்சரிக்கைகளையும் பின்பற்றினால், வாழ்வு சிறப்பாக இருக்கும்.

உணவு, தூக்கம், ஆகியவற்றில் மிதமாக இருக்கவும், இயன்றவரை இரவு நேரப் பயணங்களைத் தவிர்த்தால், உங்களின் ஆரோக்கியம் சீராக இருக்கும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும்.

**ஆலய பரிகாரம்**

சிவன் பார்வதியை வணங்கி வரவும். ஸ்ரீதட்சிணா மூர்த்திக்கு கொண்டக்கடலை மாலை அணிவித்து வழி படவும். சிறப்பான வாழ்வையும், சிறந்த பொருளா தாரத்தையும் தந்தருள்வார்.

**காயத்ரி பாலசுப்பிரமணியன்**


மயிலை மயூரவல்லி திருமண இணைப்பு மையம்

அனைத்து மதத்தினருக்கும் தொலைபேசி மூலம் உங்கள் விபரங்களை அறிந்து ஜாதகத்தை கணிப்பொறியில் பதிவு செய்து, 5 நிமிடத்தில் உங்களுக்குப் பொருத்தமான வரன்களின் வயது, வேலை, நட்சத்திரம் முதலிய விபரங்களை தொலைபேசியிலேயே கூறி உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் மட்டுமே ஜாதகம் கொடுத்து பணம் வாங்கும் நிறுவனம்.

உடனுக்குடன் பொருத்தமான ஜாதகம் கொடுப்பதால் பதிவு செய்த மூன்றே மாதங்களில் திருமணம் நிச்சயமாவதால் அனைவரும் தங்கள் உறவினர்கள், நண்பர்கள், கல்யாணத்திற்கு வரன் தேடும்போது எங்கள் நிறுவனத்தையே சிபாரிசு செய்கின்றனர்.

வேங்கைவாசல் கிளையில் விதவைகள், விவாகரத்து ஆனவர்கள் கலப்பு திருமணத்திற்கு மட்டும் வாராவாரம் ஞாயிற்றுக்கிழமை திருமணத்திற்கான பதிவு மேளா நடைபெறும்.



விதவைகள், விவாகரத்து ஆனவர்களுக்கு, கலப்புத் திருமணத்திற்கு மட்டும் 2006ல் இந்தியாவில் முதன் முறையாக பிரமாண்ட சிறப்பு சுயம்வரம் நடத்தி பத்திரிகைகளால் பாராட்டப்பட்ட நிறுவனம். 2005லும் அனைவருக்கும் நடத்திய சுயம்வரத்தில் 34 திருமணங்கள் நிச்சயமானதுடன் சுனாமியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் திருமணம் செய்து வைத்த ஒரே நிறுவனம்

நுகர்வோர் விழிப்புணர்ச்சி அமைப்பு வழங்கிய CSO 2005 உள்ளிட்ட பல விருதுகள் வாங்கிய நிறுவனம்

கீதா சேகர் M.A., B.Ed.,

தலைமை அலுவலகம் : 47, முத்து தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004, இந்தியா. Ph : +91-44-2461 0357 Mob : +91 99625 75679

கிளை : பிளாட் எண். 69, மேகலா நகர் முதல் தெரு,வேங்கை வாசல், சென்னை - 73, இந்தியா. Mob : +91 94448 94308

Velachery Branch Mob : 92831 91190 www.mmmatrimony.com email : contact@mmmatrimony.com

உலகம் முழுவதும் முகவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலத்தில் சோதிடத்தின் முக்கியப் பங்கு!

கிரக இயக்கங்களை ராசி மண்டலத்தோடு தொடர்பு படுத்தி அதற்கேற்ப மனிதனின் உடல் அமைப்பு இயக்கம், உடல் உறுப்பு இவை எப்படி இயங்குகின்றன, பாதிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் ஜோதிடம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. மனித உடம்பு நிலம், நீர் , நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களினால் ஆனது. இவை ஐந்தும் ஐம்பொறிகளாக மனிதனுக்கு கீழ்க்கண்டவற்றை உணர்த்துகின்றன.

காற்றின் அம்சமான மெய் (உடம்புத் தோல்) குளிர்ச்சி, வெப்பம், மென்மை, வன்மை என்னும் ஸ்பரிசங்களை நமக்கு உணர்த்துகின்றன.

நீரின் அம்சமான வாய் அல்லது நாக்கு மூலம் உப்பு, புளிப்பு, இனிப்பு, கார்ப்பு, கசப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவைகளை உண்டு மகிழ்கிறோம்.

நெருப்பின் அம்சமான கண்ணின் உதவி கொண்டு நிறங்களையும், நீளம், உயரம், குட்டை, பருமன், மெலிவு ஆகியவற்றை நாம் பார்த்தறிகிறோம்.

மண்ணின் அம்சமான மூக்கு பலவிதமான வாசனைகளை நுகர்ந்தறியும் பணியைப் புரிகிறது.

ஆகாயத்தின் அம்சமான செவி மூலம் பலவித சப்தங்களை கேட்டறிய முடிகிறது.



மனித உடலில் இயக்கத்திற்கும் இந்த பஞ்ச பூதங்கள் அடிப்படையாக, மூன்று விதமாக, அதாவது வாதம், பித்தம், சிலேத்துமம் (கபம்) என்கிற முறையில் உடலில் பலவித செயல்கள் நடக்க உதவி புரிகின்றன. இந்த மூன்றும் சரியான முறையில் இயங்கினால் தான் மனிதனின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். காற்று மற்றும் ஆகாயத்தின் கலவையான வாதம், உடல் இயக்கம், ரத்த ஓட்டம், பேச்சுத் திறன், சுவாசம் ஆகியவற்றைச் சமநிலைப்படுத்தி வைக்க உதவுகின்றது. நீரின் கலவையான பித்தம், உடல் உஷ்ணத்தை சீரான அளவில் வைப்பதற்கும், ஜீரணத்திற்கும் துணை புரிகின்றது. நீர் மற்றும் நிலத்தின் கலவையான கபம் மூட்டுக்களின் சீரான அசைவு, ஞாபக சக்தி, இருதயம் மற்றும் நுரையீரலுக்கான சக்தியை அளித்தல் ஆகியவற்றை செவ்வனே செய்கின்றது. இது மட்டுமின்றி எலும்பு, ரத்தம், மஜ்ஜை, தோல், மூளை, ஜீவசுரப்பான சுக்கிலம்/சுரோணிதம் மற்றும் நரம்பு ஆகிய ஏழு தாதுக்களும் உடல் வளர்ச்சி, செயல்பாடு மற்றும் மனித உயிர் பல்கிப் பெருகுவதற்கு உறுதுணையாய் இருக்கின்றன.

ஜோதிடத்தில், புதன், குரு, சனி மூவரும் வாத கிரகங்கள், சூரியன், செவ்வாய், ராகு, கேது ஆகிய நால்வரும் பித்த கிரகங்கள், சந்திரன், சுக்ரன் இருவரும் சிலோத்தும கிரகங்கள் மேற் சொன்ன ஏழு தாதுக்களில், சூரியன் - எலும்பு, சந்திரன் - ரத்தம், செவ்வாய் - மஜ்ஜை, புதன் - தோல், குரு - மூளை, சுக்ரன் - ஜீவ சுரப்பு, சனி - நரம்பு ஆகியவற்றைக் குறிக்கின்றன. சூரியன் இருதயம், ரத்த ஓட்டம், கண்கள், தலை, சுரம், பித்த சரீரம் ஆகியவற்றிற்குக் காரகர் ஆவார். சந்திரன் வயிறு, ஜீரண சக்தி, மூத்திர கோசம், சீதள நோய்கள் இவற்றைக் குறிப்பார். காய்ச்சல். ரணம். கொப்புளங்கள், அம்மை இவற்றை செவ்வாய் குறிப்பார், மூளை, நரம்புகள், தொண்டை, நாக்கு, வாத நோய் இவற்றிற்கு அதிபதி புதன். குரு கல்லீரல், இரத்தம், கொழுப்பு, வளர்ச்சி ஆகியவற்றிற்குக் காரகர். ஜனனேந்திரியங்கள் சுக்ரனின் ஆதிக்கத்தின் கீழ் வருகின்றன. எலும்பு, பற்கள், கணையம், ஜன்னி, வாதம் ஆகியவை சனியின் பொறுப்பு. சாயாகிரகங்களான ராகு, வாய்வு, வலிப்பு. பித்தம், குன்மம், பிளவை முதலிய ரோகங்களுக்கும், கேது ஆறாத ரணம், குஷ்டம், தீராத உதர வலி ஆகியவற்றுக்கும் காரகர்கள்.

இப்போது ஆரோக்கியத்திற்காக மக்கள் அதிக பணத்தையும், நேரத்தையும் செலவு செய்கின்றார்கள். நோயின்றி வளமாய் வாழ, ஜோதிட ரீதியாக கிரகங்கள் நமக்குத் துணை நிற்கின்றன. தகுந்த ஜோதிடரை அணுகுவதால் நோயின் தன்மை, அவை உடலில் இருக்கும் காலம், அதை தீர்க்கும் உபாயம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்ட அதற்குத் தக்கவாறு செயலாற்றுவதன் மூலம் வாழ்வில் நலமுடன் வளமும் பெறலாம்.

- காயத்ரி பாலசுப்ரமணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி காட்டும் நவாம்சம்

**ஒ**ரு ஜாதகத்தில் உள்ள நவாம்சம், ஜோதிடருக்கு, கிரக நிலைகள் சரியாக குறிக்கப்பட்டிருக்கிறதா, லக்னம் சரியாக உள்ளதா, இருப்பு திசைக்கு ஏற்ப சந்திரன் நவாம்சத்தில் உள்ளதா, என்பதைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

ராசிக் கட்டத்தில் உள்ள 12 ராசிகள் தத்துவத்தின் அடிப்படையில் அக்னி, பூமி, வாயு, ஜலம் என்று தத்துவங்களுக்கும் அப்படியே! இனம் இனத்தோடுதான் சேரும்!

கிரக நிலைகளை சரிபார்க்கவும் நவாம்சம் உதவுகிறது. உதாரணம் சூரியன் மகம் 3ல் எனில், நவாம்சத்தில் மிதுனத்தில் தான் இருக்க முடியும். இருப்பு திசையை சரிபார்க்கவும் நவாம்சம் உதவுகிறது.

**அசுவினி, மகம், மூலம், ரோகிணி, ஹஸ்தம்**
**திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி**

மேஷம் ரிஷபம் மிதுனம்

| | | | |
|---|---|---|---|
| ஜலம் 4 | அக்னி பாதம் 1 | பூமி பாதம் 2 | வாயு பாதம் 3 |
| வாயு 3 | | | ஜலம் பாதம் 4 |
| பூமி 2 | | | அக்னி பாதம் 1 |
| அக்னி 1 பாதம் | ஜலம் 4 | வாயு 3 | பூமி 2 |

இடப்புறம்: மீனம், கும்பம், மகரம்
**கார்த்திகை, உத்திரம், உத்ராடம், திருவாதிரை,**
**சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, ரேவதி**

வலப்புறம்: கடகம், சிம்மம், கன்னி

தனுசு விருச்சி துலாம்

**பரணி, பூரம், பூராடம், மிருகசீரிடம், சித்திரை,**
**அவிட்டம், பூசம், அனுஷம், உத்திரட்டாதி**

நாலாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில்தான் நவாம்சம் போடப்படுகிறது. மேலுள்ள கட்டம் இதனைத் தெளிவாக விளக்கும்.

மேஷ லக்ன, அக்னி தத்துவத்திற்கு நவாம்சம் போடுகையில், மேஷம் முதல் எண்ணி வர கார்த்திகை 1ம் பாதம் தனுசில் முடிகிறது.

அதாவது அக்னித் தத்துவத்தில் ஆரம்பித்து அக்னித் தத்துவத்தில் முடிகிறது. இதர

எந்த கிரகம் ஆயினும், அந்த தெசா வருடத்தை 4 ஆல் வகுத்தால் ஒரு 1 1/4 து 4 = 6 வருடம். ஒரு ஜாதகத்தில் சூரிய திசை இருப்பு 2 3/4 வருடம் என்றால் சந்திரன் நவாம்சத்தில் (1 1/4 + 1 1/4 + 1 1/4) 2 பாதம் முடிந்து, 3ம் பாதமான கும்பத்தில்தான் இருக்கும். எனவே பலன் சொல்லுமுன், ஜாதகத்தைச் சரி பார்க்க நவாம்சம் உதவுகின்றது என்றால் அது மிகையாகாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏழரை சனிக்கு ஏன் பயம்?

***ஏழரை சனி என்றால் என்ன? ஏழரை என்று கேட்டவுடனேயே பயந்து நடுங்க வேண்டியதுதானா? சனி பகவான் நன்மையே செய்வது இல்லையா என்பது போன்ற, வாசகர்களின் மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்விகளுக்கு விடை தேடினோம்.***

*நமது கேள்விகளுக்கு நமது சோதிடர் குழுவின் முக்கிய உறுப்பினரான சுப்புராமன் பதிலளிக்கிறார்.*

உங்கள் ராசி மேஷம் என வைத்துக் கொள்வோம். மேஷத் திற்கு 12ஆம் ராசி மீனம், 2 ஆம் ராசி ரிஷபம். மீனம், மேஷம், ரிஷபம் ஆகிய 3 ராசிகளிலும், ராசிக்கு இரண்டரை ஆண்டுகள் வீதம் சனி தொடர்ந்து கோசார ரீதி யாக வரும் காலம் 7 1/2 ஆண்டுகள். ராசிக்கு 12ல் 2 1/2 ஆண்டுகள் நிற்கும் சனிக்கு விரயச்சனி என்று பெயர். எதிர்பார்த்தும், எதிர்பாராம லும் திடீர் என செலவுகள் வரும். கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் இப்படி வீணாக கரைந்து விட்டதே என்று மனம் கவலை கொள்ளும். இதனால் தான் விரயச்சனி என்றால் பயம் உண்டாகிறது.

பிறகு ராசியில் 21/2 ஆண்டு கள் சனி வரும். இதற்கு ஜென்மச் சனி என்று பெயர். இந்த கால கட்டத்தில் நோய் உடலை வாட்டும். நோய் தீர பணம் செலவாகும். அதனால், மன நிம்மதி குறைவாகும்.

இந்த 2 1/2 ஆண்டுகள் ஜென்ம ராசிக்கு 2ல் சனி இருக்கும். இதற்கு குடும்பச் சனி என்று பெயர். குடும்பத் தில் வேண்டாத சில விடயங் கள், பிற உறவினரை பகைத்துக் கொள்ளும்படி யான சில சந்தர்ப்பங்கள் வந்து சேரும். வீடு தேடி வந்து சண்டை போட்டு எச்சரிக்கை விடுத்துச் செல்வர்.

இந்த 7 1/2 சனி ஒருவர் வாழ்க்கையில் 3 முறை வரும். முதலாவது சுற்று வரும் சனிக்கு தங்கு சனி என்று பெயர். இதன் தொந்தரவு லேசாக இருக்கும். பெரும்பாலும் இது மாணவப் பருவ த்தில் வருவதால் படிப்பு பாதிக்கும்.

இரண்டாவது சுற்று வரும் சனி 30 வயதுக்கு மேல் வரும். இதற்கு பொங்கு சனி என்று பெயர். இது திருமணம் ஆகாதவர்களுக்கு திரு மணம் செய்து வைக்கும். வீடு, நிலம் வாங்க வைக்கும். கஷ்டத்திலும் சுகம் அடைவதால் இந்த சனியை எல்லோ ரும் விரும்புவர். ரசிப்பர்.

மூன்றாவது சுற்று வரும் சனிக்கு மரண ராசி என்று பெயர். பெரும் பாலும் 60 வயதிற்கு மேல் 90 வயதுக்குள் இந்த சனி வரும். மரணம் தவிர்க்க முடியாத ஒன்றல்லவா? சனி ஆட்சி அல்லது உச்ச மாய் இருந்தால் ஆயுள் 90 வயதுக்கு மேல் நீடிக்க வாய்ப்புள்ளது. பொது வாக ஜாதகத்தில் சனி 8ல் இருந்தால் ஆயுள் நீடிக்கும்.

**பரிகாரம்:**

இந்த ஏழரை ஆண்டுகள் சனி பகவான் ஆட்சிக் காலத்தில், வாழ்வை அமைதியாகக் கழிக்க வழி உண்டா? உண்டு. அதற்கான வழி, சனி ப்ரீத்தி செய்வது. அப்படி என்றால் என்னவென்று சொல் கிறேன் கேளுங்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் சனி பகவானுக்கு எள்ளு தீபம் வைத்து, நவக்கிர ஹத்தை ஒரு முறை சுற்றி வாருங்கள். எளிமையான வழிதானே சொல்லி யிருக்கிறேன். ஆலயம் சென்று ஆண்டவனை வழிபட்டு வரச் சொல்கிறேன், அவ்வளவுதான். பயத்தை விட்டு ஒழித்து சனி பகவான் மேல் நம்பிக்கை வையுங் கள். நவக்கிரகங்கள் நன்மையே செய்வார்கள்.

தொடர்ந்து எள்தீப வழி பாடு செய்து வாருங்கள். தினமும் நீங்கள் காலையும், மதியமும் சாப்பிடுவதற்கு முன்னால் காக்கைக்கு உணவு கொடுத்து விட்டு, பின்னரே நீங்கள் சாப்பிடுங்கள். காகம் சனி பகவா னின் வாகனம், நம் முன்னோர் களுக்கான தொடர்பு சாதனம்.

தானம் செய்யுங்கள். சனி பகவான் தானே வந்து உதவி செய் வார். ஏதாவது ஒரு சனிக் கிழமை எவர் சில்வர் டம்ளர்கள், தட்டுகள், அகப்பைகள் என்று உங்கள் வயதுக்கு ஏற்ற எண்ணிக்கையில் வாங்கி, தானம் செய்யுங்கள். உதாரணமாக, உங்களுக்கு 30 வயது என்றால் 30 தட்டுகள் வாங்கி, தானம் செய்யவும். தினமும் சனி காயத்ரீ அல்லது சனி மந்திரம் அல்லது சனி சாலீஸா சொல்லி வரவும்.

வருடம் ஒரு முறையாவது குடும்பத்தினருடன் சுற்றுலா சென்று வருவது நல்லதுதானே. சனிபகவான் ஆட்சிக் காலத்தில், ஒரு முறை திருநள்ளாறு அல்லது குச்சனூர் சென்று சனி பகவானுக்கு அர்ச்சனை செய்து வரவும். ஹனுமாருக்கு ஒரு சனிக்கிழமை வடை மாலை சாற்றி வழிபடவும். கையில் கறுப்புக் கயிறு கட்டிக் கொள்ளவும்.

ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்ள வேண்டும். அல்லது ஒரு கறுப்பு கைக்குட்டை பயன் படுத்துங்கள். துன்பம் வரும் வேளையில் சனி பகவான் துணை நிற்பார்.

- சாகித்ய ரத்னா
**M.V. சுப்புராமன்**
M.A. (Hin)., M.A. (Phil)., Retd., H.O.D. of Hindi.,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்காத கேள்விகளும், கிடைக்காத பதில்களும்



*சாத்திரம், சடங்கு, சம்பிரதாயம் என்ற பெயரில் எண்ணற்ற பழக்க வழக்கங்கள் தமிழனின் கலாச்சாரத்துடன் ஒன்றி வந்து விட்டன. ஏன்? எதற்கு? என்று கேட்பாருமில்லை. கேட்டால் பதில் கிடைப்பதுமில்லை.*

*விஞ்ஞான யுகத்தில் விளக்கம் அளிக்க முடியாதவற்றுக்கு அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். விளக்கம் அளிக்க ஆளில்லாததால், சில நல்ல பழக்கங்கள் வழக்கொழிந்தும் போகலாம்.*

*தகவல் தொடர்பு பெருகி வரும் வேளையில், கிடைக்காத பதில்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாவது, யாரிடம் இருந்தாவது கிடைக்குமா? என்ற ஆசையுடன் இப்பகுதி தொடங்கப்படுகிறது. தேடுபவர்கள் சிலர் இருந்தால், பதில் யாரிடமாவது இருந்தால், இப்பகுதி, தேடும் வினாவுக்கான விடையை வெளிச்சத்துக்கு கொண்டு வர முயற்சி செய்யும்.*

**- சுகந்தன்**

கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பெண் பார்க்கும் படலம் நடைபெறும் வேளையில், சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், அடிக்கடி கேட்கும் கேள்வி - ''பத்துப் பொருத்தம் உள்ளதா?''.

''அதென்ன பத்துப் பொருத்தம்'', என்ற பதில் கேள்விக்கு, கேள்வியைக் கேட்ட எவரிடமும் பதிலில்லை. ஆர்வத்தில் சோதிடர் ஒருவரை சந்தித்து, ''இந்தக் கேள்வியின் பின்னால் விஞ்ஞானம் ஏதும் உள்ளதா'' என்று கேட்டேன்.

சோதிடர் சுந்தரராஜன் எனது கேள்விக்கு விடை தன்னிடம் இருக்கிறது என்றார்.

இவரது விளக்கம்: திருமணம் என்பது ஆண், பெண் என இருவரை, குடும்பம் எனும் பந்தத்தில் ஒருவராக்குவது.

''செம்புலப் பெயரில் நீர் போல, அன்புடை நெஞ்சங்கள் தாம் கலந்தனவே'', என்ற சங்கப் பாடல் வரி போல, இருவரும் ஒருவராகும் வழியே திருமணமாகும்.

பத்துப் பொருத்தம் என்பது, இக்கலவை (chemistry) சரியான முறையில் இருக்கிறதா என்று கண்டறிந்து சொல்லும் தொழில் நுட்பப் பணியே ஆகும். இதை ஆராய்ந்து சொல்வதே, ஒரு சோதிடருடைய வேலையாகும்.



**கே : பத்துப் பொருத்தங்கள் எவை?**

ப : பத்துப் பொருத்தங்கள் என்பன மணமக்கள் இருவரது நட்சத்திர குணாதிசயங்களை வைத்துப் பார்க்கப் படுவது: அவை தினம், கணம், மகேந்திரம், யோனி, ஸ்திரி நீக்கம், ராசி, ராசியாதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை ஆகியனவாகும்.

**கே : அவற்றில் என்ன என்ன விடயங்களைத் தேடுகிறீர்கள்?**

ப : உயிரினங்களைப் படைத்த கடவுள், ''பல்கிப் பெருகுங்கள்'' என்று ஆசிர்வதித்து அனுப்பியதாக விவிலியம் கூறுகிறது.

பொருத்தங்கள் பார்க்கப்படுவதன் நோக்கம் மணமக்களின் தாம்பத்தியம் நன்றாக அமையுமா என்பதைக் கண்டறியும் முயற்சியே. அந்தப் பத்தில் மிக முக்கியமானவை ஐந்து பொருத்தங்கள். இந்த ஐந்தில் ஒன்று சரியாக அமையாவிட்டாலும் கூட, தாம்பத்திய வாழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல் ஏற்படும் வாய்ப்புக்கள் உண்டு. அவற்றில் கனம், தினம், ராசி, யோனி, ரஜ்ஜு ஆகியன மிக முக்கியமான ஐந்து பொருத்தங்கள் ஆவன.

இவற்றில் கனம், தினம் ஆகிய இரண்டும் ஆயுள் மற்றும் மங்களம் தொடர்புடையன. நூறாண்டு வாழ்க என வாழ்த்துவது நம் மரபு.

திருமணப் பந்தத்தில் நுழையவிருக்கும் தங்கள் குழந்தைகள் நீண்ட ஆயுளுடன் வாழும் வழி தேடும் பெற்றோரின் விருப்பம் இயற்கையானதே.

யோனிப்பொருத்தம் மணமக்களின் அன்னியோனியம் தொடர்பானது - சீதளம் என்று சொல்லப்படும் உடல் வெப்பம் பொருத்தமானதாக உள்ளதா என்று அறியும் வேதியில் பணி.

அது (body chemistry) சரியாக அமைந்துள்ளதா என்பதனை, இருவரது நட்சத்திர பலன்களின் பொருத்தங்கள் கொண்டு சரியாகக் கணித்துச் சொல்லிவிட முடியும்.

ராசிப்பொருத்தம் அவர்களின் குழந்தைப் பேறு தொடர்பான பலன்களை அறியும் முயற்சி. ரஜ்ஜுப் பொருத்தம் என்பது கணவனின் ஆயுளைக் கண்டறியும் முயற்சியாகும்.

**கே : எதன் அடிப்படையில் பொருத்தங் களைக் கணிக்கிறீர்கள்?**

ப : மணப்பெண்ணின் நட்சத்திரத்தை வைத்தே பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன.

**கே : இந்தப் பத்துப் பொருத்தங்கள் தவிர திருமணம் வெற்றிகரமானதாக அமைய, வேறு ஏதேனும் தேடல்கள் உள்ளனவா?**

ப : பத்துப் பொருத்தங்கள் நட்சத்திர குணாதிசயங்களை வைத்துப் பார்க்கப்படுவது. இது தவிர, ஜாதகப் பொருத்தம் என்ற முக்கியமான கட்டம் என்ற ஒன்று உள்ளது. ஜாதகத்தின் முக்கியமான நான்கு தோஷங்கள் கணிக்கப்பட வேண்டும்:

அங்கார தோஷம், களத்திர தோஷம், ஆயுள் தோஷம், புத்திர தோஷம் என்ற நான்கு தோஷங்களில் ஏதேனும் ஒன்று மணப்பெண் ஜாதகத்தில் இருந்தால், அதே தோஷமுடைய மணமகனுக்குப் பொருத்தமாகும் ( - X - = +). வெவ்வேறு தோஷங்களுடைய ஜாதகங்களைத் தவிர்க்க வேண்டும் ( - X + = -).

நல்ல ஜாதகம், கெட்ட ஜாதகம் எனப் பிரித்துப் பார்ப்பதல்ல நோக்கம். எதற்கு எது பொருந்தி வரும் என்று தேடிக் கண்டுபிடிப்பதே இந்த முயற்சியாகும். எதனோடு எது சேர்ந்தால், விளைவுகள் பயனுள்ளதாக இருக்கும் என்று ஆராய்ந்து கண்டறியும் விஞ்ஞானப் பணி இது.

நன்றி. மீண்டும் சந்திப்போம்.

See you again next month, Bye.

Au revoir.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோதிடம் - சிறு துளிகள் சில...

**விழித்தவுடன் பார்க்கத் தக்கவை:**

தாமரைப்பூ, தீபம், ராஜா, பொன், கண்ணாடி, சூரியன், தணல், சந்தனம், கடல், சிவலிங்கம், வயல், கோபுரம், மேகம் சூழ்ந்த மலை, மனைவி, தனது வலக்கை, கன்றுடன் கூடிய பசு, காட்டு யானை.

**ஜன்ம ராசியில் செய்யத் தக்கவை:**

யாத்திரை, விவாகம், கிரகப்பிரவேசம், சீமந்தம், உபகர்மம்.

**ஜன்ம நட்சத்திரத்தில் செய்யக் கூடாத காரியங்கள்:**

உபநயனம், சௌளம், பும்சுவனம், சீமந்தம், பிரயாணம், மருந்து சாப்பிடல், அன்னப் பிராசனம் இவைகளும், (புருஷனுக்கு ஜன்ம நட்சத்திரமாகில்) விவாகமும் செய்யக்கூடாது.

**அக்னி நட்சத்திரத்தில் செய்யத்தகுந்தவை:**

நிலம், வீடு வகைகள் துவக்குவது, கிணறு வெட்டுதல், புதிய கிராமம் அமைத்தல், தீட்சை எடுத் தல் போன்ற காரியங்கள் விலக்கத் தக்கவை.



கும்பம், மீனம், மேஷம், ரிஷபம் இந்த 4 ராசிகளில் புதன் சூரிய னுடன் கூடி நடப்பான். மிதுனம், கடகம், சிம்மம், கன்னி இந்த 4 ராசிகளில் புதன் சூரியனுக்கு முன் நடப்பான். துலாம், விருச்சிகம், தனுசு, மகரம் இந்த 4 ராசிகளில் புதன் சூரியனுக்கு பின் நடப்பான்.

**நவக்கிரகங்களின் இருப்பிடம்:**

**சூரியன் :** சிவாலயம், வெளியும் பிரகாசமுள்ள நிர்ஜல பூமி, கிழக்கு.

**சந்திரன் :** துர்க்கஸ்தானம், ஸ்தீரிகளிருக்கும் இடம், ஜலம், கொடி, மது இவையுள்ள இடம் வாயு மூலை.

**செவ்வாய்:** திருடன், மிலேச்சர்கள், நெருப்பு இவைகளுள்ள இடம், யுத்த பூமி தெற்கு.

**புதன் :** வித்வான், விஷ்ணு, விளையாட்டிடம், கணக்கு பார்க்குமிடம், வடக்கு.

**குரு :** நிதி, அரசு, பிராமணர், தேவதைகளிருக்குமிடம், ஈசானியம்.

**சுக்கிரன் :** அந்தப்புரம், நடனஸ்தலம், படுக்கையறை, அக்னி மூலை.

**சனி :** ஐயனார் வசிக்கும் ஸ்தானம், அசுத்த ஸ்தலம், மேற்கு.

**ராகு, கேது :** புற்று, ஸர்ப்பங்கள் வசிக்கும் இடம், இருண்ட குகை, தென்மேற்கு.

**சுப சகுனங்கள் :**

கொடி, கரும்பு, அட்சதை, பசு, மாமிசம், தேன், கன்னிகை, சுமங்கலி, புஷ்பம், தயிர், ரிஷபம், தாசி, பழங்கள், மஞ்சள், குங்குமம், பால், மங்கல வாத்தியங்கள், எரியும் விளக்குகள், மணக்கோலம், நரி, இரட்டை பிராமணர்கள், பூர்ண கும்பம், தாமரைப்பூ, சந்தனம், தான்யம், பொரி, குடை, முத்து மாலை, மணியோசை, வேத மந்திர முழக்கம், குதிரை, யானை, எருது, க்ழுதைச் சத்தம், நிறை குடம், செந்தணல், நெய் ஆகியவை.

**சுப சொப்பனங்கள் :**

பசு, எருது, யானை, தேவாலயங்கள், அரண்மனை, மலை உச்சி, மாமிச பட்சணம், தயிரன்னம் புசித்தல், வெள்ளை வஸ் திரம் தரித்தல், ரத்தின ஆபரணங்கள் காணுதல், வெற்றிலை பாக்கு தரித்தல், கற்பூரம், வெள்ளை புஷ்பம் இவைகளைக் காணுதல், சந்தனம் பூசிக்கொள்ளுதல், இவைகளைக் கண்டால் சொற்ப சம்பத்து உண்டாகும். வெண்ணிறப் பாம்பு கடித்தல், தேள் கடித்தல், சமுத்திரம் தாண்டுதல், கட்டுப்படல் இவைகளைக்கண்டால் தன லாபம் உண்டு.

**சந்திராஷ்டமம் :**

சந்திரன் 12 ராசிகளைக் கடக்கும்போது, ஒவ்வொரு ராசிக்கும் 8 ம் இடத்தில் (ராசியில்) சஞ்சரிக்கும் காலம் சந்திராஷ்டமம் எனப்படும். காரகவத்து ரீதியில், சந்திரன் மனம், உடல், உள்ளத்து உணர்ச்சிகள் இவைகளைக் குறிப்பவன். எனவே மேற்குறிப்பிட்ட காலத்தில், 8மிடத்து ராசிக்கார்களுக்கு மன உளைச்சல், உடல் உபாதை, வீண் பிரச்னை முதலியவை ஏற்படும். எனவே அந்த நாட்களில் கவனமாக இருக்க வேண்டும். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியங்கள் நிறைந்த சீன தேசத்து சோதிடம்



சீன வானவியல் சாஸ்திரம் 12 ஆண்டு சுழற்சியை அடிப்படையாக கொண்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு மிருகத்தின் பெயரால் குறிப்பிடப்படுகிறது.

நீங்கள் பிறந்த ஆண்டைக் கொண்டு, உங்களுக்கு எந்த விலங்கின் ராசி (குறியீடு) என்பதை கண்டுபிடிக்கலாம். சீன சோதிடர்களின் பார்வையில், உங்கள் ராசிப்படி, உங்கள் குணாதிசயம் எப்படி இருக்கும் என்ற சுவாரஸ்யமான கணிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. படித்து ரசிக்கலாம். தொடர்ந்து வரும் ஜோதிட கேசரி இதழ்களில், சீன சோதிடம் குறித்து மேலும் பல சுவையான தகவல்களும், கணிப்புகளும் வெளிவரும்.



## எலி (1912, 1924, 1936, 1948, 1972, 1984)

நீங்கள் கற்பனை வளமும், வசீகரமும் கொண்டவர். உங்கள் மீது அன்பு செலுத்துபவர்களிடம் தாராளமாக நடந்து கொள்வீர்கள். எனினும், நீங்கள் எளிதில் சினமடைந்து விடும் பழக்கத்தையும், குற்றம் கண்டுபிடிக்கும் பழக்கத்தையும் கொண்டவர்கள். அதே நேரத்தில், நீங்கள் ஒருவகையில் சந்தர்ப்பவாதியும் கூட. இந்த ராசியின் கீழ் பிறந்துள்ளவர்கள், விற்பனை பிரதிநிதியாகவோ அல்லது எழுத்தாளராகவோ, விமர்சகராகவோ அல்லது பதிப்பாளராகவோ இருக்க வேண்டும். (எலி ராசிக்காரர்களில் சிலர்: சார்லோட்டி புரோன்டி, ட்ரூமேன் கேப்போட்டி, கேத்தரின் 1, மாதா ஹரி, உல்ஃப்காங் மொசார்ட், வில்லியம் ஷேக்ஸ்பியர், ஜார்ஜ் வாஷிங்டன்.



## காளை (1913, 1925, 1937, 1949, 1961, 1973, 1985

நீங்கள் பிறக்கும் போதே தலைவருக்கு உரிய குணாதிசயத்துடன் பிறந்தவர். உங்களை சுற்றியுள்ளவர்களை முன்மாதிரியாக கொண்டு தன்னம்பிக்கையை வளர்த்து கொள்வீர்கள். நீங்கள் பழமைவாதி, ஒழுக்கமுடையவர், கை சுத்தமானவர். ஆதிக்க வெறிக்கு எதிரான நீங்கள், எப்போதும் உங்கள் வழியிலேயே செல்வீர்கள். காளை ராசிக்காரர்கள், வெற்றிகரமான அறுவை சிகிச்சை நிபுணராகவோ, ஜெனரலாகவோ அல்லது சிகையலங்கார நிபுணராகவோ இருப்பர்.

(காளை ராசிக்காரர்களில் சிலர்: நெப்போலியன் போனபார்ட், வால்ட் டிஸ்னி, கிளார்க் கேபிள், ரிச்சர்ட் நிக்ஸன், ரோசா ஆர்க்ஸ், சில்வியா போர்டர், வின்சென்ட் வான் காஹ்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புலி (1914, 1926, 1938, 1950, 1962, 1974, 1986)

நீங்கள் உணர்ச்சி வசப்படக்கூடியவர், உணர்வுகளுக்கு அடிமையானவர். அதே நேரத்தில், அன்புள்ளம் கொண்டவரும் கூட. இருந்தபோதிலும், நீங்கள் பிடிவாதக்காரராக இருப்பீர்கள். நீங்கள் நினைப்பது தான் சரி என்ற கொள்கை உடையவர். எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதனால், அடிக்கடி நீங்கள் போராளியாக பார்க்கப்படுவீர்கள். உங்களு டைய ராசிப்படி, நீங்கள் மிகச்சிறந்த தலைவராகவோ, கண்டுபிடிப்பாளராகவோ, பந்தய கார் ஓட்டு னராகவோ அல்லது காளை அடக்கும் வீரராகவோ இருப்பீர்கள். (புலி ராசிக்காரர்கள்: ஜூடி புளூம், எமிலி புரோன்டி, எமிலி டிக்கின்சன், இசாதோரா டங்கன், டுவைட் டி. ஐஸ்நோவர், மேரி ஹாரிஸ் (மதர்) ஜோன்ஸ், பார்பரா மெக்கிலின்டாக், மர்லின் மன்றோ, மார்க்கோ போலோ, பியாட்ரிக்ஸ் பாட்டர்)



## முயல் (1915, 1927, 1939, 1951, 1963, 1975, 1987)

நீங்கள் மிகுந்த கருணையுள்ளம் கொண்டவர். உங்களை சுற்றியிருப்பவர்கள், பாசத்திற்குரியவர்களாகவும், கீழ்படியும் தன்மை கொண்டவர்களாகவும், எப்போதும் மகிழ்ச்சிக்குரியவர்களாகவும் இருப்பர். சம்பிரதாயங்களின் மீது நம்பிக்கை கொண்டவராக இருப்பதால், நீங்கள் மூடநம்பிக்கை கொண்டவர் என பிறர் எண்ணுவர். மிகவும் எச்சரிக்கை உணர்வுடன் இருப்பதுடன், பழமைவாதியாகவும் இருப்பீர்கள். அதே நேரத்தில், நீங்கள் தொழிலில் வெற்றிகரமானவராக இருப்பீர்கள். சிறந்த வழக்கறிஞராகவோ, ராஜ்ய பிரதிநிதியாகவோ அல்லது நடிகராகவோ இருப்பீர்கள்.



## ட்ராகன் (1916, 1928, 1940, 1952, 1964, 1976, 1988)

முழுமையான பலமும், ஆர்வமும் கொண்ட டிராகன் ராசிக்காரர்கள், புகழ் பெற்றவர்களாக இருப்பார்கள். வாழும் காலத்தில் அவர்கள் அசட்டுத்தனமான துணிச்சலால் புகழ்பெற்றாலும் கூட, அதிகம் பேசப்படும் நபராக இருப்பர். நீங்கள் மிகவும் புத்திசாலி, நேர்த்தியானவர், போற்றுதலுக்கு உரியவர். ஆனால், இத்தகைய குணங்களால் நீங்கள், பிறருக்கு அளவுக்கு அதிகமான அளவில் தேவைப் படுப வராக இருப்பீர்கள். நீங்கள் கலைஞராகவோ, மத போதகராகவோ அல்லது அரசியல் வாதியாக வோ இருப்பதற்கு பொருத்தமானவர். (டிராகன் ராசிக்காரர்களில் சிலர்: லூயிசா மே அல்காட், சூசன்பி, அந்தோனி, ஜோன் ஆஃப் ஆர்க், பியர் பக், சிக்மண்ட் பிராய்டு, தியோடோர் சியஸ் கெய்ஸல், ஜான் லென்னன், ஃபுளோரன்ஸ் நைட்டிங்கேல், பாட் ஷிரோடெர், மா வெஸ்ட்)



## பாம்பு (1917, 1929, 1941, 1965, 1977, 1989)

நீங்கள் விவேகமும், வசீகரமும், காதல் உணர்வும் கொண்டவர். ஆழ்ந்து சிந்திக்கும் திறன் கொண்ட உங்களை, உள்ளுணர்வு வலிமையாக வழிநடத்தி செல்லும். காரியங்களை தள்ளிப்போடும் பழக்கத்தையும், பணம் செலவு செய்வதில் கஞ்சத்தனம் காட்டுவதையும் நீங்கள் தவிர்க்க வேண்டும். வாழ்க்கை பற்றிய உங்களின் நகைச்சுவை உணர்வை தொடர்ந்து பின்பற்றலாம். பாம்பு ராசிக்காரர்கள், ஆசிரியராகவோ, தத்துவஞானியாகவே, எழுத்தாளராகவோ, மனநல நிபுணராவோ, ஜோதிடராக இருப்பர். (பாம்பு ராசிக்காரர்களில் சிலர்: கிளாரா பார்டன், லிஸ் கிளாய்போர்ன், சார்லஸ் டார்வின், மேரி பேக்கர் எட்டி, எலிசபெத் 1, ஃபான்னி ஃபார்மர், அன்னி ஃபிராங், மகாத்மா காந்தி, எலென் குட்மேன், கரோலி கிங், மார்ட்டின் லூதர் கிங், ஆப்ரஹாம் லிங்கன், எட்கர் அலென் போயி)



## குதிரை (1918, 1930, 1942, 1954, 1966, 1978, 1990)

கடினமாக வேலை செய்யும் உங்களின் திறன் வியக்கத்தக்க வகையில் இருக்கிறது. நீங்கள் சுய மாக செயல்படக்கூடியவர். புத்திக்கூர்மையும், நட்புணர்வும் கொண்ட நீங்கள், தலைக்கனம் பிடித்த வராக இருப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிப்பீர்கள். உங்கள் ராசிப்படி, நீங்கள் வெற்றிகரமான சாகசக் காரராகவோ, விஞ்ஞானியாகவோ, கவிஞராகவோ அல்லது அரசியல்வாதியாகவோ இருப்பீர்கள். (குதிரை ராசிக்காரர்களில் சிலர்: லூயிசா மே ஆல்காட், சோபின், டேவி குரோக்கெட், எல்லா ஃபிட்ஸ்ஜெரால்டு, அரிதா ஃபிராங்ளின், சந்த்ரா டே ஒ கோன்னோர், ரெம்பிராண்ட், டெடி ரூஸ்வெல்ட்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆடு (1919, 1931, 1943, 1955, 1967, 1979, 1991)

சில நபர்களுடன் சேர்ந்து எப்பொழுதும் தவறான வழிகளில் செல்வதை தவிர்த்து பார்த்தால், நீங்கள் வசீகரமானவராக இருக்க முடியும். நீங்கள் நளினமான அழகும், கலை உணர்வும் கொண்டவர். ஆனால், சில விடயங்களில் முதலில் புகார் கூறுபவராக இருப்பீர்கள். எதிலும் குற்றம் கண்டுபிடிப்பதையும், கவலைப்படுவதையும் ஒதுக்கி தள்ளிவிட்டு, பொருள் சார்ந்த வசதிகளை குறைந்தளவில் சார்ந்திருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். நீங்கள், நடிகராகவோ, தோட்டக்காரராகவோ அல்லது கடற்கரையை சுத்தம் செய்பவராகவோ இருப்பீர்கள். (ஆடு ராசிக்காரர்கள் சிலர்: ரேச்சல் கார்சன், மைக்கேல் ஏஞ்சலோ, மார்க் டுவைன், ரூடால்ப் வேலன்டினோ, பார்பரா வால்டர்ஸ், ஓர்வில்லி ரைட்).



## குரங்கு (1920, 1932, 1944, 1956, 1980, 1992)

நீங்கள் மிகவும் புத்திக்கூர்மையும், சாதுர்யமும் மிக்கவராக இருப்பீர்கள். ஏனெனில், அசாதரணமான செயல்பாடுகள் மற்றும் காந்தம் போன்று கவர்ந்திழுக்கும் ஆற்றல் ஆகியவற்றால், பிறரால் அதிகம் விரும்பப்படுவீர்கள். அதே நேரத்தில், சந்தர்ப்பவாதியாக இருப்பதையும், பிறர் மீது அவநம்பிக்கை கொள்வதையும் எதிர்ப்பீர்கள். நீங்கள் எந்த துறையில் முயற்சி செய்தாலும், அதில் வெற்றி பெறுவீர்கள். (குரங்கு ராசிக்காரர்களில் சிலர்: ஜூலியஸ் சீசர், பெட்டி டேவிஸ், அன்னி ஒக்லே, எலியானோர் ரூஸ்வெல்ட், பெட்சி ரோஸ், டயானா ரோஸ், எலிசபெத் டெய்லர், ஹாரி ட்ருமென், லியானார்டோ டா வின்சி, அலைஸ் வாக்கர்)



## சேவல் (1921, 1933, 1945, 1957, 1969, 981, 1993)

சேவல் ராசிக்காரர்கள், கடினமான உழைப்பாளியாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் இருப்பர். முடிவுகளை மேற்கொள்வதில் உறுதியாக இருப்பதுடன், மனதில் தோன்றியதை பேசும் குணம் கொண்டவர்கள். அதனால், நீங்கள் மற்றவர்களால் புகழப்படுவீர்கள். நீங்கள் கனவுலகில் சஞ்சரிப்பவராகவும், பகட்டான ஆடைகளை அணிபவராகவும், ஊதாரித்தனமாக செலவு செய்யக்கூடியவராகவும் இருப்பீர்கள். இந்த ராசியில் பிறந்தவர்கள், உணவுவிடுதி உரிமையாளராகவோ, பதிப்பாளராகவோ, படை வீரராகவோ அல்லது உலகம் சுற்றுபவராகவோ இருப்பர். (சேவல் ராசிக்காரர்கள் சிலர்: விர்ஜீனியா அப்கர், தி கிரேட் கேத்தரீன், அமலியா இயர்ஹார்ட், ருட்யார்டு கிப்ளிங், குரூச்சோ மார்க்ஸ், பீட்டர் உஸ்திநோவ்)



## நாய் (1910, 1922, 1934, 1946, 1958,1970, 1982)

நாய் உங்களை ஒருபோதும் கைவிடாது. இந்த ராசியின் கீழ் பிறந்தவர்கள், நேர்மையானவர்களாகவும், நேசம் காட்டுபவர்களிடம் உண்மையானவர்களாகவும் இருப்பர். இடைவிடாத கவலையால் துரத்தப்படுபவராகவும், நறுக்கு தெரித்தால் போல் பேசுபவராகவும், குற்றம் கண்டுபிடிப்பவராகவும் இருப்பீர்கள். நீங்கள் தலைசிறந்த வர்த்தகராகவோ, ஆசிரியராகவோ அல்லது ரகசிய ஏஜென்டாகவோ இருப்பீர்கள்.

(நாய் ராசிக்காரர்களில் சிலர்: செர், வின்ஸ்டன் சர்ச்சில், பில் கிளிண்டன், டோரதியா டிக்ஸ், பெஞ்சமின் பிராங்கிளின், ஜார்ஜ் ஜெர்ஸ்வின், ஜேன் குட்டால், ஹெர்பெர்ட் ஹூவர், ஷிர்லி மெக்லைன், கோல்டா மெயிர், லூசி மாத் மான்ட்கோமெரி, சாக்ரடீஸ்)



## ஆண் பன்றி (1911, 1923, 1935, 1947 1959, 1971, 1983)

பிறருடைய சுக, துக்கங்களை பகிர்ந்துகொள்ளும் உற்ற தோழனாக(தோழியாக) இருப்பீர்கள். கடினமான இலக்குகளை நிர்ணயித்து கொண்டு, அதை அடைவதில் அறிவுஜீவியாக திகழ்வீர்கள். நேர்மையானவராகவும், சகிப்புத்தன்மை கொண்டவராகவும், உண்மையானவராகவும் இருப்பீர்கள். அதே நேரத்தில், பிறரும் அது போன்று இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பீர்கள். நம்ப முடியாத அளவிற்கு எளிமையானவராக இருப்பீர்கள். ஆடம்பர பொருட்களின் மீதான தாகம், உங்களின் வீழ்ச்சிக்கு வழி வகுப்பதாக இருக்கும். ஆண் பன்றி ராசிக்கு உரியவர்கள், கலைத்துறையில் சிறந்து விளங்குவர் அல்லது வழக்கறிஞராக இருக்க வாய்ப்புள்ளது. (ஆண் பன்றி ராசிக்காரர்களில் சிலர்: லூசிலி பால், எர்னெஸ்ட் ஹெம்மிங்வே, மஹாலியா ஜேக்சன், ஆல்பர்ட் சுவிட்சர், எலிசபெத் காடி ஸ்டான்டோன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக கேள்வி– பதில்கள்

**ஆன்மீகத்தில் ஈடுபாடுடைய அனைவருக்கும் அதில் பல வினாக்களும், சந்தேகங்களும் தோன்றுவது இயல்பான ஒன்று. சோதிட கேசரி வாசகர்களுக்கு ஆன்மீகம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கிறார் சுவாமி கமலாத்மானந்தர்.**

**உங்களது கேள்விகளை *jothidakesari@gmail.com*க்கு அனுப்பி வைக்கலாம்.**

**கேள்வி: தெய்வ மந்திரங்களைக் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட வேளையில்தான் உச்சரிக்க வேண்டுமா? எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும் உச்சரித்தால் பலன் கிடைக்குமா?**



பதில்: பள்ளியில் படிக்க ஆரம்பிக்கும் போது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் படிப்பது என்பது நியமம், படித்து தேறிய பிறகு படிப்புக்கு இடமும் நேரமும் இல்லை. மந்திர ஜபத்திற்கும் அப்படித்தான். ''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்பது முதிர்ந்த நிலை.

குறிப்பிட்ட நேரத்தில் ஜபம் செய்வதுடன் கூட, மனமும் நேரமும் வாய்க்கும்போதெல்லாம் ஜபத்தில் ஈடுபடுவது நல்ல பழக்கங்களில் தலையாயது.

பலவிதச் சிந்தனைகளில் அலைக்கழிக்கப்படும் மனதை, அவ்வப்போது இழுத்து வந்து, ஜபத்தில் ஈடுபடுத்துவது 'அப்பியாச யோகம்' எனப்படும்.

ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்கள் அப்பியாச யோகத்தை அவசியம் கைக் கொள்ள வேண்டும்.

**கேள்வி: காலையில் எழுந்ததும் கைகளைப் பார்ப்பது என்ற ஒரு வழக்கம் இந்துக்களிடையே இருக்கிறது, இதற்கு என்ன காரணம்?**

பதில்: கையின் உச்சியில் கலைமகள், உள்ளங்கையில் திருமகள், கையின் அடிப்பகுதியில் கோவிந்தன் கோயில் கொண்டிருப்பதாக ஐதீகம்.

**கேள்வி: சாதாரண மனிதர்கள் மிருக இயல்புகளிலிருந்து விடுபடுவதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள்?**

பதில்: அர்ஜுனன் மகாபாரதப் போரில், ஸ்ரீகிருஷ்ணரின் துணையுடன் துரியோதனன் முதலானவர்களை வென்றான்.

அர்ஜுனன் ஜீவாத்மா, ஸ்ரீகிருஷ்ணர் பரமாத்மா, காமம், கோபம் போன்ற மிருக இயல்புகளே துரியோதனன் முதலானவர்கள்.

எனவே, இறைவன் துணையுடன் தான், நாம் மிருக இயல்புகளை வெல்ல முடியும், அக்ஞானம் நீங்கப் பெற்ற வாழ்க்கை வாழ முடியும்.

**கேள்வி: 'குரு' என்று ஒருவர் தேவைதானா?**

பதில்: 'சுகிருதம்' என்ற நல்வினைகளின் பயனாகவே சத்குரு கிடைப்பார் , ''குருவருளின்றித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் இல்லை'' என்பது ஆன்மீகம் கூறும் ஞானவாக்கியம்.

''எனக்கு வாழ்வளித்த என் தந்தை பிலிப்ஸைவிட, என் குரு அரிஸ்டாடிலுக்கு நான் அதிகமாகக் கடன்பட்டிருக்கிறேன்'' என்று அலெக்சாண்டர் கூறினார்.

**கேள்வி: குரு இல்லாமல் ஒருவர் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற முடியாதா?**

பதில்: உங்கள் கேள்வி, ''டாக்டர் இல்லாமல் என் நோயை நானே குணப்படுத்திக் கொள்ள முடியாதா?'' என்பது போல் இருக்கிறது.

குரு மூலம் பயிலப் பெறாத வித்தை, பண்படாத நிலத்தில் விளையும் பயிர் போன்றது.

குருபத்தி - ஆச்சாரிய நிஷ்டை - ஆத்ம சாதகர்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய இடம் பெறுகிறது.

''தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது'' என்பது பழமொழி, கடவுளைக் காட்டும் தகுதி குருநாதனுக்கு மட்டுமே உண்டு. ''குருவே சிவம் எனக் கூறினர் நந்தி'' என்பது திருமந்திரம்.

ஆச்சாரியனை வழி திறக்கச் சொல்லி - ஆச்சாரியனைப் பற்றிக்கொண்ட - ஆச்சாரியனை முன்னிட்டுக் கொண்டு - பகவானைப் பற்ற வேண்டும், பகவானை அடைய வேண்டும் என்பது வைணவ சமயத்தின் உறுதியான கருத்தாகும்.

**கேள்வி: நாம் இறைவனை வீட்டில் இருந்து வணங்குவது, கோயிலுக்குச் சென்று வணங்குவது - இவற்றில் சிறந்தது எது?**

பதில்: 'வலக்கண், இடக்கண் ஆகிய இரண்டு கண்களில் எது சிறந்தது?' என்பது போல் உங்கள் கேள்வி





இருக்கிறது.

நாம் இறைவனை வீட்டில் இருந்து வணங்குவது, கோயிலுக்குச் சென்று வணங்குவது ஆகிய இரண்டும் சிறந்தவைதான். இவை ஒன்றுக்கு ஒன்று முரண்பாடில்லை.

வீட்டில் பூஜை செய்யாதவர்கள் குறைந்த பட்சம் கோயில் பூஜைக்காவது போக வேண்டும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஆன்றோர் வாக்கு.

ஜபத்திலும் தியானத்திலும் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் சில சமயங்களில், மனம் தனிமையில் இருப்பதை விரும்பும். அது போன்ற சமயங்களில் கோயிலுக்குப் போவதைக்கூட மனம் ஒர இடைஞ்சலாகக் கருதும்; ஆனால் இது வேறு விஷயம்.

பொதுவாகப் பலரும் கோயிலுக்குப் போகாததற்கு, தமோகுணம்தான் (சோம்பல்தான்) காரணமாக இருக்கும்.

சோம்பல் காரணமாகக் கோயிலுக்குப் போகாத சிலர், ''கடவுள் சிந்தனை மனதில் இருந்தால் போதாதா? கோயிலுக்குப் போக வேண்டுமா?'' என்று கேட்பார்கள்; அல்லது ''கடவுள் நினைவு எப்போதும் (!) எனக்கு இருப்பதால், நான் கோயிலுக்குப் போவதில்லை'' என்று சொல்வார்கள்; அல்லது ''அதற்கெல்லாம் எனக்கு எங்கே நேரம்?'' என்பார்கள், மனமிருந்தால் நிச்சயம் மார்க்கமும் உண்டு.

தனிமையிலும் வீட்டிலும் சிரத்தையுடன் ஜபம் - தியானம் ஆகியவற்றில் ஆழ்ந்து ஈடுபடுவர்கள், கோயிலுக்குச் செல்பவர்களாகவும் அதன் மகத்துவத்தை உணர்ந்தவர்களாகவும் தான் இருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற மகான்கள் பலரும், அனுபூதிக்குப் பிறகும் கோயிலுக்குச் சென்று வழிபடுபவர்களாகவே வாழ்நாள் முழுவதும் இருந்திருக்கிறார்கள்.

கோயிலுக்குச் செல்லாத நிலையிலும் தியானபரராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தியானத்தில் ஆழ்ந்தவராக), ஒருவர் தன் மனதை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருக்கும் மனப்பக்குவம் கொண்டவராகவும் இருக்க முடியும் என்ற உண்மையும் உண்டு; அதை நான் மறுக்கவுமில்லை, ஆனால் இத்தகையவர்களின் நிலை பொதுவிதி அல்ல. இவர்கள் விதிவிலக்கு உதாரணமே தவிர, பொதுவிதிக்கு உதாரணம் அல்ல.



**கேள்வி: இறைவன் ஆத்மாவில் இருக்கிறான் என்றால் கோயில்கள் எதற்கு? மானசீகமாக இறைவனை வணங்கினால் போதாதா?**

பதில்: இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறான் என்று அனுபூதியில் கண்டவர்கள்தான், இறைவனைக் கோயில்களிலும் வழிபடும் முறையை ஏற்படுத்தினார்கள். 'இறைவன் எங்கும் உளன்' என்று உணராதவர்கள்தான் கோயில் வழிபாட்டைக் குறை கூறுகிறார்கள்.

'மானசீகமாக இறைவனை வழிபடுகிறேன்' என்று சொல்பவர்கள், மானசீகமாகச் சாப்பிடுகிறார்களா?

உள்ளே தியானம் செய்வதுடன் வெளிப்படையாகவும் வழிபடுவதுதான் நல்லது. உள்ளே இருக்கும் இறைவன் வெளியிலும் இல்லையா?

**கேள்வி: 'திருவிளக்கிடல்' உணர்த்தும் கருத்து யாது?**

பதில்: நமது உடலைக் கோயிலாகப் பாவிக்க வேண்டும். அந்த ஆலயத்தில் மனம் என்ற அகல் விளக்கில் அறிவாகிய நெய்யை நிறைக்க வேண்டும்; உயிர் எனப்படும் திரியைக் கொண்டு பிராணன் என்ற காற்றை நிறுத்தி, ஆணவம் என்ற இருள் நீங்க, 'பிரம்மஞானம்' என்னும் தூண்டா விளக்கை ஏற்றுவதாகப் பாவித்துத் திருவிளக்கிட வேண்டும்.

''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந் நெறிஞானமாகும்'' என்ற அப்பர் வாக்கைச் சிந்திக்க.



**கேள்வி: ராஜயோகத்தில் சுழுமுனை நாடி என்ற சொல் வருகிறது, 'நாடி' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?**

பதில்: ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு ஆற்றலை எடுத்துச் செல்வது என்பது, 'நாடி' என்ற சொல்லின் பொருள்

**கேள்வி: தேவர்கள், சிவம், கௌரி, லலிதா ஆகிய சொற்களுக்கு என்ன பொருள்?**

பதில் : தேவர்கள் என்ற சொல்லுக்கு 'ஒளி பொருந்தியவர்கள்' என்று பொருள்.

சிவம் என்ற சொல்லுக்கு 'நம்மை, மங்களம், அன்பு, இன்பம், பொது' போன்ற பல பொருள்கள் உண்டு.

கௌரி என்றால் 'தங்கமயமாகப் பிரகாசிப்பவள்' என்பது பொருள்.

லலிதா என்பதற்கு 'அழகுடையவள், மிகவும் எளியவள்' என்று பொருள்.

**கேள்வி: ஒரு மதத்தைச் சேர்ந்தவர் இன்னொரு மதத்தைச் சேர்ந்தவர் மீது பகைமை பாராட்டுகிறார், ஒரு ஜாதிக்காரர் இன்னொரு ஜாதிக்காரர் மீது பகைமை பாராட்டுகிறார். இதற்கெல்லாம் என்ன காரணம்?**

பதில்: வலிமையற்ற உடலை நோய் தாக்குவது போல், அன்பு இல்லாத சமுதாயத்தைப் போர், பிணக்கு, பூசல், பகை, பொறாமை, கோபம் போன்றவை தாக்குகின்றன. அன்பு இல்லாத இதயங்களைப் பாலை வனங்கள், அல்லது விஷக்கிருமிகள் என்றே சொல்ல வேண்டும்.

**- சுவாமி கமலாத்மானந்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவிலுக்குச் செல்லும் போது....

கோவிலுக்குச் செல்லும்போது வெறும் கையுடன் செல்லக்கூடாது என்பதற்கேற்ப சிறிது கற்பூரமாவது கொண்டு செல்ல வேண்டும்.

அல்லது தம் சக்திக்கு ஏற்ப பணத்தை உண்டி யலில் போடலாம். அப்படி உண்டியலில் போடும் பணம் கோவில் நற்காரியங் களுக்குப் பயன்படும்.

பக்தர்களின் அபிலாசைகள் பூர்த்தியடைய உதவுவதோடு, கோவில் உற்சவங்கள் அனைத்திற்கும் பயன்படும்.

# வழிபாட்டில் தேங்காய்



1. தேங்காய் - மும்மலம், நீர் - உயிர், தேங்காயின் மட்டை, நார் ஓட்டுப்பகுதிகள் என்று மூன் றும் மும்மலங்கள் ஆகும்.

இவை படிப்படியே களை யப்பட்டவுடன் அகங்கார ஓடும் நொறுங்க உடனே வெண்மை, தூய்மை பிர காசிக்கிறது.

நீர் இறைவன் திருமுன் அர்ப்பணிக் கப்படுகிறதும் இது ஒரு கருத்து.

2. தேங்காய் ஓடு - அகங்காரம், தேங்காய் பருப்பு - ஞான உணர்வு, இறைவனது திருக்காட்சியை உயிர் பெறாதபடி இடையில் இரும்புத்திரை போன்று அகங் காரமே இருக்கிறது. அகங்கார ஓடு உடை ந்தால் உயிர் ஞான உணர்வை பெற்று இறைவனைத் தரிசிக் கிறது.

3. தேங்காய் - இதயம், மூன்றாம் கண் - ஞானக்கண், வெண்மை - தத்துவ குணம்.

# விரதங்களும் அவற்றின் பயன்களும்



**ஞாயிற்றுக்கிழமை :**

புத்திர தோஷம், புத்திர சோகம் நீங்கும், சூரியனுடைய அருள் கிடைக்கும். அதிபதி சிவனுக்கு பூஜை செய்து விரதம் இருக்க வேண்டும்.

**திங்கட்கிழமை :**

சிவபெருமான் அருளைப் பெற கடைப்பிடிக்கும் விரதமாகும். ஜாதகத்தில் சந்திரதோஷம் உள்ளவர்கள் விரதம் இருந்தால் சந்திரதோஷ பரிகாரம் கிடைக்கும்.

**செவ்வாய்க்கிழமை :**

அம்பாளின் அருளும் திருமுருகனின் அருளும் கிடைக்கிறது. செவ்வாய் தோஷம் நீங்குகிறது. இரத்த சம்பந்தமான நோய்கள் நீங்கி மனதில் தைரியமும், வீரமும் ஏற்படுகிறது.

**புதன்கிழமை :**

மகாவிஷ்ணுவின் அருள் கிடைக்கும். தனம், கல்வி, ஞானம் பெருகும்.

**வியாழக்கிழமை :**

ராகவேந்திரர், குருபகவான் அருள் கிடைக்கும்.

**வெள்ளிக்கிழமை :**

செல்வச் செழிப்பு, மாங்கல்ய பாக்கியம் குடும்பப் பகைகள் தீர்தல், வம்பு வழக்குகள் பாதிக்காது இருத்தல் ஆகிய நன்மைகள் இருக்கும்.

**சனிக்கிழமை :**

திருப்பதி வெங்கடாஜலபதி, சனீஸ்வரர் ஆகிய தெய்வங்களின் அருள் கிடைக்கும். துன்பங்கள் தீரும். வறுமைகள் நீங்கும், தொழில் சிறப்புப் பெறும்.

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு - 14 கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையாள மாந்திரீக சக்தி






சாஸ்திரம் இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் தேசபந்து பேராசிரியர் பி.கே.சாமி அவர்கள். பிரிந்த காதல் ஒன்று சேர, பிரந்து சென்றவரை அழைப்பித்து எடுக்க, இருவருக்கும் திருமணம் நடைபெறாதென முடிவெடுத்த திருமணம் நடைபெறவும், ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என முடிவெடுத்து வாழ, திடீர் வியாபார விருத்தி அடைய, தீராத நோய்களை தீர்த்துக் கொள்ள, வீடு வளவு பாதுகாப்பு செய்ய, சூனியங்களை அகற்ற, செவ்வாய் தோசம் நிவர்த்தி பெற, அதி விசேடமாக வெளிநாட்டவர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் பிரச்சினை தீர 3 நாளில் அவ்வவ் ஊரில் எமது அங்குள்ள நிர்வாகம் மூலமாக தங்களுக்கு பார்சல் உடன் அனுப்பப்படும். அத்துடன் பிறந்த திகதி, மாதம், இவைகளை அறிவித்து ரூ.1700 ஐ அனுப்பி வைத்தால் 30 நிமிடத்தில் உங்கள் ஆயள் ஜாதகத்தை கண்ணாடிபோல தெட்டத் தெளிவாக கணித்து அனுப்பி வைப்போம்.

பரம்பரை பரம்பரையாக 30 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்.

**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 மைல் க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**கொழும்பு அன்பரின் மடல். "39 வயதில் அதிசயத் திருமணம்"**

" பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத் தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடத்திச் செய்தமைக்கு கோடானு கோடி நன்றிகள்."

**ஹட்டன் அன்பரின் மடல். "தீராதத் தலைவலி தீர்ந்து விட்டது"**

" மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**யாழ்ப்பாண அன்பரின் மடல். "அதிசய அக்னி குண்டல பூஜை"**

" மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னி குண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**என்னிடமே வந்து சேர்ந்தாள்" லண்டன் அன்பரின் மடல். "எண்ணியவள்**

" பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் சேர வைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்."

**கனடா அன்பரின் மடல். "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

" மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு ஆச்சிரயமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல். "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா."

**குருநாகல் வாசகர் ஆர்.பிரியாவின் மடல். பேரன்பும் பெருமைக்குமுரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்!"**

" பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். வீரகேசரியில் உங்களுடைய அறபுத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழில் நடப்பது, நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறீர்கள். என் உள்ள நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைத்த உங்களுக்கு எமது கோடான கோடி நன்றிகள்"

**குருணாகல் அன்பரின் மடல். "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

" தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சிரயப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**இத்தாலி அன்பரின் மடல். "சந்தேகத்தால் பிரிவுப்பட்ட காதல் வெற்றி"**

" வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்து உங்களால்தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**கொழும்பு அன்பரின் மடல். "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

" மதிப்பிற்குரிய சாமிக்கங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்படு வைத்ததற்கு நன்றி. உங்கள் சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல். "அதிசயிக்கதக்க முடி வளர்ச்சி"**

" அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**ஜெர்மன் அன்பரின் மடல். "மகனின் திக்குவாய் குணமாகியது"**

" அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகனை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்"

**பிரான்ஸ் அன்பரின் மடல். "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

" அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்ல முடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிராயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**பதுளை அன்பரின் மடல். "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

" அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப் பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்யாக இருப்போம்."

**கொழும்பு தினமுரசு வாசகரின் அன்பு மடல். பேராசிரியர் டாக்டர் ஐயா அவர்களுக்கு!**

" எனக்கு வயது 52. இதுவரையில் நான் சந்தித்த எந்த ஜோதிடரும் கூறாத முறையில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற ரீதியில் மழுப்பாமல் திகதி , நேரம் குறித்து சரியான முறையில் தெள்ளத் தெளிவாகப் பலன் கூறுகின்றீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்."

**"அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப் போவது இவையனைத்தும், ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான, மகிழ்ச்சியான, குபேர வாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.**



**அனுமதி இலவசம் அனைவரும் வருக**

மாத கடைசி தினத்தன்று நடைபெறும் அக்னி குண்டல மகாயாக பூஜையில் வந்து கலந்து கொண்டு அவர்களின் குறை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.
நேரம்:- காலை 10.00 தொடக்கம் பகல் 2.00வரை.

**Deshabandhu. Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா**
**Sri durgadevi manthirika utchada peedam.**
**No-162 KOTAHENA STREET MAYFIELD ROAD COLOMOBO-13**
**01124706150, 01123463,-0112342464, Fax. 0094-11-2344831**
நுவரெலியாவில் எண் நிறுவமன் துர்க்காதேவி ஆலயம்,
இல 33, கண்டி வீதி, நுவரெலியா.
0522222508, 0773237193,0773237193
**Web:- www.drpksamy.com Email:- drpksamy@sltnet.lk**
**SMS Service 0773 237133**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜவுளி வியாபாரிகளுக்கு இலாபகரமான ஓர் இனிய நற்செய்தி

பட்டு, பேன்சி சேலை ரகங்கள்
மற்றும் அனைத்து
ரெடிமேட் ரகங்களுக்கும்
மொத்த விற்பனைப் பிரிவு
எங்களது சென்னை மற்றும்
திருச்சி கிளைகளில்
தொடங்கியுள்ளோம் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறோம்.

இந்த அரிய வாய்ப்பின் மூலம்
மொத்த விலைகளில் ஜவுளிகளை
கொள்முதல் செய்து
பயன் பெற உங்களை
அன்புடன் அழைக்கிறோம்.




ISO 9001:2000

அனைத்து நகரங்களுக்கும் மொத்தமாகவும், தனித்தனிப் பிரிவுகளாகவும்
Franchisee Dealership வழங்குகிறோம். விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.
மேலும் விவரங்களுக்கு த.பெ.எண் 27, அவினாசி, கோயமுத்தூர்- 641 654. தமிழ்நாடு. இந்தியா.

# தி சென்னை சில்க்ஸ்
இந்தியா

23, உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை- 17. தமிழ்நாடு. போன்: +91 44 24310888
10, W.B. ரோடு, திருச்சி - 2. தமிழ்நாடு. போன்: +91 431 2708888
www.thechennaisilks.com, e-mail: cwhedp@thechennaisilks.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Franchisee ஷோரூம்கள் : பாரீஸ் (பிரான்ஸ்), கருநாகப்பள்ளி (கேரளா)